# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-19 Issue-4 ஏப்ரல்-2026 ஷவ்வால்-1447




## ஈரானின் போர்த் திட்டம்
## அமெரிக்கா-இஸ்ரேல் அதிர்ச்சி...




## இந்தியாவில் நடக்கும் வெறுப்புப் பிரச்சாரங்கள்

கள ஆய்வு!



ஏப்ரல்; கூரியூர் ஜின்னா ஷஹீத் மாதம்

# வைகறை வெளிச்சம்

ஏப்ரல்-2026 | ஷவ்வால்-1447

வரலாற்றுத் தடத்தில்
இஸ்லாமியப் பார்வையில்
நிகழ்வுகளின் உண்மையான மறுபக்கம்
படியுங்கள் பரப்புங்கள்
பாதுகாத்து வையுங்கள்

- தனிஇதழ் - ரூ. 40
- ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
- வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா செலுத்துங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps

மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!




நூல் அரங்கம் - 13

நேருவிடம் அரசியல் பழகுங்கள் மோடி! - 18

அதிமுக Vs பிஜேபி - 22

வந்தேமாதரப் பாடல் பற்றி 1938-ம் ஆண்டு தமிழக சட்ட மன்றத்தில் நடைபெற்ற விவாதம் - 33

ஏப்ரல்; கூரியூர் ஜின்னா ஷஹீத் மாதம் - 34

ஈரானில் ஒவ்வொரு ஷியாவும், இஹ்வானாக மாறினர்! - 36

துணிச்சலற்ற முதுகெலும்பற்ற நமது அரசாங்கத்தை நினைத்து வெட்கப்படுகிறேன்! - 46

மருத்துவம் - 53

மிரட்டும் முதுமை - 55

பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 57

சிலுவைப் போர் 2.0 - 61

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only

# ஈரானின் போர்த் திட்டம் அமெரிக்கா-இஸ்ரேல் அதிர்ச்சி...

**ஆமாம், பிப்ரவரி 28ஆம் நாள் திடுதிப்பென அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான்மீது தாக்குதலை நடத்தின.**

எடுத்த எடுப்பிலேயே ஈரானின் உச்சபட்ச தலைவர் ஆயத்துல்லாஹ் செய்யீத் அலி காமினி அவர்கள் கொல்லப்பட்டார்கள். அவரோடு அவருடைய குடும்பத்தவர்களும் ஷஹீதாக்கப் பட்டார்கள். அத்தோடு பல முக்கிய இராணுவ அதிகாரிகளும் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

எல்லாம் முடிந்தது. இனி ஈரானில் ஆட்சி மாற்றம்தான் என வெற்றி முரசு கொட்டினார்கள், அமெரிக்க, இஸ்ரேலியப் படுகொலையாளர்கள்.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததுபோல் எதுவும் நடக்கவில்லை. ஈரான் நொடியும் தாமதிக்காமல் தன் தாக்குதல்களை தொடங்கியது.

ஈரானின் இஸ்லாமிய அரசு அடியோடு ஒழிய வேண்டும் என்பதே ஷைத்தான்கள் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் நோக்கம். அதற்கு அலி காமினி அவர்களின் கொலை வழி வகுக்கும் என எதிர்பார்த்த எத்தர்கள், ஏமாந்தார்கள்.

ஈரான் இஸ்லாமிய அரசை தக்க வைத்துக் கொண்டது. சற்றும் தளராமல் தனது தாக்குதல்களை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தாக்குதல்கள் தளர்ந்திடவில்லை என்பது மட்டுமல்ல, நாளுக்கு நாள் தாக்குதல்களின் வேகம் அதிகரித்தன. வேகம் மட்டுமல்ல விவேகமும் அதிகரித்தது.

மட்டுமல்ல, பயன்படுத்தும் ஏவுகளின் தரமும் நாளுக்கு நாள் அதிகரித்தன.

ஈரானின் இந்த தாக்குதல்கள், அதில் பயன்படுத்தும் ஏவுகணைகள் இவையெல்லாம், பல வெற்றிகளைக் குவித்து வருகின்றன. 182 பள்ளிச் சிறுவர்களை எடுத்த எடுப்பில் கொலை செய்ததைத் தவிர சாதித்தது எதுவுமில்லை.

படுகொலை செய்தே பழகிப்போன அமெரிக்காவும் இஸ்ரேலும் திணறி திக்கு முக்காடுகின்றன.



உலகம், ஈரானின் போர்த்திட்டத்தின் நுண்மான் நுழைபுலத்தைப் பார்த்து ஆச்சர்யப் படுகின்றன.

நிச்சயமாக இந்தப் போர்திட்டங்கள் இன்னும் குறிப்பாகச் சொன்னால் இந்தத் தாக்குதல் திட்டங்கள் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற நிலையில் வகுக்கப்பட்டவை அல்ல. மாறாக, நீண்ட நாள்களுக்கு முன்னரே வகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே உலக நோக்கர்களின் கணிப்பு.

உண்மைதான் ஈரானின் போர் வியூகங்கள் இன்று நேற்று வகுக்கப்பட்டவை அல்ல. மாறாக, அவை 21 ஆண்டுகளுக்கு முன் வகுக்கப்பட்டவை.

## 21 ஆண்டுகளுக்கு முன்

ஏப்ரல் 2003ஆம் ஆண்டு ஈரானின் ஆட்சியாளர் சதாம் ஹுசைன் அவர்கள் வீழ்த்தப்பட்டார்கள். இது உலகின் இராணுவ நகர்வுகளைக் கூர்ந்து கவனித்து வருபவர்களிடையே ஓர் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது. காரணம், அவர்கள் அவ்வளவு எளிதாகச் சதாம் ஹுசைன் வீழ்வார் என எதிர்பார்க்கவில்லை. சதாம் ஹுசைனிடம் 20,000 சிறப்புப் பயிற்சி பெற்ற படை வீரர்கள் இருந்தார்கள்.

200க்கும் மேற்பட்ட நவீன போர் விமானங்கள் இருந்தன.

இவை ஈராக்குக்குள் புகுந்த அமெரிக்கப் படைகளைப் பிணமாக்கப் போதுமானவை. எனினும் சதாம் ஹுசைன் வீழ்ந்தார்.

இதற்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும், ஈரானுடைய அப்போதைய படைத் தளபதி முஹம்மது அலி ஜாஃபரிக்கு ஒரே காரணந்தான் தெரிந்தது.

ஈரானின் இஸ்லாமியப் புரட்சிப் பாதுகாப்புப் படையின் தளபதி முஹம்மது அலி ஜாஃபரின் பார்வையில் சதாம் ஹுசைனை Command என்று சொல்லக்கூடிய அனைத்து இராணுவ அதிகாரத்தையும் தன் கையில் வைத்திருந்ததுதான்.

இதனை முஹம்மது அலி ஜாஃபரின் சொற்களால் சொன்னால் : "Single Central Command" ஒற்றை கட்டுப்பாடு, (என்பதுதான்)

மொத்த இராணுவமும் ஒரே கட்டுப்பாட்டின்கீழ் இருந்ததால்தான் அனைத்தும் ஒரேடியாக வீழ்ந்தது. ஏனெனில் அந்த ஒற்றை கட்டுப்பாடு தலைவர் வீழ்ந்துபோனபின் அத்தனை படையும் வழிகாட்டுதலின்றி வீழ்ந்தன.

இதனை இனம் கண்ட முஹம்மது அலி ஜாஃபரி இப்படியொரு நிலைமை ஈரானுக்கு எந்த நிலையிலும் வந்துவிடக்கூடாது என உறுதியாக முடிவு செய்தார். அன்று சதாம் ஹுசைன் எதிர்கொண்ட எதிரியைத்தான் 1979 முதல் ஈரானும் எதிர்கொண்டு வருகின்றது. அந்த முடிவின் அடிப்படையில் ஓர் போர்த் திட்டத்தை வகுத்தார்.

ஈரானின் இராணுவத் தலைமையையும், அதிகாரத்தையும் ஒரே தலைமை கமாண்ட் - உத்தரவு (ஒரே மையம்) என்று வைத்திட வேண்டாம். அவற்றைப் பலவாக பிரித்து ஈரானின் மொத்த நிலப்பரப்பிலும் பரப்பிட வேண்டும் என முடிவு செய்தார்.

அந்த வகையில் ஈரானின் மொத்த இராணுவ பலத்தையும்-31 முப்பத்து ஒன்று எனப் பிரித்தார். இவற்றை 31 தன் நிறைவைப் பெற்ற இராணுவ மையங்கள் எனலாம்.

இவை ஒவ்வொன்றும் தனிப்பெரும் பலத்தைக் கொண்டவை. இந்த 31 மையங்களுக்கும் வான்படை பிரிவு, கப்பற் படை பிரிவு, ஏவுகணைப் பிரிவு, ஏவுகணை வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி பிரிவு என ஏற்படுத்தினார். இவை ஒவ்வொன்றுக்கும் உளவுப் பிரிவும் உண்டு.

இவற்றிற்கு இருக்கும் முக்கிய பணி ஏதேனும் ஓர் படைப்பிரிவின் தளபதி ஷஹீதாக்கப்பட்டால், அடுத்த படைப் பிரிவின் தளபதி தன் தாக்குதலை தாமதமின்றி தொடங்க வேண்டும், தொடர வேண்டும்.

தளபதியை இழந்த படைப்பிரிவுக்கு ஓர் தளபதி தலைமை ஏற்கும் வரை இந்தத் தாக்குதல் தொடர வேண்டும். இந்த தலைமை மீண்டும் இயங்கினால், அதற்காக தாக்குதலை தொடுத்த படைப்பிரிவு தாக்குதலை நிறுத்திக் கொள்ளலாம். அல்லது தனது தாக்குதலையும் தொடரலாம். அதனை போரின் கள நிலவரம் முடிவு செய்யும்.

இதைத்தான் ஈரான் (Co-ordinated Command



இமாம் ஆயத்துல்லாஹ் செய்யீத் அலி கொமைனி (ஷஹீத்)

Attack) என்கின்றது. அதாவது ஒருங்கிணைங்கப் பட்டத் தாக்குதல் எனக் கூறுகின்றது.

இனி, ஒவ்வொரு படைப்பிரிவிலும், ஒரு தளபதி. அவர் கொலை செய்யப்பட்டால், அடுத்து உடனேயே யார் பதவி ஏற்றிட வேண்டும் என்பது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு வரிசை படுத்தப்பட்டும் விட்டது. அதனால்தான் முக்கியத் தளபதி எனக் காட்டப்படும் தளபதி இறந்துவிட்டாலும், போர் வேகம் குன்றாமல் தொய்வின்றி தொடரும்.

## நபி வழிகாட்டுதல்

ஈரானின் இந்தத் திட்டம் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல் வழி அமைந்தது என்கின்றனர், இஸ்லாமியப் புரட்சிப் பாதுகாப்புப் படையில் அங்கம் வகிப்பவர்கள்.

## மூத்தா போரின்போது பெருமானார் (ஸல்) அவர்கள்

படையை அனுப்பும்போது இப்படி ஆலோசனை வழங்கினார்கள்

இந்தப் போர் ஹிஜ்ரி 8ஆம் ஆண்டில் நடைபெற்றது. நபி (ஸல்) அவர்கள் 3000 பேருடன் படையை அனுப்பி, மூன்று தளபதிகளை வரிசையாக நியமித்தார்கள். முதல் தலைவர் சாத் பின் ஹாரிதா (ரழி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டுவிட்டால் ஜாபர் பின் அபூதாலிப் (ரழி) அவர்கள் உடனேயே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். அவர்களும் ஷஹீதாக்கப்பட்டுவிட்டால் அப்துல்லாஹ் இப்னு ரவஹா (ரழி) அவர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

போரின்போது இவர்கள் மூன்று பேரும் அடுத்தடுத்து ஷஹீதாக்கப்பட்டார்கள்.

இந்த நிலையிலும் முஸ்லிம் படைகள் தளபதி இன்றி தடுமாறிடவில்லை. மூன்றாவதாக அப்துல்லாஹ் இப்னு ரவஹா ஷஹீதாக் கப்பட்டவுடன் ஹாலித் பின் வலீத் (ரழி) அவர்கள் தலைமை ஏற்றார்கள், வென்றார்கள். (புஹாரி,இன்னும் பல நபிமொழித் தொகுப்பு)

இந்த Command Serial இந்தத் தளபதி அடுக்குமுறை அப்படியே இன்றும் ஈரானில் பின்பற்றப்படுகின்றது.

**அமெரிக்க தாக்குதலுக்கு முன் இமாம் செய்யிது அலி காமினி அவர்களிடம், நீங்கள் பாதுகாப்பான பதுங்கும் இடத்திற்கு வந்து விடுங்கள் எனச் சொன்னபோது, அவர்கள்,**

“பாதுகாப்பான இடம் அல்லாஹ்விடம்தான் இருக்கின்றது. நான் அங்கே போகின்றேன். இந்த உலகைப் பொறுத்தவரை தனக்குப் பின் ஒரு தலைமை இல்லை என்ற நிலை இருந்தால் நான், பாதுகாப்பான இடங் களுக்குச் சென்றிட வேண்டும். எனக்குப் பின் ஒரு பெரும் தளபதிகள் வரிசை தலைமை தாங்கிடத் தயாராக இருக்கும்போது நான் ஏன் பாதுகாப்பான பதுங்குமிடத்திற்கு செல்ல வேண்டும். நான் அல்லாஹ்வின் வாக்குறுதியை நோக்கி நடந்துகொண்டிருக்கின்றேன்” எனக்கூறினார். இந்தப் பின்னணியில்தான் பார்த்திட வேண்டும்.

ஆக எல்லோரும் எதிர்பார்த்தைப்போல் இமாம் செய்யித் அலி காமினிகுப் பின் ஈரானின் தாக்குதலில் தொய்வோ தளர்வோ வரவில்லை. வேகம் விவேகத்துடன் அதிகரித்தது.

## இனி Supreme Leader உச்ச கட்டத் தலைவர் என்ற பதவிக்கு வருவோம்

இதிலும் ஓர் அடுக்குமுறை ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது சென்ற வருடம் **2025** ஜூன் **12**ஆம் நாள் முதல் ஜூன் **24**ஆம் நாள் வரை நடைபெற்ற ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் நடந்த போரின்போதே முடிவு செய்யப்பட்டு விட்டது. ஆகவே எந்தக் குறையுமின்றி ஈரான் தன் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இந்தத் திட்டம், முழுமையாக இங்கே விவாதிக்கப்பட்டு விட்டது என்றில்லை. இதில் இன்னும்பல நுணுக்கங்களும் நுண்மான் நுழைபுலன்களும் உண்டு. இன்ஷாஅல்லாஹ் அவை வெளியே வரும். அவை அவ்வப்போது நமது வாசகர்களுக்கு கிடைக்கும். வாசகர்கள் நமது Youtube சானல்களையும் பார்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

## ஈரான் வெளிவிவகாரத்துறை அமைச்சர்

ஈரானின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அப்பாஸ் அகர்ஸி அவர்கள் தங்கள் போர் உத்திகளைப் பேசிடும்போது இப்படிக் குறிப்பிட்டார்.

நாங்கள் 20 வருடங்களாக விவாதித்துக் கூர்மைப்படுத்திய திட்டந்தான் இப்போது செயல்படுகின்றது என்றார்.

முதன்முதலில் ஈரானில் இஸ்லாமியப் புரட்சியை ஏற்படுத்திய இமாம் கொமைனி அவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளை இனங் காட்டினார்கள். அவை அமெரிக்கா, அதன் கைப்பாவை இஸ்ரேல், அமெரிக்காவின் அடாவடித் தனங்களுக்கு எல்லா விதத்தி லேயும் துணைபோகும் ஐரோப்பிய நாடுகள் எனக் கூறினார்கள். இவற்றின் ஆயுத பலத்திற்கு இணையாக மட்டுமல்ல, அவற்றை விஞ்சும் வகையில் ஆயுதப் பலத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பார்கள். இந்த வகையில் அவர்கள் இந்தத் திருக்குர்ஆன் வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள்.

“இஸ்லாத்தின் எதிரிகள், தங்கள் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொண்டதாக எண்ண வேண்டாம். நிச்சயமாக அவர்கள் நம்மை எதிலும், இயலாமலாக்க முடியாது”

“அவர்களுக்காக (அவர்களை எதிர்ப் பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும் (திறமையான) குதிரைகளையும், ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். இதனால் நீங்கள் அல்லாஹ்வின் எதிரியையும் உங்களுடைய எதிரியையும், அச்சமடையச் செய்யலாம். அவர்கள் அல்லாத வேறு சிலரையும் நீங்கள் அச்சமடையச் செய்யலாம். அவர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள். அல்லாஹ் அவர்களை அறிவான். அல்லாஹ் வுடைய வழியில் நீங்கள் எதை செலவு செய்தாலும் அதற்கான கூலி உங்களுக்குப் பூரணமாகவே வழங்கப்படும். அதில் நீங்கள் (ஒரு சிறிதும்) அநீதம் இழைக்கப்பட மாட்டீர்கள். (அல் அன்பால் 8:59-60)

இந்த வசனங்களின் அடிப்படையில் செயல்பட தொடங்கிய நாங்கள், அமெரிக் காவின் ஒவ்வொரு ஆயுத தயாரிப்புகளையும் உன்னிப்பாகக் கவனித்து வந்தோம். அவற்றை விஞ்சும் அளவில் நாங்கள் ஆயுதங்களைத் தயாரித்தோம்.



## அணு ஆயுதம்

அணு ஆயுத அறிவில் முட்டாள்களாக இருக்கக் கூடாது என்பது இமாம் ஆயத்துல் லாஹ் ரூஹுல்லாஹ் அவர்களின் அழுத்தமான முடிவு. ஆனால் அணுகுண்டை தயாரிப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்பார்கள். இதற்கு அவர்கள் சொன்ன காரணம். இஸ்லாத்தைப் பின்பற்றும் நாம், மனித இனத்தை வாழ வைக்க வந்தவர்கள். அவர்களை நரக நெருப்பிலிருந்து மீட்டு சொர்க்கத்திற்கு சொந்தக்காரர்களாக ஆக்கிட வேண்டியவர்கள். இந்த நிலையில் நாம் எப்படி மனித இனத்தையும், அதற்குப் பயன்படும் வளங்களையும் ஒருசேர அழிக்கும் அணுகுண்டுகளைத் தயாரிக்க இயலும்?



இதே அணுகு முறையைத்தான் இமாம் ஆயத்துல்லாஹ் செய்யீத் அலி காமினி அவர்களும் கடைப்பிடித்தார்கள். இதனால் நாங்கள் அணு ஆயுதம் பற்றிய எல்லா அறிவுகளையும் பெற்றோம். வளர்த்தோம். ஆனால், அணுகுண்டை தயாரிக்கவில்லை.

இந்தப் பின்னணியில் நாங்கள் ஏவுகணை களையே சார்ந்திட வேண்டிய நிலை. அதில் அதிக கவனம் செலுத்தினோம். அதில் அதிசயங்களை நிகழ்த்தினோம். எங்களைப் பொறுத்தவரை அல்லாஹ் சொன்ன "உங்களால் இயன்ற அளவு பலத்தை தயார் செய்துகொள்ளுங்கள் என்பது இதைச் சுற்றிய வரைமுறைதான்."

## எதிரிகளின் பலம்

எதிரிகளின் பலம் என வருகின்றபோது ஈரானின் பார்வையில் அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் ஆயுத பலம், ஆராய்ச்சி பலம் என்பவை ஒருபுறம், அத்தோடு இந்த நாடுகள், வளைகுடா நாடுகள் என்ற அரபு



நாடுகளில் வைத்திருக்கும் தளங்களும் முக்கியமானவை.

இந்த அரபு நாடுகளிடமிருக்கும் தளங்கள் தாம் ஈரானைத் தாக்கிட முதலில் பயன்படுத் தப்படும் என்பதால், ஈரான் அவற்றை அழிப்பதையும் தனது போர்த் திட்டத்தின் முக்கிய பகுதியாக ஆக்கிக் கொண்டது. அதில் ஒப்பாரும் மிக்காருமில்லாத அளவில் தன்னை வளர்த்துக் கொண்டது.

## ஈரானின் வெளிநாட்டு கொள்கையும் போர்த் திட்டங்களும்

ஈரான் இமாம் கொமைனி அவர்களின் காலத்திலேயே பாலஸ்தீன மீட்பை தனது லட்சியமாகக் கொண்டு இயங்கிற்று. 1979 முதலே அது பாலஸ்தீனில் வீற்றிருக்கும் அல்குத்ஸ், அல்அக்ஸா ஆகியவற்றை உலக முஸ்லிம்களுக்கு நினைவூட்டும் வகையில் ஒவ்வொரு ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையையும் அல்குத்ஸ் மீட்புத் தினம் எனக் கொள்ளவேண்டும் என அறிவித்தது. இதனை பின்னர் 1987இல் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகள் எல்லாம் ஒத்துக்கொண்டன.

இன்றைய நாள்களில் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் இந்த அல்குத்ஸ் மீட்பு நாள் அனுசரிக்கப்படுகின்றது.

இதை வேறு சொற்களால் சொல்வதானால் உலகில் அல்குத்ஸ் நினைவு நாளை அனுசரிக்காத நாடுகளே இல்லை எனலாம்.

முதலில் இதை ஷியாக்கள் அனுசரிக்கும் நாள் என்று ஓரங்கப்பட்ட பார்த்தவர்களும் பின்னர் இந்த நாளை ஒத்துக்கொண்டார்கள்.

இது ஈரானின் வெளியுறவு கொள்கையில் முதல் வெற்றி என்றார்கள்.

தொடர்ந்து ஈரான் மேற்கொண்ட





முயற்சிகளால், சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் மிகவும் நெருங்கி வந்தன.

### அரபு நாடுகளின் அச்சம்

அரபு நாடுகள், ஈரானின் இஸ்லாமிய ஆட்சி, இஸ்லாமிய அரசு என்ற சொற்களால் அஞ்சின. இஸ்லாத்திற்கு அந்நியமான மன்ன ராட்சிக்கும் பரம்பரை ஆட்சிக்கும், எங்கே ஆபத்து வந்துவிடுமோ என ஆஞ்சின என்றாலும், ஈரான் அரபு நாடுகளோடும் தொடர்ந்து நல்லுறவுகளை ஏற்படுத்திட முயற்சிகளை மேற்கொண்டது.

இந்தப் பின்னணியில் சீனாவின் முயற்சியில் 2023ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் ஈரானுக்கும் சவூதிக்குமிடையே இருந்த பகை ஓர் முடிவுக்கு வந்தது. இரண்டு நாடுக்கும் முறிந்து கிடந்த தங்கள் இராஜாங்க உறவை புதுப்பித்துக் கொள்ளவும், பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்புகளை மேற்கொள்ள வும் ஒத்துக் கொண்டன.

ஆனால், அமெரிக்காவிற்கு தன் பாதுகாப்பை அடகு வைத்திருந்த சவூதி அரேபியா - இந்த ஒப்பந்தம் காலப்போக்கில் ஓரம் கட்டியது.

அதே 2023ஆம் ஆண்டு அக்டோபர்-7, 2023ஆம் நாள் காசாவில் ஆட்சி செய்து கொண்டிருந்த ஹமாஸ் இயக்கத்தின் அல் காஸம் படைப் பிரிவினர் காஸாவை சுற்றி இருந்த குடியிருப்புகள் மீது தாக்குதல்களை நடத்தியது. பல யூதர்களை கைதிகளாக அழைத்துச் சென்றது.

இதைத் தொடர்ந்து அக்டோபர்-8, 2023இல் இஸ்ரேல், காஸாவின் மீது போர்த் தொடுத்தது.

பயங்கர இழப்புகளுக்கிடையே ஹாஸாவும் இதனை இஸ்லாமியப் போராளிகள் குழுவும் இஸ்ரேலை பலமுறை வீழ்த்தினார்கள். இதற் கெல்லாம் காரணம் ஈரான்தான் என்றார்கள் அமெரிக்கர்களும் இஸ்ரேலியர்களும்.

ஏனெனில், 2023 அக்டோபர்-8 முதலே லெபனானின் ஹஸன் நசருல்லாஹ்வின் தலைமையில் இயங்கிய ஹிஸ்புல்லாஹ் என்ற அமைப்பு இஸ்ரேலின் வடக்குப் பகுதிகளை தாக்கிடத் தொடங்கின. இந்த ஹிஸ்புல்லாஹ். ஷியாக்களாக இருந்தார்கள். ஆகவே ஈரானை பழிசொல்லிட ஏதுவாக அமைந்தது.

ஆனால், இது நீண்டகாலமாகவே வளர்ந்த இயக்கங்களுள் ஒன்றுதான் ஹிஸ்புல்லாஹ். ஹிஸ்புல்லாவின் தொடர் தாக்குதலால் இஸ்ரேலில் சுமார் 4,50,000 வந்தேறி யூதர்கள் வடக்கு இஸ்ரேலில் இருந்து வெளியேறி இஸ்ரேலில் டெல்அவிப் பகுதிகளுக்கு சென்றனர். அவர்களை The Refugees from North அதாவது வடக்குப் பகுதி அகதிகள் என இஸ்ரேலின் இதர யூதர்கள் அழைத்தார்கள்.

அப்போது இன்னொரு பகுதியில், எமன் நாட்டைச் சார்ந்த ஹுத்தீஸ் இயக்கம் இஸ்ரேலைத் தாக்கிடத் தொடங்கியது. ஹமாசுடன் போர் ஒப்பந்தம் ஏற்படும் வரை 2025, அக்டோபர்-10, மதியம் 1 மணிவரை ஹுத்தீஸ் தன் தாக்குதலை நிறுத்திடவில்லை.

இதில் இஸ்ரேலின் பல நகரங்கள் குறிப்பாக, கிலியட் துறைமுகம் முற்றாக அழிக்கப்பட்டு துறைமுகம் மூடப்பட்டது.

இந்த ஹுத்தீசும் ஷியாக்கள் என்பதால் ஈரானின் உத்தரவின் கீழ் இயங்குகின்றார்கள் என இஸ்ரேலும் அமெரிக்காவும் கூறி வருகின்றன. இதேபோல் ஈராக்கிலுள்ள



இஸ்லாமிய அமைப்புகளையும் ஈரான், ஆகிய எதிரிகளுக்கு எதிராக தயார் செய்தது.

இப்படி ஒருபுறம் அரபு நாடுகள், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் இன்னொரு புறம், அரபு நாடுகள் தோறும் இஸ்லாமிய இயக்கங்கள் என தனது வெளியுறவு கொள்கைகளை வளர்த்துக் கொண்டது ஈரான்.

இதில் அரபு நாடுகளால், அமெரிக்கா, இஸ்ரேல் ஆகியவற்றை எதிர்த்து எதுவும் செய்திட இயலவில்லை. மட்டுமல்லாமல் அவை இந்த இரண்டு இஸ்லாத்தின் எதிரிகளுக்குத் துணைபோவதைத் தவிர வேறேதும் செய்திட இயலவில்லை.

ஆனால், சீனாவும் ரஷ்யாவும் ஈரானுக்கு உதவியாக நிற்கின்றன.

இப்போது ஈரான் வெற்றி முகத்தில் நிற்கின்றது என்றால் அதற்கு ரஷ்யாவும் சீனாவும் மிகவும் முக்கியக் காரணங்கள்.

## ரஷ்யா-சீனா உதவிகள்

ஈரானுக்கென தனி GPS என்ற உலகளாவிய இருப்பிட அமைப்பைக் காட்டும் கருவிகள் இருந்தாலும், அவற்றின் போர்க்கால பயன்பாடு மிகவும் குறைவு. ஆனால், சீனாவும், ரஷ்யாவும் தனித்தனி GPSகளை வைத்திருக்கின்றன. அதாவது உலகளாவிய இருப்பிட அமைப்பைக் காட்டும் கருவிகளை வைத்திருக்கின்றன.

இந்தக் கருவிகள் வளைகுடா நாடுகளில் இருந்த அமெரிக்காவின் இரகசிய தளங்களை படம் பிடித்துக்காட்டின. முதலில் ஈரான் தன்னுடைய தற்காப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்களை தாக்கியது. இதில் கத்தரில் இருந்த அல் உதைத் அமெரிக்க தளம் மிகப்பெரிய தளமாகும். நாம் மேலே குறிப்பிட்ட 12 நாள் போரின் போதே இந்தத் தளம் தாக்கப்பட்டிருந்தது. உடனேயேதான் அமெரிக்கா ஈரானின் காலில் வீழ்ந்தது. ஆனால், அதன்பின் தன் படைகளால் அதனை நிரப்பிக் கொண்டது.

இப்போது இஸ்ரேலை தாக்கிடவிருந்த நாள்களில் முதல் நடவடிக்கையாக, இந்த அல்உதைத்திலிருந்த அமெரிக்க இராணுவத்தினர் 10,000 பேரையும் வெளியேற்றினார்கள். ஆனாலும் அவர்களில் பெரும்பாலானவர்கள் அங்கே வேறுவேறு இடங்களில் தங்க ஏற்பாடு செய்தது அமெரிக்கா.

இந்நிலையில், இந்த 'உதைத்' அமெரிக்கத் தளத்தை முற்றாக அடித்து நொறுக்கியது ஈரான். அங்கிருந்த, அமெரிக்காவின் இராணுவத்தினர் தங்க வைக்கப்பட்டிருந்த இடங்களை ரஷ்யா மற்றும் சீனாவின் GPS என்ற இருப்பிட அமைப்பு கருவிகள் காட்டிக் கொடுத்தன. அந்த இடங்கள் தாக்கப்பட்டன. எடுத்த எடுப்பிலேயே 286 அமெரிக்க இராணுவத்தினர் அழிக்கப்பட்டார்கள்.

ஆக இந்தப் போரில், ரஷ்யா, சீனாவின் உதவிகள் களத்தில் பல வெற்றிகளுக்குத் காரணமாக அமைந்தன.

## இதர உதவிகள்

ஈரானிலுள்ள மருத்துவமனைகளையும், மருத்துவ உபகரணங்களையும், தொடர்ந்து தாக்கி அழித்து வருகின்றன. இஸ்ரேலும் அமெரிக்காவும் இதனால் ஏற்படும் மருந்து தட்டுப்பாடுகளை சீர் செய்ய தேவைகளை ரஷ்யா போதிய மருந்துகளை தந்துகொண்டே இருக்கின்றது.

சீனா பல அதிசயமான ஆயுதங்களைத் தொடர்ந்து தந்துகொண்டிருக்கின்றது. இதனால் அமெரிக்காவின் அதிசய ஆயுதம் எனக் கருதப்படும் F16, F15, F36, F18 ஆகியவற்றைத் தாக்கித் தகர்த்தது ஈரான்.

தொடவே முடியாது என அறியப்பட்ட அத்தனை போர்விமானங்களும் அழிக்கப் பட்டுவிட்டன. இவையெல்லாம் ஈரானின் வெளிவிவகாரகொள்கைகள், வெற்றிகரமாக செயல்படுகின்றன என்பதைக் காட்டும்.

## ஹார்மூஸ்

ஹார்மூஸ் ஜலசந்தி வழியாகத்தான் உலக நாடுகளுக்கு பெட்ரோல் செல்லுகின்றது. இந்த ஹார்மூஸ் பகுதியை ஈரான் தன் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டது.

ஆனால் இந்த ஹார்மூஸ் ஜலசந்தியில் அமெரிக்கா, இஸ்ரேல் கப்பல்களுக்கு அனுமதி இல்லை. அதேபோல் இந்த நாடுகளுக்கு உதவி செய்யும், நாடுகளுக்கும் அனுமதி இல்லை எனக் கூறியதின் மூலம், உலக அரங்கில் அமெரிக்காவையும், இஸ்ரேலையும் தீண்டத் தகாதவர்களாக ஆக்கி இருக்கின்றது ஈரான். இந்த கொள்கையால் எல்லா நாடுகளும், ஈரானுடன் நட்பு பாராட்டுகின்றன. அதே நேரத்தில் அமெரிக்காவை நம்பவில்லை. மாறாக, அமெரிக்காவை நம்பி நின்ற நாடுகள் அமெரிக்காவை கைவிடத் தொடங்கியுள்ளன.

இப்போது ஹார்மூஸ் ஜலசந்தியில் கப்பல்களுக்கு ஒரு வரியை வசூலிப்பதின் மூலம் ஈரான் தன் வருவாயையும் பெருக்கியுள்ளது.

## 1978-1979களில் ஈரான் வகுத்தத் திட்டம்

ஈரானில் இஸ்லாமியப் புரட்சியை நடத்திக் காட்டிய இமாம் ஆயாத்துல்லாஹ் ரூகுல்லாஹ் கொமைனி அவர்கள் அமெரிக் காவும், இஸ்ரேலும் எப்படியும் இஸ்லாத்தின் அடிப்படையில் அமைந்த இந்த புரட்சியைத் தடுப்பார்கள். அக்கம் பக்கத்திலுள்ள அரபு நாடுகளுக்குப் பரவி விடாமல் தடுப்பார்கள். இதனால் இந்தப் புரட்சியை ஈரானுடன் முடக்கிப் போட்டிட எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வார்கள் அமெரிக்கர்களும் இஸ்ரேலியர்களும் என்பதை எதிர்பார்த் தார்கள். இமாம் மொமைனி அதேநேரத்தில்



சதாம் ஹுஸைன்

இஸ்லாத்தின் அடிப்படையில் ஆட்சி மாற்றங்கள் சுற்றி இருக்கும் அரபு நாடுகளில் ஏற்பட்டால் மட்டுமே அமெரிக்கா இஸ்ரேல் முதலான இஸ்லாத்தின் எதிரிகளை வீழ்த்திட இயலும் என்பதையும் உணர்ந்தார்கள் இமாம்.

ஈரானின் இஸ்லாமியப் புரட்சியை ஈரானுக்குள் முடக்கிட அமெரிக்காவும் இஸ்ரேலும் எடுக்கும் முயற்சிகளுக்கும் அரபு நாடுகள் தங்கள் மன்னராட்சியையும், வம்சா வழி ஆட்சியையும் தக்க வைத்துக்கொள்ள அமெரிக்காவுக்கு உதவும் என்பதையும் அறிந்தார்.

இந்நிலையில் ஈராக்கில் ஆட்சி செய்து கொண்டிருந்த சதாம் ஹுஸைனை ஏவி, செப்டம்பர் 22,1980 முதல் ஈரானை தாக்கிடச் செய்தார்கள் அரபுக்களும் அமெரிக்கர்களும். ஈரானுக்குள் ஈராக் படைகள் புகுந்தன. ஈரான், தான் ஒரு இராணுவத்தை தயார் செய்வதற்குள் தொடுக்கப்பட்ட தாக்குதல் அல்லது ஆக்கிரமிப்பு என்றாலும் நன்றாகவே தாக்குப் பிடித்தது. இந்தப் போர் ஆகஸ்ட் 20,1988இல் ஓர் முடிவுக்கு வந்தது.

ஈரானில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளி லிருந்து ஈராக் வெளியே வந்தது. இதில் ஈராக்-கிற்கு பெருத்த பொருள் சேதம்



ஏற்பட்டது. அமெரிக்காவும் அரபு நாடுகளும் ஈரானில் ஏற்பட்டது ஒரு ஷியா புரட்சி என்றும், அதற்கும் இஸ்லாத்திற்கும் சம்மந்தமுமில்லை என்றும் பிரச்சாரங்களைச் செய்தார்கள்.

அதேபோல் ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையே நடந்த போர் ஷியா-சன்னி போர் என்றும் பிரச்சாரம் செய்தார்கள். இதற்காக அரபு நாடுகளின் செலவில் உலகெங்கும் 5000 மதரஸாக்கள் தொடங்கப்பட்டன. இவை இல்லாத பொல்லாத பொய்களைச் சொல்லி உலகெங்கும் ஷியா-சன்னி வேற்றுமையை வளர்த்தார்கள்.

இந்தப் போரில் ஈராக் அதிபர் சதாம் ஹுஸைனுக்கு ஏற்படும் இழப்புகளுக்கு அரபு நாடுகள் பணம் தந்திட வேண்டும். சதாம் ஹுஸைன் 500 மில்லியன் டாலர் பணத்தைக் கேட்டார். அரபு நாடுகள் தர மறுத்தன. ஆகவே அரபு நாடுகளுக்குச் சொந்தமான "குவைத்" எண்ணெய் கிணறுகளை கையகப்படுத்துவேன் என்றார் சதாம் ஹுஸைன்.

ஆகஸ்ட்-2,1990இல் குவைத்-ஐ பிடித்தார் சதாம். சதாம் ஹுஸைனை அமெரிக்காவின் தலைமையில் 42 அரபு நாடுகள் எதிர்த்துப் போர் செய்தன. 28 பிப்ரவரி 1991இல் சதாம் ஹுஸைன் தோற்கடிக்கப்பட்டார்.

இப்படி ஈரானின் புரட்சியின் அலையி லிருந்து மக்களின் கவனம் திசை திருப்பப் பட்டது. இந்நிலையில் ஈரான் அண்டை நாடுகளில் இஸ்லாமியப் புரட்சியை ஏற்படுத்த அங்கே பல அமைப்புகளை எற்படுத்தியது. அவற்றில் முக்கியமானவை ஜோர்டன், எகிப்து, ஈராக். சிரியா, லெபனான், ஏமன் ஆகிய நாடுகளில் அமைந்தன.

இதில் ஏமன், லெபனான், சிரியா, ஈராக் ஆகிய நாடுகளைத் தவிர ஏனைய நாடுகளிலுள்ள இஸ்லாமிய இயக்கங்கள் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டுவிட்டன அந்தந்த அரசுகளால்.

இப்போது ஈரானுக்காகவும், பாலஸ்தீனத்தின் விடுதலைக்காகவும், இந்த நாடுகளில் உள்ள இஸ்லாமியப் படைகள் போர் செய்கின்றன. இதனை The Axis of Islamic Resistence இஸ்லாமியப் படைகளின் அணி என அழைக்கின்றார்கள்.

ஆக ஈரான் இன்று அமெரிக்கா, இஸ்ரேல் ஆகியவற்றின் கூட்டுத் தாக்குதலை தாக்குப் பிடித்து நிற்கின்றது என்றால், அது நீண்டகால உழைப்பு இடைவிடா முயற்சிகள் இவற்றால்தான். அல்ஹம்துலில்லாஹ்.

**- MGM**



# இந்திய முஸ்லிம்கள் தொண்டுகளும் தியாயகங்களும்




## இந்திய முஸ்லிம்கள் நூலின் நோக்கம்

இந்த நூல் ஏன்? எதற்கு? என்பதை, அதன் அறிமுகத்தில் இமாம் அலீமியான் என்று எல்லோரும் அன்போடு அழைக்கும் அறிஞர் அபுல் ஹஸன் அலீ நத்வி (ரஹ்) அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அதை நான் என் பதிப்புரையாகத் தந்துள்ளேன். அலீமியான் ஓர் அறிவாழமிக்க அறிஞர் மட்டுமல்ல, அவர் ஒரு களப் போராளி.

## அருண்ஷோரியை வீழ்த்திய அலீமியான்

அறிஞர் அலீமியான் (ரஹ்) அவர்கள், ஓர் அறிஞர் மட்டுமல்ல, அவர்கள் ஓர் இயக்கம்

அன்று அருண்ஷோரி என்றொரு எழுத்தாளர் - பத்திரிகையாளர் தன்னை ஒரு பெரும் எழுத்துப் போராளி எனக் காட்டிக்கொண்டவர். அன்றைய பிரதமர் இந்திராகாந்திக்கு எதிராக ஒருபெரும் எழுத்துப் போரை நடத்தி, எழுத்துலகின் உச்சிக்கே சென்றார்.

எழுத்துலகில் தனக்கிருக்கும் இந்தப் புகழையும் பெயரையும் பயன்படுத்தி, அன்றையப் பிரபல்யமான நாளிதழ் “இந்தியன் எக்ஸ்பிரஸ்” என்ற ஆங்கில பத்திரிகையில் உயர்ந்த இடத்தைப் பிடித்துக் கொண்டார் அதிக ஊதியத்தில்.

இந்தப் பதவியை பயன்படுத்திக் கொண்டு அந்தப் பத்திரிகையில் ஓர் கட்டுரையை எழுதினார். அந்தக் கட்டுரையின் கருப்பொருள் “பாபரி மஸ்ஜித்”. கட்டுரையின், தலைப்பு “பாபரி மஸ்ஜித் எங்கே இருந்தது?” இந்தக் கட்டுரையில் பாபரி மஸ்ஜித் என்றொன்று எப்போதுமிருந்த தில்லை என எழுதியிருந்தார். தன்னுடைய வாதத்தை வலுப்படுத்திட, அலீமியான் அவர்களின் தந்தை எழுதிய நூலையே மேற்கோள் காட்டினார்.

இந்தக் கட்டுரை இந்தியன் எக்ஸ்பிரஸ்-இன் மும்பை பதிப்பில் வந்தது. அப்போது அலீமியான் அவர்கள் லக்னோவில் இருந்தார்கள். உடனேயே மும்பை சென்றார்கள். தன் தந்தையின் நூலை கையில் எடுத்துக்கொண்டு, இந்தியன் எக்ஸ்பிரஸ், பத்திரிகையின் உரிமையாளர் கோயான்கோ-வை சந்தித்தார்கள். மூல நூலை தந்தார்கள். அருண்ஷோரி சொன்னதுபோல் எங்கேயும் அந்த நூலில் இல்லை என்பதை நிரூபித்தார்கள். வருந்தினார் கொயான்கோ.

அருண்ஷோரியை இந்தியன் எக்ஸ்பிரஸ்

பத்திரிகையிலிருந்து எடுத்து வீசினார் கோயான்கோ. அத்தோடு அருண்ஷோரியின் பத்திரிகை வாழ்க்கை ஓர் முடிவுக்கு வந்தது.

### வந்தே மாதரம்

உத்திரப்பிரதேச அரசாங்கம் அன்று ஓர் ஆணையைப் பிறப்பித்தது. அது எல்லா அரசு பள்ளிகளிலும் வந்தே மாதரம், பாடலை பாடிட வேண்டும் என்பதே!

இதை எதிர்த்து அலீமியான் அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். அதில், முஸ்லிம்கள் யாரும் தங்கள் குழந்தை களைப் பள்ளிக்கு அனுப்பிட வேண்டாம் எனக் குறிப்பிட்டார்கள். உடனே அந்த அரசு ஆணை பின்வாங்கப்பட்டது.

இப்படி எது வந்தாலும் எதிர்கொள்ளலாம் என்ற அலீமியான் அவர்களின் நெஞ்சுரம் யாருக்குமில்லை.

### ஷாபானு வழக்கு

ஷாபானு வழக்கில், ஷரீஅத்திற்கெதிராக ஜீவனாம்சம் வழங்கும் தீர்ப்பு ஒன்றை அன்றைய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் வழங்கினார். அதுபோது, ராஜீவ்காந்தி இந்தியாவின் பிரதமர். அவர் இந்தக் கருத்தை ஆதரித்தார்.

அன்றைய காங்கிரஸ் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். முஸ்லிம் பெயர் தாங்கிய ஆரிஃப் முஹம்மத் கான். அவர் உச்சநீதிமன்ற தீர்ப்பை தூக்கிப்பிடித்து நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார். பின்னர் நாடெங்கும் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு இதே கருத்தைப் பரப்பினார்.

இந்த ஈனச்செயலுக்கு சாதகமாக, திருக்குர்ஆன் வசனங்களையும் வளைத்தார்.

இதையெல்லாம் பொறுத்துக்கொண்டிருக்க வில்லை. அலீமியான் அவர்கள். பிரதமர் இராஜீவ்காந்தியை சந்தித்தார்கள். இஸ்லாம் பெண்களுக்குத் தந்திருக்கும் பாதுகாப்புகளைப் பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

அலீமியான் அவர்களின் விளக்கம் பிரதமர் இராஜீவ்காந்தியை வெகுவாகக் கவர்ந்தது. இராஜீவ்காந்தி, தன் கருத்தை மாற்றிக் கொண்டார்.

சென்னை வந்து செல்லும்போது துக்ளக் சோ.ராமசாமிக்கு விமானத்தில் வைத்துக் கொடுத்தப் பேட்டியில் இஸ்லாம் பெண்களுக்கு விரிவான உரிமைகளை வழங்கி இருக்கின்றது எனக் கூறினார். அப்போது இந்நாட்டில் பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியது.

இந்தப் பின்னணியில் முஸ்லிம் திருமண சட்டம் 1986 என்றொன்றக் கொண்டு வந்தார். ஆரிஃப் முஹம்மத் கானுக்கு, இராஜீவ்காந்தி தன் கருத்தை மாற்றிக் கொண்டது. பிடிக்க வில்லை. காங்கிரஸ்-லிருந்து வெளியேறினார். பின்னர் பி.ஜே.பி.இல் சேர்ந்தார். இப்படி ஆரிஃப் முஹம்மத்கான் இஸ்லாத்திலிருந்தும் வீழ்ந்தார். அவர் இஸ்லாத்திற்கெதிராகச் செயல்பட்டதால் பின்னர் பாரதீய ஜனதா கட்சியில் கேரள மாநில கவர்னராக ஆனாவர்.

### அலீமியான் ஓர் கள ஆய்வாளர்

அபுல் ஹஸன் அலீ அவர்கள் ஒருநாள் ரேபரேலி செல்லுகின்றார்கள். அங்கே ஓர் மஸ்ஜித் இடிந்த நிலையில் கிடக்கின்றது. அதுபற்றி விபரங்களை திரட்டினார்கள். கிடைத்த தகவல்கள் அவர்களை இழுத்துக் கொண்டே சென்றது. முடிவில் முழு வடிவில் செய்யீத் அஹ்மத் ஷஹீத் அவர்களின் வாழ்க்கை வரலாறு வெளியே வந்தது.

இந்த வரலாறு ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்து, இந்தியப் பெருநிலத்தின் ஒரு பெரும் பகுதியை முஸ்லிம்கள் மீட்டார்கள். இஸ்லாமிய ஆட்சியை நிலைநாட்டினார்கள் என்ற நீண்ட வரலாறு. அது இஸ்லாத்தை முன்வைத்து செய்யீத் அஹ்மத் ஷஹீத் அவர்களின் தலைமையில் நடந்த ஜிஹாத் ஆயிரமாயிரம் முஜாஹித்கள் எழுந்தார்கள் ஆங்கிலேயர்களின் அநியாயங்களுக்கு எதிராக!

இந்த வரலாற்றில் அவர் அகழ்ந்தெடுத்துள்ள தகவல்கள், கள ஆய்வுகளின் அடிப்படையில் அமைந்தவை. இது அவர்கள் ஒரு புத்தகப்புளு அல்ல. புத்துணர்ச்சியை ஊட்டும் கள ஆய்வாளர் என்பதை எடுத்துக்காட்டும்.

### தமிழகத்தில் அபுல்ஹஸன் அலீ நத்வி

அறிஞர் அபுல்ஹஸன் அலீ (ரஹ்) அவர்கள் தமிழகத்திற்கு வந்து சென்றுகொண்டுதான் இருந்தார்கள்.



அப்படி வந்த ஒரு விஜயத்தின்போது, தமிழகத்தில் ஓர் பிரச்சனை.

பல அமைப்புகள், சமுதாயத்தின் தலைமைக்கு பாத்யதைக் கொண்டாடின. அந்நிலையில் முஸ்லிம்களின் ஒட்டுமொத்த தலைமை "கிலாபத்"தான் என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்லிட வேண்டிய கட்டாயம் பிறந்தது. அந்நிலையில் முஸ்லிம்களின் தலைமை "கிலாபத்" என்றொரு சிறப்பு இதழை நாம் நிறுவி நடத்திக் கொண்டிருந்த விடியல் வெள்ளியின் சார்பில் வெளியிட்டோம்.

அச்சமயம் அலீமியான் (ரஹ்) அவர்கள் சென்னைக்கு வந்திருந்தார்கள். அவர்களிடமிமும் பேட்டி எடுத்து வெளியிட்டோம்.

இப்போது நமது வேர்கள் பதிப்பகத்தின் சார்பில் பேரறிஞர் அலீமியான் அவர்களின் முத்திரை எழுந்தன. முஸ்லிம்களின் வீழ்ச்சியில் உலகம் இழந்ததென்ன? என்ற பதிவை வெளியிட்டோம்.

அதேபோல, இந்த நூலில் இடம் பெற்றுள்ள இந்திய விடுதலைப் போரில் முஸ்லிம்கள் என்ற தலைப்பை நான் பல கட்டுரைகளில் மேற்கோள் காட்டியுள்ளேன். அது விடுதலைப் போர் பற்றி ஒரு தலைகீழ் பார்வையை வழங்கும்.

இப்படி அறிஞர் அலீமியான் அவர்களின் சிந்தனைகளைத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு தந்து கொண்டிருக்கின்றோம். அதில் இன்னொரு முத்து தம்பி மௌலானா நியாசுத்தின் அவர்களின் அழகு தமிழில் வெளிவந்துள்ள இந்த நூல் இன்னொரு அத்தியாயம். சிக்கலான கருத்துகளை எல்லோருக்கும் புரியும்படி எடுத்துச் சொல்லி விடுகின்றார். "வைகறை வெளிச்சம்" பத்திரிகையின் அப்போதைய துணை ஆசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்கள்தாம் இந்தத் தொடரை தொடங்கி வைத்தார்கள்.

ஓர் அரிய அழகிய எழுத்தாளர் அவருக்குள் உலா வருகின்றார். அவர் இன்னும் நிறைய எழுத வேண்டும். இன்ஷாஅல்லாஹ்.

இதுபோன்ற இலக்கியங்கள் அறிவுத் தாகத்தைத் தணிப்பவை மட்டுமல்ல, சமுதாய பாதுகாப்பின் முதல்படி.

வேர்கள் பதிப்பகத்தின் இஸ்லாமியச் சேவையும் இலக்கியச் சேவையும் தொடரு கின்றன. எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே!

இந்த நூலுக்கு அறிஞர் அலீ மியான் (ரஹ்) அவர்கள் எழுதிய முன்னுரை இந்த நூலின் உன்னத நோக்கத்தை விளக்குவதால் அதன் சுருக்கத்தை இங்கே தருகின்றோம்.

## அறிஞர் அபுல் ஹஸன் அலீ நத்வி (ரஹ்) அவர்களின் முன்னுரை

சமுதாயங்கள் ஒற்றுமையாக வாழ்ந்திட வேண்டும் என்றால், அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும். அத்தோடு அவர்கள் தங்களோடு வாழ்ந்திடும் மக்களின் நலன்கள், பழக்க வழக்கங்கள் அவர்கள் பின்பற்றும் கொள்கைகள், அவர்களின் பாரம்பரியங்கள், அவர்கள் அந்த நாட்டுக்குச் செய்த சேவைகள், அதன் விடுதலைக்கும், அதன் வளர்ச்சிக்கும் அந்த மக்கள் முந்தைய காலக்கட்டத்தில் செய்த தியாகங்கள் இப்போதும் செய்து கொண்டி ருக்கும் சேவைகள் என்னென்ன என்பனவற்றை அறிந்திட வேண்டும்.

இதே காரணத்திற்காக, ஏனைய மக்களின் மொழி, இலக்கியம், கலாச்சாரம் ஆகியவற்றை அறிந்திட வேண்டியது மிகவும் முக்கியம்.

நமது நாடு திறமையாளர்களைத் தேர்ந் தெடுத்து உலகின் பல்வேறு நாடுகளுக்கும்

அனுப்பி அங்குள்ள கல்வி, கலாச்சாரம், சிந்தனை மாற்றங்கள் ஆகியவற்றை அறிந்து, அவற்றை நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு எப்படிப் பயன்படுத்துவது? என்பதைப் பரிந்துரைக்கப் பணிக்கின்றது. இதற்காக இந்திய அரசு ஒரு துறையையே ஏற்படுத்தி இருக்கின்றது. அதன் பெயர் Indian Council for Cultural Relations கலாச்சார மாற்றத்திற்கான இந்திய குழுமம். இது ஏராளமான நிதி ஒதுக்கீட்டின்கீழ் இயங்குகின்றது.

இதுவல்லாமல் இன்னும் சில தனியார் நிறுவனங்களும் இயங்குகின்றன. இந்திய, அரபு சமூகங்களின் ஒருங்கிணைப்பு இந்திய, ஈரானியன் சமூகங்களின் ஒருங்கிணைப்பு என்பன இவற்றில் முக்கியமானவை.

இவையெல்லாம் இதர நாடுகளில் நிலவும் கலாச்சாரங்களை அறிவதும், அவற்றைப் பயன்படுத்துவதற்கும் செய்யப்படுகின்றன. இத்தோடு இந்த சமூக மக்களோடு ஓர் பிணைப்பையும் ஏற்படுத்துகின்றன.

உலகளாவிய அளவில் இது நடந்துகொண்டிருக்கின்றது என்றால் நாம் நமக்குள் நம்மோடு வாழ்பவர்களோடு கலந்து பழக வேண்டியதும், அவர்களின் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றைத் தெரிந்துகொள்வதும் மிகவும் முக்கியம். இப்படி தெரிந்துகொள்வதன் மூலம்தான் நாம், இந்தியாவின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் வளர்க்க முடியும்.

இதில் முஸ்லிம்கள், இந்த நாட்டுக்குச் செய்த தியாகங்கள், இந்த நாட்டின் சமூக, கலாச்சார மாற்றங்களுக்குச் செய்த மகத்தான சேவைகள் இவையெல்லாம் மறைக்கப்பட்டு வருகின்றன. ஏன் முஸ்லிம்களே அதனை தெரிந்திருக்கவில்லை. முஸ்லிம்கள் இப்படி அறியாமையில் மூழ்கிக் கிடக்கும்போது அவர்களின் வரலாற்றையும் நாட்டின் வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பையும் மறைப்பதற்கும் முயற்சிகள் நடக்கின்றன. திருத்தி எழுதுவதற்கும் உண்மையான வரலாற்றைத் தடந்தெரியாமலாக்குவதற்கும் அதிகார வர்க்கம் எல்லா முயற்சிகளையும் செய்து வருகின்றது. அதிகமான ஆள் பலத்தோடும், பண பலத்தோடும் வரலாற்றுத் திரிபுகள் நடந்து வருகின்றன.

இதில் வேதனை என்னவெனில் முஸ்லிம்களைத் தேசத் துரோகிகளாகக் காட்டிட பல முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இந்த முயற்சிகள் தொடர்ச்சியானவை. இதில் இவர்கள் இந்த முஸ்லிம் விரோதிகள், முஸ்லிம்கள் இந்த நாட்டின் விடுதலைக்கு செய்த தியாயங்களைத் தடந்தெரியாமலாக்கிட, விடுதலைப் போர் வரலாற்றை திரித்துத் திணித்துக்கொண்டே இருக்கின்றார்கள்.

இந்த வரலாறு எந்த அளவுக்குத் திரித்துத் திணிக்கப்படுகின்றது என்றால், முஸ்லிம்கள், வெளிநாட்டவர்கள், அந்நியர்கள், அவர்கள் ஏகாதிபத்தியர்களாகவே இங்கே வந்தவர்கள் என்றும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

காலப்போக்கில் முஸ்லிம்களின் தியாகங்கள் துரோகங்களாகக் காட்டப்படுகின்றன.

இந்திய முஸ்லிம்கள் ஆயிரம் ஆண்டு வரலாற்றுத் தொன்மையைக் கொண்டவர்கள். இந்தியாவில் இந்த ஆயிரம் ஆண்டுகளாக அவர்கள் நிலை நாட்டிய சமூக நிதி, பொருளாதார வளர்ச்சி இவற்றையெல்லாம் மறைத்திட, நேற்று பெய்த மழையில், இன்று முளைத்த காளான்கள் பல கிளம்பிவிட்டன.

கல்வி புகட்டும் கலாசாலைகளை முஸ்லிம் விரோதிகள் கவ்விக்கொண்டதால், இந்த வரலாற்று திரிபுகளை பாடங்களாக பயிற்றுவிக்கும் அதிகாரமும் அவர்களுக்குக் கைகூடி விட்டது.

தலைமுறைகள் தவறான பல வரலாறையும் அதன்வழி எழும் வெறுப்பையும் நெஞ்சிலே பதித்துக்கொண்டு வளருகின்றார்கள்.

இந்தப் பேராபத்துக்களை எதிர்கொள்ளவும் முறியடிக்கவும் முஸ்லிம்களைப் பற்றியும், அவர்கள் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் செய்தவற்றை நம்மோடு வாழ்பவர்களுக்குக் கொண்டு சேர்த்திட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

ஆனால் ஒரு சிக்கல், முஸ்லிம்களின் மொத்த பங்களிப்பையும் விரித்துரைத்தால் விரிவானதொரு நூல் தேவைப்படும். இன்றைய நாள்களில் அத்துணை பெரிய ஆக்கங்களை வாசிக்க வாழ்க்கை ஓட்டம், கால அவகாசத்தை தருவதில்லை.

முஸ்லிம் வாசகர்களும் சரி, சகோதர சமுதாயத்தைச் சார்ந்த சகோதரர்களாக இருந்தாலும் சரி. யாருக்கும் இல்லை நேரம் என்பதே நிலை.

ஆகவே, குறுகிய காலக்கட்டத்திற்குள் வாசித்து முடிக்கும் நூல் ஒன்றை வடிவமைத்திட வேண்டியது அவசியம் அவசரம் அதுவே இந்த முயற்சி.

## நூல் வந்த வரலாறு

1951ஆம் ஆண்டில், நான் மத்திய கிழக்கு நாடுகளில் விரிவானதொரு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டேன். அங்கெல்லாம் இந்திய முஸ்லிம்கள் பற்றி பல கேள்விகள் கேட்கப் பட்டன. அவற்றிற்கு நான் பதில் சொன்னேன். அவற்றில் பல அரிய தகவல்கள் இடம்பெற்றன.

இதை இந்தியாவிலுள்ளவர்களும் கவனித்துள்ளனர். அதனால் நான் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து, திரும்பி இந்தியா வந்ததும், அகில இந்திய வானொலியிலிருந்து ஓர் அழைப்பு வந்தது. அதில் என்னிடம் இந்திய முஸ்லிம்களைப் பற்றி ஒரு தொடர் சொற்பொழிவை அரபி மொழியில் நிகழ்த்திட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள். நானும் ஒரு தொடர் சொற்பொழிவை அரபியில் நிகழ்த்தினேன்.

இந்த உரைகளை உலகின் பல்வேறு நாடுகளிலுமுள்ள தூதரகங்கள் பதிவு செய்திருந்தன. இது நான் சற்றும் எதிர்பாராத ஒன்று. இவர்கள் என்னுரைகளை ஒரு நூலாகத்தர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள்.

அகில இந்திய வானொலி இன்னொரு சேவையையும் செய்தது. அது என்னுரையை இன்னும் பல மொழிகளில் மொழிபெயர்த்து ஒலிபரப்பியது.

இதைத் தொடர்ந்து டெமாஸ்கஸிலிருந்து (சிரியா)விலிருந்து) வெளிவரும் அரபிமொழி இதழ் "அல் முஸ்லிமூன்" என் உரைகளை பல பகுதிகளாக வெளிவிட்டது.

அதைத் தொகுத்த சிலர் நூலாக வெளியிட முன்வந்தார்கள். நான் அந்தத் தொகுப்பில், இன்னும் சில ஆய்வுகளை இணைத்தால் பல பொன்னரிய தகவல்கள் மக்களை சென்றடையும் என்றேன்.

அதன்படி வானொலி உரைகளில் இடம்பெறாத இன்னும் ஐந்து, அத்தியாயங்கள், இணைக்கப்பட்டன.

**அவை**

1. **இந்திய நாகரிகங்களில் முஸ்லிம்கள் ஏற்படுத்திய தாக்கம்.**
2. **இந்திய விடுதலைப் போரில், முஸ்லிம்கள்**
3. **இந்திய இஸ்லாமிய நாகரிகம்**
4. **இந்தியாவின் ஸூஃபியாக்களும் அவர்கள் சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கங்களும்.**
5. **இன்றைய கஷ்டங்களும் பிரச்சனைகளும்**

இந்த நூல், முஸ்லிம்கள்மேல் சகோதர சமுதாயத்தில் கொண்ட காழ்ப்புணர்வுகளையும் கசப்புகளையும் அகற்றுவதில் பெரும் பங்காற்றிடும். - இன்ஷாஅல்லாஹ்.





## நெருக்கடியான நேரங்களில் நமது வெளிவிவகாரத்துறை!

# நேருவிடம் அரசியல் பழகுங்கள் மோடி!

1951-ஆம் ஆண்டு ஈரானின் முக்கியத் தலைவர்கள் படுகொலை செய்யப் பட்டனர். அதனைத் தொடர்ந்து 75 ஆண்டு களுக்குப் பிறகு, 2026-ஆம் ஆண்டில், அந்நாட்டின் உயர்மட்டப் பதவிகளில் இருந்த உச்சத் தலைவர் அலி காமேனி மற்றும் பாதுகாப்புத் துறைத் தலைவர் அலி லாரிஜானி உள்ளிட்ட பல முக்கிய நிர்வாகிகள், ஐ.நா. சாசனத்தை முற்றிலும் மீறி அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய கொடூரமான இராணுவத் தாக்குதல்கள் மூலம் கொல்லப்பட்டனர்.

### படுகொலைகளுக்குப் பின்னணியில் உள்ள காரணங்கள்

*1951 மற்றும் 2026-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தப் படுகொலைகளுக்குப் பின்னால் அதிகாரப் போட்டி, வளங்களின் மீதான கட்டுப்பாடு மற்றும் பிராந்திய அரசியல் ஆகிய முக்கிய காரணங்கள் உள்ளன.*

### நேருவின் கடிதமும் கவலையும்

*1951-ஆம் ஆண்டு ஈரானில் நடந்த அந்தத் துயரமான கொலைகளைக் கண்டு பிரதமர் ஜவஹர்லால் நேரு மிகவும் வருந்தினார். அதே ஆண்டு மார்ச் 21 அன்று, மாநில முதலமைச்சர் களுக்கு அவர் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:*

"ஈரானில் சமீபத்தில் பிரதமர் ஜெனரல் அலி ரஸ்மாராவும், அதன் பிறகு மற்றொரு அமைச்சரான அப்துல் ஹமீத் சங்கனேயும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்."

"ஈரான் ஒரு கலக்கமான மற்றும் நிலையற்ற நிலையில் உள்ளது, மேலும் அதன் பெரும் எண்ணெய் வளங்களை வல்லரசுகள் பேராசையுடன் நோக்குகின்றன. ஈரானில் உள்ள ஒரு கட்சியும், ஏன் அந்நாட்டின் நாடாளு மன்றமும் (மஜ்லிஸ்) கூட எண்ணெய் வளத்தைத் தேசியமயமாக்கப் போவதாக அறிவித்துள்ளன."

ஈரானின் உயர்மட்டத் தலைவர்களின் உயிரைப் பறித்த அந்த வன்முறைச் செயல் களுக்குப் பின்னால், அந்நாட்டின் எண்ணெய் வளத்தின் மீது வல்லரசுகள் கொண்டுள்ள அடங்காத பேராசையே காரணம் என்று நேரு அன்று கூறிய கூர்மையான அவதானிப்புகள், 2026 மார்ச் 29 அன்று பைனான்சியல் டைம்ஸ் இதழுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அளித்த பேட்டியில் எதிரொலித்தன.

அதில் அவர் வெளிப்படையாக, "உண்மையைச் சொல்லப்போனால், எனக்கு மிகவும் பிடித்தமான விஷயம் ஈரானின் எண்ணெயைக் கைப்பற்றுவதுதான்" என்று கூறியதுடன், "ஈரானின் முக்கிய எண்ணெய் ஏற்றுமதி மையமான கார்க் தீவை (Kharg Island) அமெரிக்கா கைப்பற்றக்கூடும்" என்றும் பரிந்துரைத்தார்.

எனவே, "இந்தக் குருதி தோய்ந்த செயல்களுக்குப் பின்னால், வெளிப்படையாக எண்ணெய்ப் பற்றிய கதை ஒளிந்திருக்கிறது; அது எப்போதும் ஒரு அருவருப்பான வணிகம்" என்ற நேருவின் 1951-ஆம் ஆண்டின் கூற்று, 2026-இல் அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானின் இறையாண்மையை மீறி அந்நாட்டின் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தியபோதும் அப்படியே பொருந்திப் போகிறது.




## சூயஸ் கால்வாய் நெருக்கடியும் ஹார்முஸ் நீர்ச்சந்தி சிக்கலும்

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலால் ஈரான் மீது நடத்தப்பட்ட சட்டவிரோத மற்றும் கொடூரமான ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, ஹார்முஸ் நீர்ச்சந்தி (Strait of Hormuz) வழியாக உலகின் பிற பகுதிகளுக்கு எண்ணெய் மற்றும் எரிவாயு கொண்டு செல்லும் கப்பல்களை ஈரான் தடுத்து நிறுத்தியுள்ளது; இருப்பினும், ஆக்கிரமிப்பாளர்களின் தரப்பைச் சாராத எண்ணெய் டாங்கர்களுக்கு இதில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

உலகின் 20% எண்ணெய் மற்றும் 20% திரவ இயற்கை எரிவாயு (LNG) ஹார்முஸ் வழியாகவே செல்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. தற்போது இது மூடப்பட்டதால் உலகளாவிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக இந்தியா உள்ளது.

இந்தச் சூழலில் தான், 1951-ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாய் விவகாரத்தில் இந்தியாவின் முதல் பிரதமர் நேரு வழங்கிய விவேகமான ஆலோசனையும் அவரது தெளிவான நிலைப் பாடும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. எகிப்திய அதிபர் கமல் அப்தெல் நாசர் அந்தக் கால்வாயைத் தேசியமயமாக்கியதைத் தொடர்ந்து, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் ரகசியக் கூட்டணியால் எகிப்து ஆக்கிரமிக்கப்பட்டு 1956-இல் சூயஸ் நெருக்கடி ஒரு உலகளாவிய மோதலாக வெடிப்பதற்கு முன்னரே, நேரு இந்த ஆலோசனையை வழங்கியிருந்தார்.

நவம்பர் 3, 1951 அன்று, சூயஸ் பகுதியில் படைகளை நிலைநிறுத்த பிரிட்டிஷ் அதிகாரிகள் எடுத்த முடிவு குறித்த கேள்விகளுக்குப் பதிலளித்த நேரு,

"இத்தகைய ஆயுதப்படைகளின் பயன்பாடு போருக்கான முயற்சிகளாகும். எத்தனை படைகளை அனுப்பினாலும் அது இப்பிரச் சினைக்குத் தீர்வாகாது." என்று பதிலளித்தார்.



பல நாடுகளைக் கடந்து செல்லும் நீர்வழிகளில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த ஒரு சர்வதேச அமைப்பு இருக்குமா? என்ற மற்றொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

"சூயஸ் கால்வாய் முற்றிலும் எகிப்தின் அரசியல் இறையாண்மையின் கீழ் இருப்பதில் எந்தத் தவறும் இல்லை என்றும், அதே வேளையில் எகிப்தின் தேசிய அதிகாரத்தில் தலையிடாமல் மற்ற நாடுகளின் போக்குவரத்தை நிர்வகிக்க சர்வதேச ஏற்பாடுகள் இருக்கலாம்" என்றும் கூறினார்.

## காலனித்துவத்தின் மீள்வருகையும் உலகளாவிய பேரழிவும்

இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்த பிறகு உலகின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட அதிகார சமநிலை மாற்றங்கள் மற்றும் பல நூற்றாண்டுகால பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து இந்தியா சுதந்திரம் பெற்று ஆசியாவில் காலனித்துவத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வழிவகுத்த அந்த விடுதலைப் போராட்டங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே நேரு அந்தச் சிறந்த ஆலோசனையை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேருவின் அந்த அறிவுப்பூர்வமான ஆலோசனை, 2026-ஆம் ஆண்டின் ஹார்முஸ் நீர்ச்சந்தி சூழலில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. குறிப்பாக, அமெரிக்க அதிபரின் தலைமையின் கீழ், ஹார்முஸ் நீர்ச்சந்தியை ஈரானின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்பதற்காகத் தரைப்படை வீரர்களை நிலைநிறுத்த அமெரிக்கா தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகும் நிலையில் இது மிக முக்கியமானது.

துரதிர்ஷ்டவசமாக, 2026 பிப்ரவரி 28 அன்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேலால் ஈரான் மீது தொடங்கப்பட்ட இந்தப் போருக்கு முன்னதாக, அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலாளர் மார்க் ரூபியோ காலனித்துவத்தை ஆதரித்துப் பேசினார். காலனித்துவத்தின் வீழ்ச்சிக்கு எதிர்ப்புப் போராட்டங்களே காரணம் என்று அவர் வருத்தத்துடன் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, ஈரான் மீதான இந்தத் தீவிரமான ஆக்கிரமிப்பும், எண்ணெய் மற்றும் எரிவாயு வளம் மிக்க கார்க் தீவைக் கைப்பற்றவும், ஹார்முஸ் நீர்ச்சந்தியை வலுக்கட்டாயமாகத் திறக்க படைகளை அனுப்பும் முயற்சியும் உலகிற்கு ஒரு பெரும் பேரழிவை ஏற்படுத்தும். ஏனெனில், ஏற்கனவே ஹார்முஸ் நீர்ச்சந்தி மூடப்பட்டதால் உலக நாடுகள் கடுமையான பொருளாதார நெருக்கடி எனும் சுழலில் சிக்கியுள்ளன.

1956-ஆம் ஆண்டில், சூயஸ் கால்வாய் நெருக்கடியைத் தீர்ப்பதில் நேரு ஒரு மிகச்சிறந்த பாத்திரத்தை வகித்தார். எகிப்து மீது பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் இஸ்ரேல் நடத்திய ஆக்கிர

மிப்பைக் கடுமையாகக் கண்டித்த அவர், அவர்களின் இராணுவ நடவடிக்கையை காலனித்துவ ஆட்சியின் ஒரு வெளிப்பாடு என்று விவரித்தார். அந்த நெருக்கடியைக் கையாள்வதில் அவர் காட்டிய தலைமைத்துவம், அமைதியான தீர்வைப் பெறவும், எகிப்தின் இறையாண்மையைப் பாதுகாக்கவும் வழிவகுத்தது.

இதற்கு நேர்மாறாக, பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் இணைந்து நிற்பதன் மூலம், நமது வெளியுறவுக் கொள்கையின் அடிப்படை விழுமியங்களைச் சிதைத்துவிட்டார்.

## நேருவின் ஈரான் பயணம்

*1959* அக்டோபர் *1* அன்று முதலமைச்சர்களுக்கு எழுதிய கடிதத்தில், அந்த ஆண்டு தான் மேற்கொண்ட ஈரான் பயணம் குறித்து விவரித்த நேரு இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

"ஈரான் மக்கள் இந்தியாவை ஒரு விசேஷமான முறையில் எப்படிக் கருதுகிறார்கள் என்பதை என்னால் உணர முடிந்தது. நாம் வெறும் பலமான அல்லது பலவீனமான ஒரு நாடு மட்டுமல்ல, சர்வதேச விவகாரங்களில் ஒரு சிறப்பான செய்தியைக் கொண்டுள்ள ஒரு நாடு. இது உலகின் பிற பகுதிகளால் படிப்படியாகப் பாராட்டப்பட்டு வருகிறது. சில அரசாங்கங்களுக்கு நம்மைப் பிடிக்காமல் போகலாம், ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மக்கள் நம்மைப் பாராட்டுகிறார்கள், சில நேரங்களில் நம்மை உயர்ந்து நோக்குகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். நாம் ஒருபோதும் வலிமையின் மொழியையோ அல்லது பனிப்போரின் மொழியையோ பேசுவதில்லை; இந்த மாற்றத்தைக் கவனிப்பது அவர்களுக்கு ஒரு இனிமையான அனுபவமாக இருக்கிறது."

ஈரான் சந்தித்து வரும் இந்த நெருக்கடி குறித்த மோடியின் நடவடிக்கைகள், அந்த விலைமதிப்பற்ற பாரம்பரியத்திற்கு முரணாக உள்ளன. உலக அளவில் இந்தியாவின் நம்பகத்தன்மையை மீட்டெடுக்க, அந்தப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பது அவசியமாகும்.

- S.N. Sahu served as officer on Special Duty
to President of India K.R. Narayana.
- The Wire - 30 March - 2026





# அதிமுக Vs பிஜேபி

நாம் அனைவரும் "பாதை வெவ்வேறாயினும் இலக்கு ஒன்றே" என்கிற பழமொழியை பல்வேறு தலைவர்கள் தனது இலக்கின் முக்கியத்துவத்தை உணர்த்த தனது வழி பின்பற்றுபவர்களிடம் அடிக்கடி கூறுவார்கள். ஆனால் வரலாற்றில் இந்த பழமொழிக்கு தகுந்த மிக முக்கியமான சூழ்நிலையில் தமிழ்நாட்டு மக்கள் தனது இலக்கை ஒருமித்து அடைய வேண்டிய ஒரு புள்ளியில் சங்கமித்துள்ளார்கள். அதுதான் இந்த மண்ணுக்கும், மானுடத்திற்கும் முக்கிய எதிரியான பாசிஸ்டுகளை வீழ்த்துவது, யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை காட்டிலும், யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்ற மிக முக்கியமான கட்டத்தில் தமிழ்நாடு நிற்கின்றது.

*மற்ற மாநிலங்களை போல் தமிழ்நாட்டையும் அதன் ஒப்பற்ற தனித்துவத்தையும் நாசமாக்க வேண்டும் என்கிற ஒரே எண்ணத்திற்காக பல்வேறு விதமான இன்னல்களை அவர்களை எதிர்த்து நிற்பவர்களிடம் எறிகின்றார்கள்.*

*ஜனநாயக அடிப்படையில் நேர்மையாக தமிழ்நாட்டு மக்களிடம் நன்மதிப்பையும், வாக்குகளையும் பெற முடியாத அவர்கள் மதப் பாகுபாட்டையும், சகோதர சமத்துவத்திற்கு எதிரான நிலையையும், தமிழ் விரோத கொள்கைகளையும், அடங்கிய ஆட்சியை அமைப்பதற்கு அனைத்து விதமான அதிகார வர்க்கத்தின் ஏவல் விலங்குகளையும் கட்டவிழ்த்து விடுகிறார்கள். இதெல்லாம் நாம் அறிந்த ஒன்றே. இவ்வளவு மோசமானவர்களிடம் தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களின் நலனும் சென்றிட கூடாது என்பதே இலக்கு வெவ்வேறாயினும் பாதை ஒன்றே எனும் பழமொழிக்கு தகுந்த இடத்திற்கு தமிழ்நாடு மக்கள் நிற்கிறார்கள் என்ற உவமையை முன்னதாக கூறினோம்.*

*அதன் அடிப்படையில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஊடகவியலில் இருக்கும் மூத்த பத்திரிக்கையாளர்களைக் கொண்டு நடத்தப் படும் வைகறை வெளிச்சம் எனும் மாத இதழ் சார்பாக ஒவ்வொரு சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழர் விரோத அரசு என்றும் அமைந்து விடக்கூடாது என்பதற்காக தேர்தல் பிரச்சார ஏட்டை (compendium) தயார் செய்வோம்.*

*தங்களின் கையில் தவழும் இந்த பிரச்சார ஏட்டை பல்வேறு சகோதரர்களின் பல வருட கால தொடர் உழைப்பு மற்றும் தியாகங்களின் காரணமாக உருவாக்கப்பட்டது. இதை நன்முறையில் பயன்படுத்தி தமிழ், தமிழ்நாடு, தமிழர் விரோத கொள்கைகளைக் மூச்சாக கொண்டவர்களுக்கு ஆட்சியும் அதிகாரமும் செல்லாமல், இருக்க அனைத்து முயற்சிகளையும் எடுப்போம்.*

**பாதை வெவ்வேராயினும் இலக்கு ஒன்றே.**

**அந்த இலக்கு பாஜகவை தமிழ்நாட்டில் காலூன்ற விடாமல் தடுப்பதுவே!**

வாஜ்பாய் உடன் கூட்டணி சேர்ந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவருடைய ஆட்சியை கவிழ்த்த வரலாறும் உண்டு. 'நான் ஒரு தவறு செய்துவிட்டேன்; அதற்கு பரிகாரமாக இனி பாஜக உடன் அதிமுக கூட்டணி வைக்காது' என்று சொன்ன ஜெயலலிதான், பின்னர் 2004ஆம் ஆண்டில் மீண்டும் கூட்டணி வைத்தார். அக்கூட்டணி படு தோல்வியை சந்தித்தது. பிறகு லேடியா, மோடியா என்று 2014 தேர்தலை சந்தித்த ஜெயலலிதா பின்னர் பாஜகவுடன் கூட்டணி வைக்கவில்லை என்பது தனிக்கதை.

*ஆனால், ஜெயலலிதா மறைவுக்கு பிறகு மீண்டும் பாஜக உடன் கூட்டணி சேர்ந்த அதிமுக, 2019 நாடாளுமன்ற தேர்தல் மற்றும் 2021 சட்டமன்ற தேர்தலை சந்தித்தது. இதில் சட்டமன்ற தேர்தலில் பாஜகவுக்கு ஜாக்பாட் ஆக 4 எம்.எல்.ஏக்கள் கிடைத்தார்கள்.*

*ஆனால் 2021க்கு பிறகான அதிமுக பஜக கூட்டணி சர்க்கரை பொங்கலுக்கு வடகரி தான்.*

*தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை இடையேயான வார்த்தை மோதல் முற்றியுள்ளது. அண்ணாமலை பேச்சு சிறுபிள்ளைத்தனமானது என்றும் மைக் கிடைத்தால் எதை வேண்டுமானாலும் பேசுவார் என்றும் எடப்பாடி பழனிசாமி விமர்சித்திருந்த நிலையில்,*

விகடன் SUBSCRIBE

**'தலைவராக' உருவெடுத்தது எப்படி? - எடப்பாடி Vs அண்ணாமலை! | முற்றும் மோதல்**

கோபாலகிருஷ்ணன்.வே & பிரேம் குமார் Open App

எடப்பாடி, அண்ணாமலை இடையேயான வார்த்தை மோதல் தமிழக அரசியல் களத்தில் 1000 வாலாவை கொளுத்திப் போட்டிருக்கிறது!

Published: 27th Aug, 2024 at 10:33 AM Updated: 494 days ago



அவருக்கு அண்ணாமலை கடுமையாக பதிலடி கொடுத்தார்.

நம்பிக்கை துரோகி என்ற வார்த்தை எடப்பாடி பழனிசாமிக்கு நன்றாக பொருத்தமாக இருக்கும். ஒரு சமயத்தில் எடப்பாடியை பிரதமர் மோடி அருகில் அழைத்து அமர வைத்தார். அப்படி இருந்தும் அங்கிருந்து இங்கு வந்து பாஜக கூட்டணியே வேண்டாம் வென்று கூறியவர் எடப்பாடி பழனிச்சாமி.

2024 தேர்தலில் அதிமுக 134 தேர்தல் வாக்குறுதிகளை கொடுத்து உள்ளது. அதனை எப்போது நிறைவேற்றி தரப்போகிறார்.? கோவைக்கு நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நாங்கள் நிறைவேற்றுகிறோம்.

ஆனால் ஒரு எம்.பி கூட இல்லாமல் எப்படி எடப்பாடி பழனிச்சாமி வாக்குறுதியை நிறைவேற்றுவார்? கோவையில் 6 எம்எல்ஏக்களை வைத்துக்கொண்டே வெறும் 17 சதவீதம் தான் வாக்கு பெற்றது அதிமுக. 3 சட்டமன்ற தொகுதிகளில் டெபாசிட் இல்லை. ஆனால் நாங்கள் 34 சதவீத வாக்குகள் பெற்றுள்ளோம். எடப்பாடி சரித்திரம் எல்லாருக்கும் தெரியும் என்று பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தனது விமர்சனத்தை முன்வைத்து செய்தியாளர்களிடம் பேசினார்.

பாஜக சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய அண்ணாமலை, டெண்டர் முறை கட்சியாக எடப்பாடி பழனிசாமி தலைமை யிலான அதிமுக கட்சி மாறியுள்ளது. எனது நேர்மை, நாணயத்தை பற்றி எடப்பாடி பழனிசாமி எனக்கு பாடம் எடுக்க வேண்டாம். "எவரோ ஒருவரின் காலில் தவழ்ந்து பதவியைப் பிடித்த தற்குறி" எடப்பாடி பழனிசாமி என்னைப் பற்றி பேச தகுதி இல்லை என காட்டமாக விமர்சித்தார்.

விகடன் SUBSCRIBE

**"அண்ணாமலைக்கு அரசியல் அனுபவம் இல்லை; முதிர்ச்சியற்றவர்" - எடப்பாடி பழனிசாமி**

**எடப்பாடியை வேறு விதத்தில் குறை கூறலாம் ஆனால் பாஜக வை தூக்கி போட்டு மிதிப்பதில் வல்லவாரக இருந்தார். அவரின் பதில்கள் இதோ !**

## மோடியின் ஆட்சியை விமர்சித்த அதிமுக தலைவர்

10 ஆண்டுகளில் பா.ஜ.க ஒரு திட்டத்தையும் கொண்டு வரவில்லை, கடன் சுமைதான் அதிகரித்துள்ளது. மத்தியில் ரூ.55 லட்சம் கோடியாக இருந்த கடன், 10 ஆண்டுகளில் 165 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அண்ணா மலை மாநில தலைவராக பொறுப்பேற்ற பிறகு தமிழகத்திற்கு எந்த திட்டமும் கொண்டு வரவில்லை. பொய்களை மட்டுமே பேசுபவர் தான், தமிழக பா.ஜ.க தலைவராக உள்ளார். அ.தி.மு.க ஆட்சியில் ஊழல் இருந்ததாகவும் அண்ணாமலை கூறியுள்ளார். ஏன் அது எங்களுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிட்ட போது தெரியவில்லையா.

அதிமுக ஆட்சியில் இருந்தபோது போதைப் பொருள் விற்பனை செய்யப்பட்டது. டாஸ்மாக் கடைகள் அதிமுக ஆட்சியில் தொடர்ந்து திறக்கப்பட்டதாக அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளாரே என்று கேட்டபோது,

# அதிமுக *vs* பாஜக

THE TIMES OF INDIA, MADURAI
TUESDAY, APRIL 22, 2014

## I am better at governance than Modi, says Jayalalithaa

TIMES NEWS NETWORK

**Chennai:** Continuing her tirade against PM hopeful, Narendra Modi, Tamil Nadu chief minister J Jayalalithaa on Monday said she was a better administrator than the Gujarat chief minister.

Winding up her two month-long grueling campaign for the Lok Sabha elections at T Nagar in Chennai with a scathing attack on Modi's style of governance, Jayalalithaa once again detailed the various parameters under which Tamil Nadu fared better than Gujarat. Her state was far ahead of Gujarat in poverty eradication, reduction of infant mortality, maternal mortality, food grain production, and rise in number of small and medium scale industries, besides fetching foreign direct investments to the state.

"Now tell me, who is the best administrator? Gujarat's Modiya or Tamil Nadu's intha ladyaa (Gujarat's Modi or this



HITTING HARD

lady)?" Jayalalitha asked, evoking loud cheers from her supporters, who turned out in huge numbers. "This lady offers better governance in Tamil Nadu rather than Modi in Gujarat," she asserted, while exhorting voters to endorse her party in the elections scheduled for April 24 to protect the state's interests.

Her blistering remarks came against the backdrop of Modi taking repeated potshots at the AIADMK leader on various fronts, including fishermen crisis, and pointing to the AIADMK and DMK for their lack of concern for people's welfare. During the final lap, she introduced her candidates for LS polls in Tamil Nadu and Puducherry besides the Alandur bypoll. The AIADMK leader has been spearheading a lone campaign in the general elections, after ditching the Left parties in the run-up to the polls.

Accusing the DMK of indulging in corruption, Jayalalithaa urged voters to defeat the DMK. "I urge you to ensure the DMK's rout in the elections," she said. The AIADMK supremo has been taking on DMK leaders, including Dayanidhi Maran, A Raja and T R Baalu, describing them as the "face of corruption" during the ten year-rule of UPA. Not sparing the Congress for pursuing anti-people measures, she stressed the need for strengthening her hand with a vote for change at the Centre.

---

புதன்கிழமை, 16 ஜூன், 1999 — தினமணி சென்னை

## பா.ஜ அரசுக்கு 'மறதி நோய்'

### ஜெயலலிதா குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 15—
கார்கிலில் நடைபெறும் யுத்தம் குறித்து விவாதிக்க இரு முறை நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டங்களுக்கும் வேண்டுமென்றே அ.தி.மு.க.வுக்கு அழைப்பு அனுப்பவில்லை. இது கண்டிக்கத் தக்கது என்று அக் கட்சியின் பொதுச் செயலர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இப்படிச் செய்யப்பட்டதா அல்லது பா.ஜ.க. அரசின் 'செலக்டிவ் அம்னீசியா' (குறிப்பிட்ட நிகழ்வுகளை மறந்து விடும் நோய்) இதற்குக் காரணமா என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாகப் பிரதமர் வாஜ்பேயிக்கு ஜெயலலிதா செவ்வாய்க்கிழமை எழுதிய கடிதம்:

29-5-99ல் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ள அ.தி.மு.க.வுக்கு அழைப்பு அனுப்பவில்லை. பத்திரிகைகள் மூலமாக இதற்கு நான் கண்டனம் தெரிவித்தேன்.

அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேடப்பட்டி முத்தையா, மார்க்கபந்து ஆகியோர் அழைக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் கலந்து கொள்ளவில்லை என்று பா.ஜ.க. அரசு பதில் கூறியது.

நான் உடனேயே இது குறித்து முத்தையாவிடமும் மார்க்கபந்துவிடமும் விசாரித்தேன். தங்களுக்கு அழைப்பு வரவில்லை என்று அவர்கள் இருவரும் கூறினர்.

மறுபடியும் கடந்த சனிக்கிழமை அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அன்று பகல் 12.30 மணிக்கு சேடப்பட்டி முத்தையா வீட்டுக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. முத்தையா வீட்டில் இல்லாததால் அவருடைய மகன் பேசினார். பிரதமர் அலுவலகத்தில் இருந்து பேசுவதாகக் கூறிய ஒருவர் இரவு 8 மணிக்கு நடைபெறும் அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு முத்தையா கலந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்.

'அது எப்படி, சாத்தியப்படும்' என்று முத்தையாவின் மகன் கேட்டிருக்கிறார். 'என்னுடைய பணி தகவலைச் சொல்வதுதான். அதை நான் செய்து விட்டேன்' என்று மறுமுனையில் பேசியவர் கூறினார்.

அனைத்துக் கட்சி கூட்டத்தில் அ.தி.மு.க. கலந்து கொள்வதை பா.ஜ.க. அரசு விரும்பவில்லை என்பதையே இந்தச் சூழ்ச்சி காட்டுகிறது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஆயுதப் போர் நடந்து கொண்டிருக்கும் வேளையில் பா.ஜ.க. அரசின் மனோபாவத்தை நான் கண்டிக்கிறேன். பொறுப்பான அரசியல் கட்சியைச் சேர்ந்த எங்களுக்கு எல்லாக் கட்சிகளையும் போல தேசிய நலனில் இதயப்பூர்வமான அக்கறை உண்டு.

அனைத்துக் கட்சிக் கூட்டங்களுக்கு கட்சியின் தலைவருக்கு அழைப்பு அனுப்புவதுதான் நடைமுறை. கூட்டத்தில் யார் கலந்து கொள்வார்கள் என்பதைக் கட்சித் தலைவர் முடிவு செய்வார்.

தற்போது மக்களவைக் கலைக்கப்பட்டு விட்டது. ஆகவே அனைத்துக் கட்சிக் கூட்டம் குறித்த தகவல்களை சேடப்பட்டி முத்தையாவுக்கு அனுப்புவதற்குப் பதிலாக நேரடியாக எனக்கு அனுப்பியிருக்க வேண்டும்.

பா.ஜ.க. அரசின் சிறுபிள்ளைத்தனமான செய்கையை அ.தி.மு.க. ஒதுக்கித் தள்ளலாம். ஆனால் தேசிய அரசியலில் முக்கிய சக்தியான அ.தி.மு.க. ஓரங்கட்டப்படுவதை மக்கள் எப்படி ஏற்பார்கள் என்றார் ஜெயலலிதா.


ஒரே மாதிரியான சேலைகளை உடுத்தி வரு...
உங்களுக்கு சலிப்ப...
இப்போது உ...

## திராவிட கட்சிகளுக்கு முடிவு கட்டுங்கள்: சென்னையில் மோடி வலியுறுத்தல்



திஇந்து இந்து    திங்கள், செப்டம்பர் 15, 2014    மாநில

# மீனவர் பிரச்சினையில் பாஜக இரட்டை நிலை

## முதல்வர் ஜெயலலிதா குற்றச்சாட்டு

■ தூத்துக்குடி

'தமிழக மீனவர்கள் பிரச்சினையில் பாஜக இரட்டை நிலைப்பாடு கொண்டுள்ளது' என்று முதல்வர் ஜெயலலிதா குற்றம் சாட்டினார்.

தூத்துக்குடி மாநகராட்சி மேயர் இடைத்தேர்தலில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் ஏ.பி.ஆர். அந்தோணி கிரேஸை ஆதரித்து, தூத்துக்குடியில் ஞாயிற்றுக்கிழமை முதல்வர் ஜெயலலிதா பிரச்சாரம் செய்தார்.

அண்ணாநகர், குரூஸ் பர்னாந்து சிலை சந்திப்பு, திரேஸ்புரம் ஆகிய இடங்களில் திறந்த வேனில் இருந்தவாறு ஆதரவு திரட்டினார். அப்போது அவர் பேசியதாவது:

கடந்த 3 ஆண்டுகால அதிமுக அரசின் சாதனைகளை எடைபோட்டு, டெல்லிக்கு வெற்றிநடைபோட வைத்தீர்கள். மற்ற கட்சிகளுக்கு அரசியலில் இருந்தே விடை கொடுத்தீர்கள். இதன் எதிரொலியாக அனைத்து கட்சிகளும் உள்ளாட்சி இடைத்தேர்தலுக்கு விடை கொடுத்துவிட்டன.



தூத்துக்குடியில் மேயர் பதவிக்கு போட்டியிடும் அதிமுக வேட்பாளர் ஏ.பி.ஆர். அந்தோணி கிரேஸை ஆதரித்து, ஞாயிற்றுக்கிழமை முதல்வர் ஜெயலலிதா பிரச்சாரம் செய்தார். படம்: என்.ராஜேஷ்

சுயேச்சைகளும், எந்த தேர்தல் என்றாலும் போட்டியிட வேண்டும் என்ற கொள்கையுடைய தேசிய கட்சிகளும் தேர்தல் களத்தில் இருக்கின்றன. மாநகராட்சி தேர்தலில் தேசிய கட்சிக்கு வாக்களித்தால் மக்களுக்கு எந்த பயனும் ஏற்படாது. தேசிய கட்சிகளை பொறுத்தவரை தமிழகத்தில் ஒரு நிலைப்பாடு, டெல்லியில் ஒரு நிலைப்பாடு.

மீனவர்கள் நிறைந்த பகுதி தூத்துக்குடி. உதாரணமாக மீனவர் பிரச்சினையை எடுத்துக் கொள்ளலாம். தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து துன்புறுத்தி வருகின்றனர். அவர்களின் படகுகளை பிடித்து வைத்துக் கொள்வதும் வாடிக்கையாக நடந்து வருகிறது.

### இரட்டை நிலை

இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண பிரதமரை நேரிலும், கடிதங்கள் வாயிலாகவும் வலியுறுத்தி வருகிறேன். இதன் காரணமாக மீனவர்கள் விடுவிக்கப்படுகின்றனர்.

இதில், தமிழக பாஜகவின் நிலை என்ன? நிரந்தர தீர்வு காண வேண்டும் என தமிழக பாஜகவினர் கூறுகின்றனர். ஆனால், அதே கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர் ஒருவர் தமிழக மீனவர்களுக்கு எதிராக நடந்து கொள்கிறார்.

தமிழக மீனவர்களின் படகுகளை திருப்பி கொடுக்க விடாமல் தான் தடை போட்டிருப்பதாக மார்தட்டி சொல்கிறார்.

தமிழக பாஜக அவருக்கு கண்டனம்கூட தெரிவிக்கவில்லை. மத்திய அரசோ மவுனம் காக்கிறது. இப்படிப்பட்ட இரட்டை நிலைப்பாடு கொண்ட கட்சிக்கு வாக்களிப்பதால் எந்த பயனும் இல்லை.

### மின்வெட்டு இல்லை

மீனவர் பிரச்சினை, விலைவாசி உயர்வு, இலங்கை தமிழர் பிரச்சினை, அண்டை மாநிலங்களுடனான நதிநீர் பிரச்சினை போன்ற அனைத்து பிரச்சினைகளிலும் குரல் கொடுக்கும் ஒரே இயக்கம் அதிமுகதான்.

திமுக ஆட்சியில் அறிமுகம் செய்யப்பட்ட மின்வெட்டு கடந்த ஜூன் 1-ம் தேதி முதல் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது என்றார்.

---

***பாஜக போன்ற இரட்டை நிலைப்பாடு கொண்ட கட்சிக்கு வாக்களிப்பதில் எந்த பலனும் இல்லை.***

***– செல்வி ஜெயலலிதா***



சென்னை

தற்குறி எடப்பாடி பழனிசாமி என்று பேசியவர் அண்ணாமலை- திருமாவளவன்

By - மாலை மலர்

Published On 2025-08-23 08:19 IST | Update On 2025-08-23 08:19:00 IST

'நாங்க ஆட்சி செய்யும்போது புகார் வரலை. வந்தா தெரிஞ்சிருக்கும். அப்படிப் பார்த்தா பாஜக ஆளுகிற மாநிலங்கள் முழுவதும் அப்படித்தான் உள்ளது. இன்னைக்கு கூட அவங்க ஆளுகிற மாநிலத்தில் ரூ.480 கோடி போதைப் பொருள் பிடிச்சிருக்காகங்க அதுக்கு என்ன பதில் சொல்லப் போறாராம்', என்று கேட்டார்.

## அண்ணாமலையை பொளந்தபோது...

பாஜக தலைவர் அண்ணாமலை உழைக்காமல் வாயையும், நாக்கையும் வைத்து வந்தவர் அண்ணாமலைக்கு என்னை விமர்சிப்பதைத் தவிர வேறு என்ன வேலை. அவர் வேறு என்ன செய்திருக்கிறார். மைக்கை கண்டால் அவருக்கு வியாதி. உடனே பேசத் தொடங்கிவிடுவார். எல்லோரும் உழைத்து பதவிக்கு வந்தனர்.

பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை உழைக்காமல் பதவிக்கு வந்தார். அந்தக் கட்சியில் உழைத்த எத்தனையோ தலைவர்களுக்கு பதவி கிடைக்கவில்லை. இவர் வேறு ஏதோ வழியில் பதவி பெற்றுள்ளார். அதை வைத்து இன்று தலை, கால் புரியாமல் ஆடிக் கொண்டிருக்கிறார். நான் கிளைச் செயலாளர் பதவியில் இருந்து 52 ஆண்டு காலம் உழைத்துதான் முதலமைச்சர், பொதுச் செயலாளர் பதவிக்கு வந்துள்ளேன். மக்களை பற்றி அவருக்கு எதுவும் தெரியாது. அவரின் ஒரே முதலீடு வாயும் நாக்கும் தான். தன்னை மட்டுமே விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறார் எனக் கொதித்தார்

## எம்ஜிஆர்-ஐ சிறுமைபடுத்திய பாஜக தலைவர்

சமீபத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழாவுக்கு எனக்கும் அழைப்பு வந்தது. அழைப்பிதழில் தமிழக அரசின் சின்னம், மாநில அரசின் செயலாளர் பெயர்தான் அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டி ருந்தது. ஆனால் மத்திய அரசு நடத்தியதாக, முதலமைச்சர் கூறுகிறார். தி.மு.க அரசை

குற்றம்சாட்டினால், பா.ஜ.க மாநிலத் தலைவர் என்னை குறைசொல்கிறார். மத்திய தலைவர்கள் வெளியிட்டால்தான் எம்.ஜி. ஆருக்கு புகழ் கிடைக்கும் என அண்ணாமலை கூறுகிறார். அவரின் கருத்து

சிறுபிள்ளைத்தனமானது. அண்ணாமலைக்கு வரலாறு தெரியவில்லை. அண்ணாமலை பிறப்பதற்கு முன்னாகவே எம்.ஜி.ஆர் தமிழ்நாடு முதலமைச்சராக சிறப்பாக பணியாற்றியுள்ளார்.

தனக்கென்று தனி முத்திரை பதித்தவர். கொடுத்து கொடுத்து சிவந்த கரங்களை பெற்றவர் என்று பெருமையாக சொல்லப்படுபவர். அப்போது உங்கள் தலைவர்கள் எந்தப் பதவி யிலும் இல்லை. தி.மு.க-வை போல பா.ஜ.க-வும் இரட்டை வேடம் போடுகிறது. 10 ஆண்டுகளில் பா.ஜ.க ஒரு திட்டத்தையும் கொண்டு வரவில்லை, கடன் சுமைதான் அதிகரித்துள்ளது.

மத்தியில் ரூ.55 லட்சம் கோடியாக இருந்த கடன், 10 ஆண்டுகளில் 165 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அண்ணாமலை மாநில தலைவராக பொறுப்பேற்ற பிறகு தமிழகத்திற்கு எந்த திட்டமும் கொண்டு வரவில்லை. பொய்களை மட்டுமே பேசுபவர்தான், தமிழக பா.ஜ.க தலைவராக உள்ளார்.

## பிஜேபியின் எதிரி அதிமுக

"நமக்கு தி.மு.க, அ.தி.மு.க இருவரும் எதிரிகள்தான். தி.மு.க என்பது தீய சக்தி. எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க பெட்டிங் ஏஜென்ட் கட்சியாக இருக்கிறது. பழனிசாமி என்னைப் பற்றியும்,



தமிழ்முரசு

Know What They Know
New Year, New Reading Habits
THE BUSINESS TIMES

ஆணவம் வேண்டாம்: அண்ணாமலைக்கு எடப்பாடி பழனிசாமி எச்சரிக்கை

13 Apr 2024 - 5:49 pm

கட்சியைப் பற்றியும் சில கருத்துகளைத் தெரிவித்துள்ளார். யாரையோ பிடித்து, உழைக்காமல் பதவிக்கு வந்த அண்ணாமலைக்கு என்ன தெரியும். மைக்கை பார்த்தாலே பொய் பேசுவார் எனச் சொல்லியிருக்கிறார். அதற்கு நான் கருத்துச் சொல்ல வேண்டும். முன்னொரு காலத்தில் சிலுவம்பாளையத்தில் நடந்த கொலை சம்பவத்தில்

தொடர்புடைய நபர் ஒருவர் பின்னர் தி.மு.க அமைச்சரின் தயவால் அந்த வழக்கை உடைத்து சிலுவம்பாளையம் பஞ்சாயத்துத் தேர்தலில் நின்று தோற்றவர்தான்.

இந்தசூழலில் பா.ஜ.க பொதுக் கூட்டத்தில் பேசிய அண்ணாமலை, "திராவிடக் கட்சிகள் 70 ஆண்டுகளாகத் தமிழகத்தைச் சின்னாபின்ன மாக்கி உள்ளன. என கூறினார்.

### எடப்பாடி பழனிசாமி ஒரு தற்குறி

எனவே நீங்கள் நேர்மையைப் பற்றி எனக்கு நீங்கள் பாடம் எடுக்க வேண்டாம். கூவத்தூரில் நடந்தது கட்சியின் பொதுச்செயலாளரை தேர்ந்தெடுக்கும் நிகழ்வா?. அங்கு நடந்தது அலங்கோலம். டெண்டர் சிஸ்டத்தில் முதல்வரைத் தேர்வு செய்தார்கள். ஹைய்ஸட் பிட்டராக எடப்பாடி பழனிசாமி இருந்தார். என்ன பிட்டிங் என்றால் எந்த எம்எல்ஏ-வுக்கு மாசம், மாசம் எவ்வளவு என்ன பணம் கொடுக்க வேண்டும் என்பதுதான் கூவத்தூரில் நடந்த பிட்டிங் முறை. அதன்பிறகு தவழ்ந்து வந்து முதல்வர் பதவியைப் பிடித்தவர் எடப்பாடி. இந்த அண்ணாமலையைப் பார்த்துப் பேசுவதற்கு எடப்பாடி என்கிற "தற்குறிக்கு" எந்தவிதமான அதிகாரமும் கிடையாது.

### 2026 தேர்தலில் அதிமுக கூட்டணிக்கு நான்காவது இடம் என கணித்த அண்ணாமலை

இது அகந்தை. 2026-ம் ஆண்டு புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி நடத்திய கட்சி "கிணற்றுத் தவளைகள்" (எடப்பாடி) வழிநடத்திக் கொண்டிருக்கிறீர்கள். தூக்கியெறியப்படுவீர்கள். நான்காவது இடம் கூட 2026 தேர்தலில் கிடைக்காது. இந்த பழனிசாமிக்கு.

### 2019 தேர்தலில் மோடி தோற்க விரும்பிய அதிமுக

2019-ம் ஆண்டு வாரணாசியில் பிரதமர் மோடி வேட்புமனு தாக்கல் செய்வதற்குச் சென்றார். கூட்டணிக் கட்சி முதல்வர்கள் அங்குச் சென்றார்கள். நீங்களும் வாங்கண்ணா போகலாம் என்றேன். அதற்கு எடப்பாடி



Dinasuvadu

Home தமிழ்நாடு இந்தியா உலகம் சினிமா

Home > செய்திகள் > தமிழ்நாடு

எடப்பாடி பழனிச்சாமி ஓர் நம்பிக்கை துரோகி.? அண்ணாமலை கடும் தாக்கு.!

by மணிகண்டன் Posted on July 5, 2024

FOLLOW ON Google News

**விழுப்புரம்:** நம்பிக்கை துரோகி என்ற வார்த்தை எடப்பாடி பழனிசாமிக்கு பொருத்தமாக இருக்கும் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை விமர்சனம் செய்துள்ளார்.

தோற்கப்போகும் மோடிக்காக நான் ஏன் வாரணாசிக்கு வர வேண்டும் என்றார் எடப்பாடி. அதை இல்லை என்று எடப்பாடி சொல்லட்டும். என்னுடைய தலைவனைப் பற்றி எடப்பாடி எப்படி தவறாகப் பேச முடியும். அன்றிலிருந்து மானமுள்ள அண்ணாமலை கூட்டணிக் கட்சித் தலைவராக எடப்பாடியைப் பார்த்தது இல்லை. எடப்பாடி பழனிசாமி தன்னுடைய சம்பந்தி மூலமாகக் கொள்ளையடித்து ஒடிசா, பீகார், ஜார்கண்டில் இருக்கும் மைன்ஸில் சேர்ந்து வைப்பார்.

விக்கிரவாண்டி தேர்தல் பிரச்சாரத்திற்கு சென்ற பாஜக மாநில தலைவர் அண்ணாமலை அங்கு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், எடப்பாடி பழனிசாமி கண்ணாடியை எடுத்து அவரது முகத்தை நன்றாக பார்த்துக் கொள்ள வேண்டும். நல்லா பாத்துகிட்டா, அந்த கண்ணாடி எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு அதிமுக பொதுச்செயலாளராக அவர் எப்படி இருக்க வேண்டும் என்று அறிவுரை சொல்லும்.

எடப்பாடி பழனிசாமி எனக்கு அறிவுரை சொல்ல வேண்டாம். எடப்பாடி பழனிசாமியின் சரித்திரம் என்னவென்று எல்லோருக்கும் சொல்லியாக வேண்டும்.

பாஜக தேசிய அளவில் தொடர்ந்து 3வது முறையாக ஆட்சிக்கு வந்துள்ளது. இவரது சாதனை என்ன? எத்தனை தோல்வி, உள்ளாட்சி தேர்தல், சட்டமன்ற தேர்தல், இடைத் தேர்தல் என எல்லாவற்றிலும் எடப்பாடி பழனிசாமிக்கு தோல்விதான்.

## விக்கிரவாண்டி இடைத் தேர்தலை அதிமுக புறக்கணித்தது ஏன்?

சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று சொல்லிவிட்டுதானே விக்கிரவாண்டி இடைத் தேர்தலை எடப்பாடி புறக்கணித்தார். அப்போது 2026 சட்டமன்ற தேர்தலையும் அவர் புறக்கணிப்பாரா என கேள்வி எழுப்பியுள்ள அண்ணாமலை, எடப்பாடி பழனிசாமி என்பவர் ஒரு நம்பிக்கை துரோகி என்றும் குற்றஞ் சாட்டியுள்ளார் அதற்கு எடப்பாடி "தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை ஆணவத்தோடு பேசுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்." அண்ணாமலை புளுகுமூட்டையை அவிழ்த்து விடுகிறார். ஒரு கவுன்சிலராக முடியவில்லை. நீங்கள் வந்து அதிமுகவை ஒழிக்க முடியுமா? பதவி வரும்போது பணிவு வரவேண்டும். அது உங்களிடம் இல்லை. தலைக்கனத்தில் ஆடக்கூடாது. மரியாதை கொடுத்தால்தான் மனிதராகப் பிறந்தவருக்கு மரியாதை," என்று இபிஎஸ் கடுமையாகச் சாடினார்.

## பாஜகவின் உண்மையான வாக்கு சதவீதம்

தமிழ்நாட்டில் பாஜக எங்கே வளர்ந்துள்ளது?. 0.52 சதவீதம் குறைவான வாக்குகளையே பாஜக பெற்றிருக்கிறது. 500 நாட்களில் 100 வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன் எனக்கூறித்தான் கோவை மக்களின் வாக்குகளை அண்ணாமலை பெற்றார். வேண்டுமென்றே அதிமுகவை குறை சொல்லி திட்டமிட்டு பேசி வருகிறார் அண்ணாமலை.

பாஜக தலைவராக தமிழ்நாட்டு மக்களுக்கு மத்திய அரசிடம் இருந்து என்ன திட்டங்களை அண்ணாமலை பெற்று தந்திருக்கிறார்?. தமிழ்நாட்டு மக்களுக்கு எந்த நன்மையும் செய்யாத பாஜக தலைவர் அண்ணாமலை வாயால் வடை சுடுகிறார். மற்ற கட்சிகளை அவதூறாக பேசுவதை அண்ணாமலை வாடிக்கையாக வைத்துள்ளார்.

## ஜெயலலிதாவை இந்துதுவவாதி எனக்கூறிய பாஜக தலைவர்

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அளித்த பேட்டி ஒன்றில், "ஜெயலலிதா இந்துத்துவ தலைவர்" என்னும் கருத்துகளை முன்வைத்துள்ளார். அவர் விட்டுச்சென்ற இடத்தைப் பாஜக நிரப்பி வருவதாகவும் பேசியுள்ளார்.

அதற்கு, ஜெயலலிதா மதமாற்ற தடைச் சட்டத்தைக் கொண்டு வந்ததைப் பற்றியும்


இந்து தமிழ் திசை

"ஜெயலலிதா வழியில் 'இந்துத்துவ' கொள்கை..." - அண்ணாமலை சர்ச்சை பேச்சும், பின்புல அரசியலும்

நிவேதா தனிமொழி

Published: 25 மே, 2024 அன்று 9:02 PM

குறிப்பிட்டிருக்கிறார். இது பெரும் சர்ச்சையாகி உள்ளது.

இதற்கு அதிமுக தலைவர்கள் கண்டனத்தைப் பதிவு செய்து வருகின்றனர்.

இது தொடர்பாக அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில், “மறைந்த முதல்வர் ஜெயலலிதா சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டவர். இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் உள்ளிட்ட மற்ற மதங்களுக்குப் பொதுவாகத் திகழ்ந்தவர். பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று, மறைந்த முதல்வர் ஜெயலலிதா மீது அவதூறு பரப்புகிறார். இந்து மதத்தை மட்டுமே சார்ந்தவர் என்று, அவரது பெயருக்கும், புகழுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் வேண்டுமென்றே பேட்டி கொடுப்பது கடும் கண்டனத்துக்குரியது" என்று கூறியுள்ளார்.

ஊழல் குறித்து பேச அண்ணாமலைக்கு எந்த ஒரு தகுதியும் இல்லை. அண்ணாமலை மீது அவரது கட்சியினரே பல்வேறு குற்றச்சாட்டு களை கூறி வருகின்றனர். திமுகவின் 'பி' டீமாக அண்ணாமலை செயல்பட்டு வருகிறார்.

ரவுடிகள், பண மோசடி செய்தவர்களுக்கு கட்சியில் பொறுப்பு வழங்கியுள்ளார் அண்ணாமலை. ஊழல் காரணமாக கர்நாடகாவில் பாஜக ஆட்சியை இழந்தது. கவுன்சிலராகக்கூட அண்ணாமலை இருந்த தில்லை என அதிமுக எம்.பி. சி.வி.சண்முகம் கூறினார்.

பாஜகவில் மாநில தலைவர் பதவி என்பது பொம்மை பதவி. பொம்மையை எங்கு வேண்டுமானாலும் வைக்கலாம், கோமாளி யாகவும் வைக்க முடியும். பாஜக மாநில தலைமை கட்டுக்கோப்பு இல்லாமல் உள்ளது. பாஜகவில் அகில இந்திய தலைமைக்கு தான் அதிகாரம் உள்ளது. அண்ணாமலையின் பேச்சு குறித்து மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் விவாதிக்க உள்ளோம். ஜெயலலிதா குறித்து அவதூறாக பேசியவர்களை சும்மா விட மாட்டோம் என்றார்.

ஜெயலலிதா குறித்து இழிவாக பேசுவது ஆண்டவனாக இருந்தாலும் பொறுத்துக்கொள்ள மாட்டோம்-அதிமுக முன்னாள் அமைச்சர் ஓ.எஸ் மணியன்.

ஜெயலலிதாவை ஏற்றுக்கொள்பவர்களுடன் மட்டும் தான் கூட்டணி - பொள்ளாச்சி ஜெயராமன் பேட்டி

30 ஆண்டுகால அரசியல் வாழ்க்கையில் ஜெயலலிதா ஏராளமான சாதனைகள் செய்துள்ளார்.

ஜெயலலிதாவின் சாதனைகளை பொறுக்க முடியாமல் சிலர் காழ்ப்புணர்ச்சியில் பேசுகின்றனர். 1996ஆம் ஆண்டு மட்டும் ஜெயலலிதா மீது 49 வழக்குகள் போட்டனர். அண்ணாமலை அரசியலுக்கு புதியவர் என்பதை அடிக்கடி நிரூபித்து வருகிறார் ஜெயலலிதா பற்றி அறியாமல் அண்ணாமலை பேசுகிறார் அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்,

ஜெயலலிதாவை விமர்சித்ததை எந்த காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, பா.ஜ.க. அகில இந்திய தலைவர் ஜே.பி.நட்டா ஆகியோர் அண்ணா மலையை கண்டிக்க வேண்டும். ஏனென்றால் நாங்கள் கூட்டணி தர்மத்தை மதித்து வருகிறோம்.

கூட்டணி தர்மத்தை அண்ணாமலை மீறும்போது, கூட்டணி தொடர்கிறதா? இல்லையா? என்ற கேள்வி நிச்சயமாக எழும். இதற்கு பதில் சொல்ல வேண்டியவர்கள் அமித்ஷாவும், ஜே.பி.நட்டாவும் தான்.


முகப்பு › செய்திகள் › தமிழக செய்திகள் › ஜெயலலிதா குறித்து...

## ஜெயலலிதா குறித்து அண்ணாமலை அதிரடி கருத்து: அதிமுக தலைவர்கள் ஆவேசம்

ஊழல் விவகாரத்தில் ஜெயலலிதா குறித்து பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கூறிய கருத்தால் அதிமுக தலைவர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.;



ஊழல் வழக்கில் ஜெயலலிதாவுக்கு தண்டனை விதிக்கப்பட்டது குறித்த தனது கருத்துக்களில் அண்ணாமலை உறுதியாக உள்ளார்.

ஒரு அறிக்கையில், பாஜக தலைவர், மாநில அரசியல் வரலாற்றில் நடந்தவற்றைப் பற்றி மட்டுமே தான் பேசியதாகக் கூறினார், மேலும் அவரது கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று யாராவது நிரூபித்தால், அதை ஏற்றுக்கொள்ளத் தயங்க மாட்டேன் என்றும் கூறினார்.

புதுப்பிக்கப்பட்டது - ஜூன் 14, 2023 03:16 pm IST - சென்னை

தி இந்து பீரோ

## ஜெயலலிதாவை ஊழல் வழக்கில் 'தண்டனை' பெற்றவர் எனக்கூறிய பாஜக தலைவர்

*ஜூன் 13, 2023 அன்று, ஊழல்தான் மாநிலத்தில் மிக முக்கியமான பிரச்சனை என்றும், குறுகிய கால ஆதாயங்களுக்காக மாநிலத்தின் எதிர்காலத்திற்கான தனது கொள்கைகள் மற்றும் கனவுகளில் சமரசம் செய்ய விரும்பவில்லை என்றும் கூறினார்.*

*மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா ஊழல் வழக்கில் 'தண்டனை' பெற்றதாக அவர் கூறியதற்கு கண்டனம் தெரிவித்து அதிமுக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதற்குஅவர் பதிலளித்தார்.*

*திரு. அண்ணாமலையை ஒரு சில அதிமுக தலைவர்கள் கடுமையாக விமர்சித்ததைத் தொடர்ந்து இந்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இதுதான் என்னுடைய அரசியல்' என்ற தலைப்பிலான அறிக்கையில், அண்ணாமலை, மாநில அரசியல் வரலாற்றில் நடந்தவற்றைப் பற்றி மட்டுமே பேசியதாகவும், தனது கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று யாராவது நிரூபித்தால், அதை ஏற்றுக்கொள்ளத் தயங்க மாட்டேன் என்றும் கூறினார்.*

*அதிமுக ஆட்சிகளும் கூடவா? நான் எந்தக் கட்சியின் பெயரையும் குறிப்பிடவில்லை, ஆனால் பொதுக் கருவூலப் பணத்தை மோசடி செய்த எந்த அரசாங்கத்தையும் நாங்கள் கேள்வி கேட்போம். ஊழல் அடிப்படையில் 1991-96 மிக மோசமான காலகட்டங்களில் ஒன்றாகும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? தமிழ்நாட்டில் பல நிர்வாகங்கள் ஊழல் நிறைந்தவையாக இருந்தன. முன்னாள் முதல்வர்கள் நீதிமன்றங்களில் தண்டிக்கப் பட்டுள்ளனர். அதனால்தான் தமிழகம் மிகவும் ஊழல் நிறைந்த மாநிலங்களில் ஒன்றாக மாறி யுள்ளது. ஊழலில் அது முதலிடத்தில் உள்ளது என்று நான் கூறுவேன். என ஜெயலலிதாவை கடுமையாக விமர்சித்தார்.*

## பேரறிஞர் அண்ணாவை விமர்சித்த பாஜக தலைவர்

*அண்ணாமலை என்ன பேசினார்? - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபுவை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தில் அண்ணாமலை பங்கேற்றுப் பேசியபோது, முன்னாள் முதல்வர் அண்ணாதுரையை கடுமையாக விமர்சித் திருந்தார். அப்போது அவர், "1956-ம் ஆண்டு மதுரை மீனாட்சி அம்மன் ஆலய வளாகத்தில்*



தமிழகம்

"அண்ணாவின் புகழுக்கு களங்கம் கற்பித்த அண்ணாமலை வருத்தம் தெரிவிக்க வேண்டும்" - அதிமுக

செய்திப்பிரிவு

Published: 15 செப்டம்பர், 2023 அன்று 4:46 PM

Updated: 15 செப்டம்பர், 2023 அன்று 5:08 PM

10 நாட்கள் நடைபெற்ற ஒரு தமிழ் மாநாட்டின் 4-ம் நாளன்று, அழைக்கப்படாத நிலையில் அங்கு வந்து பேசிய முன்னாள் முதல்வர் அண்ணாதுரை, பார்வதி தேவியைப் பற்றி விமர்சித்திருந்தார்.

மறுநாள் மேடைக்கு வந்த முத்துராமலிங்கத் தேவர், 'சிவபுராணம் இயற்றப்பட்ட மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு வந்து உமயவளை தப்பாக பேசியது யார் என கேள்வி எழுப்பினார். எல்லோரும் நெளிகிறார்கள். அண்ணாதுரையை மதுரையில் ஒளித்துவைத்திருக்கிறார்கள். அவரால் வெளியே செல்ல முடியவில்லை. முத்துராமலிங்கத் தேவர் உக்கிரமாகப் பேசினார். கடவுளை நம்ப மறுப்பவர்கள், நம்புபவர்களைப் பற்றிப் பேசக்கூடாது. மதுரை மீனாட்சி அம்மனுக்கு இதுவரை பாலில்தான் அபிஷேகம் நடந்திருக்கிறது. மீண்டும் ஒருமுறை அவ்வாறு பேசினால், அம்மனுக்கு ரத்தத்தில் அபிஷேகம் நடக்கும் எனக் குறிப்பிட்டார். இதையடுத்து, முத்துராமலிங்கத் தேவரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு வந்தவர் அண்ணாதுரை" என்று அண்ணாமலை பேசியிருந்தார்.

மறைந்த முதல்வர் அண்ணாதுரையின் புகழுக்கு களங்கம் கற்பித்ததற்காக பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று அதிமுக வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக சென்னையில் செய்தியாளர் களிடம் பேசிய அக்கட்சியின் அமைப்பு செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஜெயக்குமார், "மறைந்த தலைவர்களை விமர் சிப்பதை அண்ணாமலை கைவிட வேண்டும். அவர் ஏற்கெனவே ஜெயலலிதா குறித்துப் பேசியதற்காக கடும் கண்டனம் எழுந்ததை அடுத்து அதற்காக மன்னிப்பு கேட்டார். பின்பு தான் அவ்வாறு பேசவில்லை என விளக்கம் அளித்தார். தற்போது அண்ணாவின் புகழுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் அண்ணாமலை பேசி இருக்கிறார்.

முன்னாள் முதல்வர் அண்ணாதுரை இன்று இல்லை என்றாலும் உலகத் தமிழர்களால் போற்றப்படும் தலைவர் அவர். அவரைக் கொச்சைப்படுத்தும் வகையில் அண்ணாமலை பேசி இருக்கிறார். அண்ணாமலை கூறியது போன்ற ஒரு சம்பவம் நடக்கவே இல்லை. முத்துராமலிங்கத் தேவரும் அண்ணாதுரையும் நெருங்கிய நண்பர்கள். அதுமட்டுமல்ல, முத்துராமலிங்கத் தேவரை நினைவுகூறும்

## திராவிட இயக்கத் தலைவர் அண்ணாதுரை குறித்த அண்ணாமலையின் கருத்துக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

சனாதன தர்மம் குறித்த அமைச்சர் பி.கே.சேகர் பாபுவின் கருத்துக்கு எதிரான கண்டன நிகழ்ச்சியில் பாஜக தலைவர் அண்ணாமலை உரையாற்றும்போது, 1950களில் இந்து நம்பிக்கைக்கு எதிராக அண்ணா ஒரு விமர்சனக் கருத்தை வெளியிட்டதாகக் கூறினார்.

**எழுதியவர்: ஐஏஎன்எஸ்**

வெளியிடப்பட்டது: 18 செப். 2023 மாலை 4:26

விதமாக எம்ஜிஆர், ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. முத்துராமலிங்கத் தேவர் மீது மிகப்பெரிய மதிப்பு கொண்ட கட்சி அதிமுக. அண்ணாதுரை மதிப்பு மிக்கவர்.

அண்ணாமலை எந்தப் புத்தகத்தில் படித்தார், எங்கு படித்தார் என தெரியவில்லை. திடீரென வந்து அண்ணாதுரையை தவறாகப் பேசினால் அதனை தொண்டர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அண்ணாமலையின் பேச்சுக்காக நாங்கள் எங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கிறோம். அண்ணாமலை தனது பேச்சுக்காக வருத்தம் தெரிவிக்க வேண்டும். மீண்டும் இப்படிப் பேசினால், அண்ணாமலைக்கு உரிய பதிலடி கொடுக்கப்படும்" என்றார்.

| பாஜக தலைவர் அதிமுக தலைவர் பற்றி | அதிமுக தலைவர் பாஜக தலைவர் பற்றி |
|---|---|
| எடப்பாடி ஒரு நம்பிக்கை துரோகி தற்குறி. | அண்ணாமலை ஒரு புழுகு மூட்டை. |
| எவரோ ஒருவரின் காலில் தவழ்ந்து பதவியைப் பிடித்த | அண்ணாமலை உழைக்காமல் ஏதோ முறையில் |
| எடப்பாடி ஒரு அரை வேக்காடு | அண்ணாமலைக்கு வாயும் நாக்கும் தான் முதலீடு |
| அதிமுக டெண்டெர் கட்சி ஹைஎஸ்ட் பிட்டெர் | அண்ணாமலை வாயால் வடை சுடுகிறார். |
| ஊழல் அடிப்படையில் 1991-96 மிக மோசமான காலகட்டங்களில் ஒன்றாகும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? தமிழ்நாட்டில் பல நிர்வாகங்கள் ஊழல் நிறைந்தவையாக இருந்தன. ஜெய்லலிதா ஒரு உழல் வாதி | அண்ணாமலை மீது அவரது கட்சியினரே பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறி வருகின்றனர்.ரவுடிகள், பண மோசடி செய்தவர்களுக்கு கட்சியில் பொறுப்பு வழங்கியுள்ளார் அண்ணாமலை. **ஊழல் காரணமாக கர்நாடகாவில் பாஜக ஆட்சியை இழந்தது. கவுன்சிலராகக்கூட அண்ணாமலை இருந்ததில்லை** என அதிமுக எம்.பி. சி.வி.சண்முகம் கூறினார். |
| அண்ணாமலை புளுகுமூட்டையை அவிழ்த்துவிடுகிறார். **ஒரு கவுன்சிலராக முடியவில்லை.** நீங்கள் வந்து அதிமுகவை ஒழிக்க முடியுமா? பதவி வரும்போது பணிவு | 2026-ம் ஆண்டு புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி நடத்திய கட்சி “ <u>கிணற்றுத் தவளைகள்</u> “ ( எடப்பாடி) வழிநடத்திக் கொண்டிருக்கிறீர்கள். |
| மிழ்நாட்டில் பாஜக எங்கே வளர்ந்துள்ளது?. **0.52 சதவீதம் குறைவான வாக்குகளையே பாஜக பெற்றிருக்கிறது. 500 நாட்களில் 100** | ஒரு எம்.பி கூட இல்லாமல் எப்படி எடப்பாடி பழனிச்சாமி வாக்குறுதியை நிறைவேற்றுவார்? கோவையில் 6 எம்எல்ஏக்களை |
| **10 ஆண்டுகளில் பா.ஜ.க ஒரு திட்டத்தையும் கொண்டு வரவில்லை, கடன் சுமைதான் அதிகரித்துள்ளது. மத்தியில் ரூ.55 லட்சம் கோடியாக இருந்த கடன், 10 ஆண்டுகளில் 165 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.** | எடப்பாடி பழனிசாமி எனக்கு அறிவுரை சொல்ல வேண்டாம். எடப்பாடி பழனிசாமியின் சரித்திரம் என்னவென்று எல்லோருக்கும் சொல்லியாக வேண்டும். பாஜக தேசிய அளவில் தொடர்ந்து 3வது முறையாக |
| அதிமுக ஆட்சியில் இருந்தபோது போதைப் பொருள் விற்பனை செய்யப்பட்டது. டாஸ்மாக் கடைகள் அதிமுக ஆட்சியில் தொடர்ந்து திறக்கப்பட்டதாக | நாங்க ஆட்சி செய்யும்போது புகார் வரலை. வந்தா தெரிஞ்சிருக்கும். **அப்படிப் பார்த்தா பாஜக ஆளுகிற மாநிலங்கள் முழுவதும் அப்படித்தான் உள்ளது. இன்னைக்கு கூட** |
| 2019-ம் ஆண்டு வாரணாசியில் பிரதமர் மோடி வேட்புமனு தாக்கல் செய்வதற்குச் சென்றார். கூட்டணிக் கட்சி முதல்வர்கள் அங்குச் சென்றார்கள். நீங்களும் வாங்கண்ணா | **நான்காவது இடம் கூட 2026 தேர்தலில் கிடைக்காது. இந்த பழனிசாமிக்கு.** |

*இப்படி அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா, எடப்பாடி பழனிச்சாமி என அதிமுக-வின் தலைவர்களை இவ்வளவு கடுமையாக விமர்சித்த பாஜக விடம் 2026 தேர்தலுக்காக கூட்டணி வைப்பது, அதிமுக கொள்கைகளை விட்டு தடம் புரண்டு தனிபட்ட சுயலாபத்திற்காக தமிழக மக்களின் நலன்கலை அடகுவைக்க துணிந்து விட்டதையும், அதிமுக அழியும் தருவாயில் உள்ளதையும் காட்டுகிறது.*



சட்டப் பேரவைத் தலைவர் திரு. பலுசு சாம்ப மூர்த்தியும் ஆற்றிய நீண்ட விளக்கத்திற்குப் பின் வந்தேமாதரப் பாடல் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இதுதான் அன்றும் இன்றும் என்றும் இஸ்லாமியர்களின் நிலை. வீண் விவாதம் தேவையற்றது. “ஹூப்புல் வதனி மினல் ஈமான்” “நாட்டுபற்று இறை விசுவாசத்தில் பாதி” என்ற நபிமொழி நாட்டுப்பற்றை மெய்ப்பிப்பதாக உள்ளது.

முதலில் வந்தே மாதரப்பாடல் 1896-ஆம் ஆண்டு கொல்கத்தா பீடன் சதுக்கத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பாடப்பட்டது.

# வந்தேமாதரப் பாடல் பற்றி 1938-ம் ஆண்டு தமிழக சட்ட மன்றத்தில் நடைபெற்ற விவாதம்

திரு. இராஜகோபாலாச்சாரியென்னும் திரு. இராஜாஜி அவர்கள் தமிழக பிரதம அமைச்சராக வீற்றிருக்கின்றார். கல்கத்தாவை சேர்ந்த திரு. பங்கிம் சந்திர சாட்டர்ஜியால் இயற்றப்பட்ட வந்தேமாதரப் பாடல் பற்றிய விவாதத்தில் பங்கு பெற்ற அன்றைய பொதுப் பணித்துறை அமைச்சர் "ஜனாப். யஃகூப் ஹசன்சேட்" வந்தேமாதரப் பாடல் பற்றி பின்வருமாறு விளக்கமளித்தார்.

இந்த தேசத்தை வந்தேமாதரப் பாடல் பாரத மாதவாக உருவகப்படுத்தி வணங்கச் சொல்கிறது. இஸ்லாமியர்களை பொறுத்தமட்டில் இறைவன் ஒருவனைத் தவிர தாய், தந்தை, குரு, அரசன் யாராக இருந்தாலும் வணங்கத்தக்கவர்களல்ல. இந்துக்கள் பூமியை தாயாக வணங்குவதைப் போல இஸ்லாமியர்கள் தாங்கள் புனிதமாக கருதும் மக்காவாக இருக்கட்டும் அல்லது நபிகள் நாயகம் அடக்கமாகியிருக்கும் மண்ணாக இருந்தாலும் கூட வணங்குவதில்லை.

அல்லாமா சர். முஹம்மது இக்பால் இயற்றிய “ஸாரே ஜஹான்ஸே, அச்சா இந்துஸ்தான் ஹமாரா” யென்னும் தேசப்பாடலை நாங்கள் முழு மனதுடன் ஏற்றுக்கொள்கிறோம். எல்லா உலகிலும் சிறந்தது எங்கள் இந்துஸ்தானம் என்பதாகும் இதன் பொருள். இதில் பரிபூரண சம்மதம் உண்டு என்று பதிலளித்தார்.

1-3-1938-ல் கூடிய சட்டமன்றத்தில் அன்றைய முதலமைச்சர் திரு. இராஜாஜியும்,



பீ.எம். அப்துல் கரீம்

(ஆலோசனைக்குழுத் தலைவர் இ.இ.மு.சங்கம், குளச்சல்)

பாடியவர் இரவீந்திரநாத் தாகூர். அப்போது பலத்த ஆரவாரங்களுக்கிடையே வந்தேமா தரப்பாடல் இந்தியாவின் தேசிய கீதமாக அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் இந்த முடிவுக்கு கவி ரவீந்திரநாத் தாகூரே எதிர்ப்பு தெரிவித்தார்.

வந்தேமாதரப்பாடல் துர்க்கை அன்னையை வணங்குவது போல பாடப்பட்டுள்ளது. இந்தியாவில் இந்துக்கள் தவிர முஸ்லீம்கள் மற்றும் பல மதத்தினர் இருக்கின்றனர். எனவே இந்தப் பாடலை தேசீய கீதமாக அங்கீகரிக்கக் கூடாது என்றும் 1937-ம் ஆண்டு சுபாஸ் சந்திரபோசுக்கு எழுதிய கடிதத்தில் ரவீந்திரநாத் தாகூர் கூறி இருந்தார். இதனால் ஜன கன மன பாடலா, வந்தேமாதரப் பாடலா எதை தேசிய கீதமாக பாடுவதுயென நாடு பூராவும் பிரச்சினை ஏற்பட்டு 1950-ம் ஆண்டு ஜனவரி 24-ம் தேதி பாரளுமன்றத்தில் டாக்டர். இராஜேந்திர பிரசாத் ஜன கன மன பாடல் தான் இந்தியாவில் தேசிய கீதமாக இருக்கும். ஆனால் வந்தே மாதரப்பாடலக்கு தேசிய கீதத்துக்குரிய அதே முக்கியத்துவம் கொடுக்கப்படுமென அறிவித்து பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

# ஏப்ரல்; கூரியூர் ஜின்னா ஷஹீத் மாதம்



**ராமன் சின்னப்பொண்ணு என்ற சிகப்பி அம்மாள் இவர்கள் இருவருக்கும் ராமநாதபுரம் மாவட்டம் பாலையேந்தல் கிராமத்தில் 1930ஆம் ஆண்டு பிறந்தவர் தான் சீலையன். நான்கு சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரி உடன் பிறந்தவர்தான் சீலையன்.**

இந்திய சமூகத்தில் நிலவும் சாதிகளின் அடிப்படையில் மிகவும் தாழ்த்தப்பட்ட ஒரு ஜாதியை சேர்ந்தவர் தான் சீலையன் அவர்கள். தந்தை குடிக்கு அடிமையானதால் குடும்பத்தை காப்பாற்ற கடலின் மீன் பிடிப்பது முத்து குளிப்பது போன்ற வேலைகள் செய்து வந்தார். தனது 17ஆம் வயதில் காவல்துறையில் பணியில் சேர்ந்தார். ராமநாதபுரம் மாவட்டம் கூரியூரை சேர்ந்த வசந்தா என்ற பெண்ணை திருமணம் செய்கிறார். அவர்களுக்கு 12 குழந்தைகள் பிறக்கிறது. தன்னுடைய பிள்ளைகள் அனைவருக்கும் நல்ல கல்வி கற்க ஏற்பாடு செய்தார். காவல்துறை பணியில் இருந்த போதும் அங்கும் சாதியின் பெயரால் பல இன்னல்களுக்கு ஆளாகுகிறார். அப்போது தானும் தன் சமுதாய மும் ஏன் சாதியின் பெயரால் இப்படி இழிவு படுத்தப்படுகிறது என்று சிந்திக்க ஆரம்பித்தார். சாதியை கடவுளின் பெயரால் கற்பிதம் செய்யப் பட்டதால் கடவுளே இல்லை என்ற முடிவுக்கு வருகிறார். அதனால் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து பொதுவுடமை மேடைகளில் முழங்க ஆரம்பித்தார். தான் சார்ந்த சமூகத்தின் முன்னேற்றத்திற்காக கடுமையாக உழைத்தார். அதற்காக பலமுறை சிறையும் சென்றார். அம்ம மக்களுக்காக உழுதுண்ணும் வேளாளர் சங்கம் என்ற அமைப்பை நிறுவினார்.

இந்த சங்கத்தின் வளர்ச்சியையும் அதன் பணிகளையும் கண்டு உயர்ஜாதி இந்துக்கள் பல தொல்லைகளை கொடுத்தனர். 1960ம் ஆண்டு ராமநாதபுரத்தில் பெரும் ஜாதி கலவரம் மூண்டது. அப்போது சிலையனை கொலை செய்ய முயற்சி நடந்தது. ஆனால் அதில் அவர் தப்பினார். இந்தக் கலவரத்தில் அவர் சார்ந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சி தாழ்த்தப்பட்ட மக்களை காப்பாற்றாமல் கையாளாகாமல் நின்றதை பார்த்து அவரது சிந்தனை வேறு விதமாக திரும்பியது. எல்லோரும் ஒன்று என்று சொல்லி விட்டு ஏன் நமது சாதிக்கு உதவவில்லை என்ற எண்ணம் மேலோங்கியது. சீலையன் உட்பட தலித் தலைவர்களை மிசாவில் அப்போது அரசு கைது செய்தது.

சிறையில் இருந்து யோசிக்கிறார். இந்த கொடுமைகள் அனைத்திற்கும் மூலதனம் எது? எது நம்மை விடுவிக்கும் என்று திரும்பத் திரும்ப யோசிக்கிறார். அப்போது அவர் இந்த சாதிக் கொடுமைகளிலிருந்து விடுவிக்க நமக்கு ஒரே ஆயுதம் இஸ்லாம் தான் என்று முடிவு செய்து இஸ்லாத்தை ஏற்கிறார். முகமது அலி ஜின்னா என்று பெயரில் செயல்படுகிறார்.

தன்னோடு நூற்றுக்கும் மேற்பட்ட தலித் மக்களையும் இஸ்லாத்தில் தழுவச் செய்கிறார். இவ்வளவு நாள் ஜாதியின் பெயரால் கொடுமை செய்தவர்கள் இப்போது அவரிடம் இஸ்லாத் திற்கு மட்டும் போகாதே என்று கெஞ்சுகிறார்கள் ஆசை வார்த்தை காட்டுகிறார்கள். அரசு தொடர்ந்து நெருக்கடி கொடுத்துக் கொண்டே இருக்கிறது இவர் இஸ்லாத்தில் அதிகம் அதிகம் தன்னை பிணைத்துக் கொண்டே வந்து தனது குடும்பத்தினர் அனைவரையும் இஸ்லாத்தில் இணைத்துவிட்டார்.









குர்ஆனை கற்று தேர்ந்ததோடு தனது மக்கள் அனைவரையும் இஸ்லாம் குறித்து அறிய மதரசாக்களுக்கு அனுப்புகிறார். காவலர் பணியை உதறிவிட்டு தனது மக்களின் விடுதலைக்காக முழு நேரமாக பணியாற்றுகிறார். சிறு வயதில் ராமநாதபுரம் மாவட்டத்து அக்ரகாரத்தில் நடந்து செல்லும் பொழுது ஓட ஓட விரட்டப் பட்டது அவர் கண்முன்னே வந்து செல்கிறது.

இஸ்லாத்தை ஏற்றவுடன் அந்த அக்கிரகாரத்து மையப் பகுதியிலேயே ஒரு வீட்டை வாங்கி குடியேறுகிறார். அவரது பிரச்சாரத்தால் சாதியால் இழிவுபடுத்தப்பட்ட மக்கள் கிராமம் கிராமமாக இஸ்லாத்தை தழுவுகிறார்கள். இதை பொறுக்காத அப்போதைய ஆட்சியாளர்கள் மிசாவிலும் மற்ற பல வழக்குகளிலும் *35*க்கும் மேற்பட்ட முறை அவரை வழக்கில் சிறையில் அடைக்கின்றனர். ஆனால் அவரோ சோர்ந்து போகாமல் இன்னும் வேகமாக அந்த மக்களை விடுவிக்க களம் காண்கிறார். அரசு எந்திரம் தான் தோல்வியை தழுவுகிறது.

ஆதிக்க சாதிகளின் அஸ்திவாரம் ஆட்டம் கண்டதால் மதமாற்ற எதிர்ப்பு மாநாடு என்ற ஒரு மாநாட்டை *1995*ஆம் ஆண்டு நடத்து கின்றனர். அதில் கூறியுள்ள ஜின்னா சாகிப் அவர்களை கொலை செய்ய திட்டம் தீட்டப்படு கிறது. *20-04-1995* அன்று இரவு இஷா தொழுகையை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தவரை ஒரு குரல் அழைக்கிறது.

யாரோ தெரிந்தவர்தான் என்று நினைத்துக் கொண்டு ஜின்னா சாஹிப் அங்கு சென்றார். கொலை வெறியர்கள் அவரை சராமாரியாக வெட்டினர். ஓம் காளி ஜெய் காளி என்று சொல்லிக்கொண்டு வெட்டியவர்கள் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர். ஜின்னா சாஹிப் அவர்கள் ஒரு மாதிரியாக சமாளித்து தனது வாகனத்தில் தனது வீட்டை வந்து சேர்ந்தார். அல்லாஹு அக்பர் என்று கூறிக்கொண்டு வீட்டு வாசலில் சரிகின்றார். அன்றிரவு பன்னிரண்டு முப்பது மணி அளவில் அவரது உயிர் பிரிந்தது.

*21-04-1995* அன்று அவரது அடக்க ஊர்வ லத்தில் நாலு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. உலகில் ஆதிக்க சக்திகள் தங்களுக்கு எடுபிடியாக நடக்க வேண்டும் என்று சாதி வேதங்களையும் நிற பேதங்களையும் கற்பித்து நடைமுறையில் இன்றும் வைத்துக் கொண்டு உள்ளார்கள்.

அந்த இழிவுபடுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களை மீட்பதற்காக அந்த மக்களில் இருந்து போராளிகள் தோன்றும் பொழுது அந்தப் போராளிகளை எதிர்கொள்ள முடியாமல் அவர்கள் கொள்வதைதான் இந்த ஆதிக்கவாதிகள் இன்று வரை வழமையாக கொண்டு உள்ளனர்.

அந்த வகையில் இன நிறவெறிக்கு எதிராக போராடிய அதற்கு தீர்வாக இஸ்லாத்தை சொன்ன மால்கம் x அவர்களையும் அமெரிக் கர்கள் சுட்டுக் கொன்றனர். அதேபோன்று நமது பகுதியில் சில எண் என்ற ஜின்னா சாஹிப் அவர்களையும் வெட்டிக் கொன்றனர். இவர் களெல்லாம் கொல்லப்பட்ட போதிலும் அவர்கள் எந்த நோக்கத்திற்காக இந்த உலகில் பணி செய்தனரோ அந்த நோக்கம் வெற்றிகரமாக மென்மேலும் பெருகிக்கொண்டே தான் போகின்றது.

ஏப்ரல் மாதம் இந்தியாவில் சாதிக் கொடுமை களுக்கு எதிராக போராடியவர்களின் மாதமாக இருக்கிறது. சாதிக் கொடுமைக்கு எதிராக போராடிய அம்பேத்கர் அவர்களை நினைவு படுத்தும் மாதமாகவும் கூரியூர் ஜின்னா அவர்களை போற்றும் மாதமாகவும் ஏப்ரல் மாதம் இருக்கிறது. அவர்களின் பாதையில் நாமும் இந்த மக்களை மீட்பது ஒன்றே தான் இன்றைய அவசிய தேவையாகவும் இருக்கிறது அதற்கான ஒரே ஒரு வழியாகவும் இஸ்லாம் மட்டும்தான் இருக்கிறது,




## ஈரானில்

# ஒவ்வொரு ஷியாவும், இஹ்வானாக மாறினர்!

ஹஸன் அல் பன்னா(ரஹ்) ஷஹீது அவர்களின் படுகொலை சுன்னி முஸ்லிம் உலகில் தாக்கத்தை ஏற்படுத்திய அதே அளவில், ஷியா முஸ்லிம் உலகிலும் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

அடுத்த பத்தாண்டுகளில், தார் அல்-தக்ரீப் (Dāral-Taqrīb) முன்னெடுத்த முயற்சி, இஸ்லாத்தின் இரு பிரிவினருக்கும் இடையே சிறந்த பரஸ்பர புரிதலுக்கு வழிவகுத்தது மட்டுமல்லாமல், ஈரானிய இஸ்லாமியவாதிகளுக்கும், இஹ்வானுல் முஸ்லிமின் (Muslim Brotherhood) அமைப்பிற்கும் இடையே அறிவுசார் மற்றும் கருத்தியல் பரிமாற்றங்களையும் எளிதாக்கியது.

உதாரணமாக, ஈரானிய புரட்சிகர அமைப்பான ஃபிதாயீன்-இ இஸ்லாம் மற்றும் அதன் புகழ்பெற்ற தலைவரான நவ்வாப் சஃபவி ஆகியோர் இதில் முக்கியப் பங்காற்றினர். அல்-பன்னா மற்றும் குதுப் ஆகியோரால் ஈர்க்கப்பட்ட சஃபவி, இஹ்வானுல் முஸ்லிமின் அமைப்பின் கருத்தியலை ஈரானுக்குக் கொண்டு செல்வதிலும், ஈரானிய புரட்சிகர இஸ்லாமிய வாதிகளிடையே 'இஸ்லாமிய அரசு' என்ற கருத்தை ஊக்குவிப்பதிலும் கருவியாகச் செயல் பட்டார். இவ்வகையில், ஃபிதாயீன்-இ இஸ்லாம் அமைப்பு, செய்யித் குதுப்-பின் படைப்புகள் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்படுவதற்கான அடித்தளத்தை அமைக்கவும் உதவியது.

### ஃபிதாயீன்-இ இஸ்லாம் அமைப்பு

ஃபிதாயீன்-இ இஸ்லாம் அமைப்பு, செய்யித் முஜ்தபா மிர்லவ்ஹி என்ற அர்ப்பணிப்புமிக்க இளம் மதகுருவால் வழிநடத்தப்பட்டது; இவர்

நவ்வாப் சஃபவி என்றும் அறியப்பட்டார். ஈரானில் இஸ்லாமியவாதத்தை (Islamism) தோற்றுவித்த மிக முக்கியமான முன்னோடிகளில் இவரும் ஒருவர்.



நவ்வாப் சஃபவி

இந்த அமைப்பு உருவாவதற்குப் பல்வேறு காரணிகள் ஒன்றிணைந்தன. இரண்டாம் உலகப் போரின்போது ஈரானின் மீது நிகழ்த்தப்பட்ட ஆங்கிலேய - சோவியத் ஆக்கிரமிப்பு, கல்வி மற்றும் நீதித்துறையில் உலமாக்களின் செல்வாக்கைக் குறைக்க முயன்ற ஷா பஹ்லவியின் தீவிர மதச்சார்பற்ற கொள்கைகள், ஈரானிய சமூகத்தின் ஒழுக்கச் சீரழிவு எனக் கருதப்பட்ட நிகழ்வுகள் (மது அருந்துதல் மற்றும் இருபாலர் பள்ளிகள் போன்றவை), சோசலிசக் கருத்தியலின் அச்சுறுத்தல் ஆகியவை இதில் அடங்கும்.

ஃபிதாயீன் அமைப்பு மது விற்பனைக்கு எதிராகப் போராடியதுடன், ரெஸா ஷாவிற்குப் பின் வந்த முகமது ரெஸா ஷா, ஹிஜாப் மீதான தடையைநீக்கவேண்டும்என்றும்வலியுறுத்தியது. மேலும், அவர்கள் அயதுல்லா காஷானியுடன் கைகோர்த்து, ஈரானிய எண்ணெய்த் வளத்தை தேசியமயமாக்குவதற்காகவும் போராடினர்.

ஷியா உலமாக்கள் மீதான மதச்சார்பற்ற விமர்சனங்களை நவ்வாப் சஃபவி எதிர்த்த போதிலும், அரசியலில் ஈடுபட மறுத்த 'அமைதிவாத' (Quietist) உலமாக்களை அவர் கடுமையாகச் சாடினார். சில உலமாக்களின் அரசியல் செயல்பாடுகளை (Clerical activism) தீவிரமாக ஆதரித்த சஃபவி, சிலரின் அரசியல் விலகலுக்கு எதிராகக் கடுமையான கருத்துக்களை வெளியிட்டார்.

உலமாக்கள் தங்கள் பதவிகளையும் அந்தஸ்தையும் தக்கவைத்துக் கொள்வதற்காக ஒருவரை ஒருவர் அவதூறு செய்யவும் அல்லது மதவிலக்கம் (Apostasy) செய்ததாகக் குற்றம் சுமத்தவும் கூடத் தயங்கமாட்டார்கள் என்று அவர் கூறினார்.

இது குறித்து வரலாற்றாசிரியர் மெஹ்தி கலாஜி குறிப்பிடுகையில்:

“பாரம்பரிய அதிகாரத்தின் மீதான ஃபிதாயீன் அமைப்பின் இந்தத் தாக்குதல், சுன்னி உலகில் நிறுவப்பட்ட உலமாக்களுக்கு எதிராக இஹ்வானுல் முஸ்லிமின் மற்றும் ஜமாஅத்தே இஸ்லாமி போன்ற மறுமலர்ச்சி இயக்கங்கள் நடத்திய தாக்குதல்களைப் போலவே இருந்தது' என்கிறார்.

## பாலஸ்தீன பிரச்சினையில்..!

ஃபிதாயீன் அமைப்பின் மறுமலர்ச்சிக் கருத்தியலின் மையமாக விளங்கிய மற்றொரு முக்கியமான விஷயம், பாலஸ்தீனப் பிரச்சினை மற்றும் இஸ்ரேலை ஆதரிக்கும் மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம்களின் ஒற்றுமை ஆகியவையாகும்.

இந்த வகையில், 'அதுவரை பொதுவாக அரபு விவகாரங்களில் அக்கறை காட்டாமல் இருந்த ஈரானிய மதச் சமூகத்தினரிடையே, இஸ்ரேல் எதிர்ப்புப் போராட்டத்தை ஒரு மையப் பிரச்சினையாக மாற்றுவதில் ஃபிதாயீன் அமைப்பு ஒரு முன்னோடிப் பாத்திரத்தை வகித்தது.'

ஒற்றுமை குறித்த இந்த முழக்கமும் பாலஸ்தீனப் போராட்டமும் ஈரானிய உலமாக்களிடையே அரசியல் எழுச்சியைத் தூண்டியதுடன், ஈரானிய இஸ்லாமியவாதிகளிடையே இருந்த குறுகிய மதப்பிரிவு மற்றும் தேசியவாதக் கருத்தியல்களை நிராகரிக்கச் செய்தது.

இதுதொடர்பாக, ஈரான் மற்றும் எகிப்து நாடுகளின் இஸ்லாமியவாதிகளிடையே ஒரு சர்வதேசக் கூட்டமைப்பை உருவாக்குவதை ஃபிதாயீன் அமைப்பு ஊக்குவித்தது. குறிப்பாக, செய்யித் குத்ப்-பின் தலைமையில் 1954-ஆம் ஆண்டு ஜோர்டானில் நடைபெற்ற பாலஸ்தீனம் குறித்த மாநாட்டில் நவ்வாப் சஃபவி கலந்து கொண்டது, இஹ்வானுல் முஸ்லிமின் உறுப்பினர்களுடன், குறிப்பாக குத்ப்-உடன் நேரடி தனிப்பட்ட உறவுகளை வளர்க்க வழிவகுத்தது. அந்த மாநாட்டைத் தொடர்ந்து, சஃபவி எகிப்திற்குச் சென்றார்; அங்கு அவர் இஹ்வானுல் முஸ்லிமின் தலைவர்களைச் சந்தித்ததுடன், அந்த அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு இடங்களில் பல உரைகளையும் நிகழ்த்தினார்.



செய்யித் குத்ப் மற்றும் இஹ்வானுல் முஸ்லிமின் இஸ்லாமியவாதக் கருத்தியலால் சஃபவி ஈர்க்கப்பட்டதுடன், ஈரானில் அவர் களைப் பற்றி மிக உயர்வாகப் பேசினார். இந்த உயர் மதிப்பிற்கு ஓர் உதாரணமாக, 'யார் ஒரு உண்மையான ஜாஃபரி [ஷியா] ஆக இருக்க விரும்புகிறாரோ, அவர் இஹ்வானுல் முஸ்லிமைன் அமைப்பை பின்பற்ற வேண்டும்' என்று அவர் உரையாற்றினார்.



எகிப்திய அதிபர் கமால் அப்துல் நாசர், இஹ்வானுல் முஸ்லிமின் செயல்பாடுகளை ஒடுக்கியபோதும், குதுப் உள்ளிட்ட அதன் தலைவர்கள் பலர் சிறையில் அடைக்கப்பட்ட போதும், சஃபவி அந்த அமைப்புடனான தனது நெருக்கத்தை வெளிப்படுத்தினார். சஃபவி, நாசருக்கு எச்சரிக்கை தொனியில் இரண்டு வரிகள் கொண்ட கடிதம் ஒன்றை எழுதினார்:

"இஹ்வானுல் முஸ்லிமின் அமைப்பை நீங்கள் கடுமையாக நடத்துவதால் முஸ்லிம்களின் இதயங்கள் ஆத்திரத்தால் கொதிக்கின்றன. உடனடியாக இந்த விஷயத்தை மறுபரிசீலனை செய்து, உங்களுக்குத் துன்பகரமான வருத் தத்தைத் தராத ஒன்றைச் செய்ய முயற்சி செய்யுங்கள்!"

நவ்வாப் சஃபவி ஈரானிய இஸ்லாமியப் புரட்சிக்கு முன்பே அங்கிருந்த புரட்சிகர இஸ்லாமியவாதத்தை வடிவமைப்பதில் ஒரு முன்னோடிப் பாத்திரத்தை வகித்தார். உண்மை யில், ஷியா முஸ்லிம்கள் மத்தியில் 'ஹுகுமத்-இ இஸ்லாமி' (இஸ்லாமிய அரசு) என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் இவரே.

1950-ஆம் ஆண்டில், அயதுல்லா கொமேனிக்கு நீண்ட காலத்திற்கு முன்பே, ஹசன் அல்-பன்னாவின் தாக்கத்துடன் கூடிய ஓர் இஸ்லாமிய அரசுக்கான விரிவான திட்டத்தை அவர் முன்வைத்தார். அவர் ஈரானிய முடியாட்சிக்கு எதிரான மக்கள் கோபத்தை உறுதிப்படுத்த உதவியதுடன், இறுதியில் 1979ஆம் ஆண்டின் புரட்சிக்கான தத்துவார்த்த அடித்தளத்தை அமைத்தார்.

சொல்லப்போனால், ஃபிதாயீன்-இ இஸ்லாம் அமைப்பு இஸ்லாமியக் குடியரசின் எதிர்காலப் புரட்சிகரத் தலைவர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் ஒரு பயிற்சித் தளமாகச் செயல்பட்டது. உதாரணமாக, அமெரிக்க - இஸ்ரேலின் நயவஞ்சக தாக்குதலில் ஷஹீதான ஈரானின் முன்னாள் உச்சத் தலைவர் அலி காமெனி அவர்கள், நவ்வாப் சஃபவியின் தாக்கத்தின் கீழ்தான் தான் முதன்முதலில் அரசியலில் நுழைந்ததாகத் தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.

ஃபிதாயீன் அமைப்பு செய்யித் குதுப் மற்றும் இஹ்வானுல் முஸ்லிமின் அமைப்புடன் ஏற்படுத்திய கருத்தியல் மற்றும் தனிப்பட்ட தொடர்புகள், சஃபவியின் போதனைகளில் செல்வாக்கு செலுத்தியது மட்டுமல்லாமல், குதுப் மற்றும் பிற இஹ்வானிய சிந்தனையாளர்களின் படைப்புகள் மீது ஈரானில் அதிக ஆர்வத்தை ஏற்படுத்தின. இதுவே ஈரானில் குதுப்-இன் படைப்புகள் மொழிபெயர்க்கப்படுவதற்கான இயக்கமாக உருவெடுத்தது.

## ஈரானில் முஸ்லிம் இளைஞர்களை கவர்ந்த ஜாஹிலிய்யா கொள்கைகள்

ஈரானிய வரலாற்றாசிரியர் ரசூல் ஜாஃபரியான், செய்யித் குதுப்-இன் படைப்புகள் மொழிபெயர்க்கப்பட்டதன் பின்னணியில் இருந்த சூழ்நிலைகளை பற்றி கூறும்போது இப்படி குறிப்பிடுகிறார்:

"இஸ்லாமியப் புரட்சிக்கு முன்பு, ஈரானிய

இஸ்லாமியவாதிகளுக்கு சோசலிசம் மற்றும் தேசியவாதம் போன்ற மதச்சார்பற்ற கருத்தியல்கள் பெரும் சவாலாக இருந்தன. இந்த கருத்தியல்கள் அனைத்து சமூக-பொருளாதார மற்றும் அரசியல் சிக்கல்களுக்கும் தீர்வுகளை வழங்குவதாகக் கூறி இளைஞர்களைப் பெரிதும் கவர்ந்தன."



"பாரம்பரிய ஷியா அறிஞர்களால் இளைய தலைமுறையினரைக் கவர முடியவில்லை. ஏனெனில் அவர்கள் நவீனப் பிரச்சினைகளுக்குப் பொருத்தமான தீர்வுகளை வழங்குவதற்குப் பதிலாக, காலாவதியான பழைய வாதங்களையே மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டிருந்தனர். இத்தகைய சவால்களுக்கு மத்தியில், தெற்காசிய (ஜமாஅத்தே இஸ்லாமி) மற்றும் எகிப்திய (இஹ்வான்கள்) இஸ்லாமியவாதிகளைப் போலன்றி, ஈரானிய இஸ்லாமியவாதிகளிடம் ஒரு 'முழுமையான அமைப்பாக' (Total system) இஸ்லாத்தை முன்வைக்கும் தத்துவார்த்தப் பார்வைகள் இல்லாமல் போனது."

ஈரானில் நிலவிய கருத்தியல் மோதல்களுக்கு மத்தியில், இஸ்லாமிய இளைஞர்களுக்குத் தேவைப்பட்ட அந்தத் தத்துவத் தாகத்தை அப்போதைய ஈரானிய இஸ்லாமிய எழுத்துக்களால் தீர்க்க முடியாமல் போனது. இந்தத் தத்துவார்த்த வெற்றிடத்திலிருந்துதான் ஈரானில் மொழிபெயர்ப்பு இயக்கம் உருவானது. செய்யது குதுப்(ரஹ்) அவர்களின் நூல்கள் பாரசீக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன.

## "மொழிபெயர்ப்பு இயக்கம்" பாரகசீக மொழிகளில் குதுப்-இன் சிந்தனைகள்

செய்யித் குதுப்-இன் படைப்புகள் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்படுவது 1950-களில் தொடங்கி, 1960 மற்றும் 1970-களில் அதன் உச்சத்தை எட்டியது. இதற்கிடையில், ஈரானில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரே எகிப்திய இஸ்லாமியவாதி குதுப் மட்டும் கிடையாது. தெற்காசியாவின் புகழ்பெற்ற இஸ்லாமியவாதிகளான அபுல் அஃலா மௌதூதி மற்றும் அபுல் ஹசன் நத்வி ஆகியோருடன் இணைந்து, செய்யித் குதுப்-இன் சகோதரர் முகமது குதுப் மற்றும் இஹ்வானுல் முஸ்லிமின் அமைப்பைத் தோற்றுவித்த ஹசன் அல்-பன்னா ஆகியோரின் பெரும்பாலான நூல்களும் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

இருப்பினும், புரட்சிக்கு முன்னரும் பின்னரும் ஈரானிய இஸ்லாமியவாதிகளிடையே செய்யித் குதுபிற்கே மிக அதிகமான கவனமும் ஆர்வமும் கிடைத்தது. இந்த ஆர்வத்திற்கு ஒரு சான்றாக, அவரது நூல்கள் அரபு மொழியில் எழுதப்பட்ட உடனேயே அவை பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு பல பதிப்புகள் கண்டன.

## அஹ்மத் ஆராம்

உதாரணமாக, 1954-ஆம் ஆண்டிலேயே, குதுப்-இன் புகழ்பெற்ற குர்ஆன் விரிவுரையான 'ஃபீ ழிலாலில் குர்ஆன்' (திருக்குர்ஆனின் நிழலில்) நூலின் முதல் இரண்டு தொகுதிகள், ஈரானின் புகழ்பெற்ற மொழிபெயர்ப்பாளர் அஹ்மத் ஆராம் என்பவரால் 'தார் சாயே-இ குர்ஆன்' என்ற தலைப்பில் நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டன.



அஹ்மத் ஆராம்

அஹ்மத் ஆராம், தனது மொழிபெயர்ப்பின் முன்னுரையில்,

“குர்ஆன் முதன்மையாக வாழ்விற்கான ஒரு கையேடாகவும் வழிகாட்டியாகவும் அருளப் பட்டது என்று குறிப்பிடுகிறார். எனவே, அது நவீனக் காலத்தின் அடிப்படையில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இருப்பினும், பெரும் பாலான மக்கள் தங்கள் வாழ்வில் குர்ஆனின் முக்கியத்துவம் குறித்து மிகவும் வரையறுக்கப் பட்ட அறிவையே கொண்டுள்ளனர். இதன் விளைவாக, அவர்கள் குர்ஆனை ஒரு புனிதப் பொருளாக மட்டுமே பயன்படுத்துகின்றனர். அவர்கள் அதைச் சீதனப் பெட்டிகளில் வைக் கின்றனர், ஆபத்துகளைத் தவிர்க்கும் ஒரு தாயத்தாக மாற்றுகின்றனர், அல்லது தங்கள் வீட்டின் சுவர்களை அலங்கரிக்கப் பயன் படுத்துகின்றனர்.”

“மேலும், பெரும்பாலான மக்கள் ஆன்மீகப் பலன்களை (நன்மை) பெறுவதற்காக மட்டுமே குர்ஆனை ஓதுகிறார்கள். குர்ஆன் மீதான இந்த மேலோட்டமான மற்றும் சடங்கு ரீதியான அணுகுமுறை, குர்ஆனின் முதன்மையான செய்தியான 'தவ்ஹீத்' (இறைவனின் ஏகத்துவம்) என்பதன் ஆழமான அர்த்தத்தைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறது. குர்ஆனில் உள்ள பாடங்களையும், எச்சரிக்கைகளையும் சிந்திப் பதற்குப் பதிலாக, குர்ஆனைத் தொடும்போது இருக்க வேண்டிய தூய்மை முறைகள், அதை ஓதும் விதம் அல்லது அதன் அரபு எழுத்துக்கள் மற்றும் சொற்களை எவ்வாறு உச்சரிக்க வேண்டும் என்பது போன்ற சிறிய விஷயங்களில் மக்கள் வீணாகத் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள்”

ஆராமின் இந்த அறிமுகக் குறிப்புகள், ஃபீ ழிலாலில் குர்ஆன் நூலின் விளக்கவுரை அணுகுமுறையோடு ஒத்துப்போயின. அதாவது, ஆராமின் கூற்றுப்படி, அரபு மொழியில் நன்கு தேர்ச்சி பெற்ற அறிஞரான செய்யித் குதுப், குர்ஆன் எவ்வாறு வாசிக்கப்பட வேண்டும் என்று கோருகிறதோ - அதாவது சமகால வாழ்விற்கான அதன் பொருளைச் சிந்தித்து ஆய்ந்து வாசிப்பது - அவ்வாறே வாசிக்க நம்பிக் கையாளர்களுக்குக் கற்பித்தார். உண்மையில், இதற்காகவே குதுப் தனது விளக்கவுரையை எழுதினார்.

## ஹாதி கோஸ்ரோஷாமி

அஹ்மத் ஆராமின் 'ஃபீ ழிலாலில் குர்ஆன்'

ஹாதி கோஸ்ரோஷாமி



பாரசீக மொழிபெயர்ப்பைத் தொடர்ந்து, செய்யித் குதுப்-பின் மிகவும் புகழ்பெற்ற படைப்பு களில் ஒன்றான 'அல்-அதலா அல்-இஜ்திமாயியா ஃபீல்-இஸ்லாம்' (Social Justice in Islam - இஸ்லாத்தில் சமூக நீதி) நூலின் மொழிபெயர்ப்பு வெளியானது.

இந்த நூல் 1959-ஆம் ஆண்டில், அப்போதைய இளம் மதகுருவான ஹாதி கோஸ்ரோஷாமி என்பவரால் 'அதாலத்-இ இஜ்திமாயி தர் இஸ்லாம்' என்ற தலைப்பில் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது.

கோஸ்ரோஷாமி தனது மொழிபெயர்ப்பின் முன்னுரையில்,

“குர்ஆன் மற்றும் இஸ்லாம் குறித்த பல நூல்கள் மற்றும் கட்டுரைகள் மூலம் குதூப் ஈட்டிய பெரும் புகழைக் குறிப்பிடுகிறார். இதன் விளைவாகவே அவர் 'இக்காலத்தின் மிகச்சிறந்த இஸ்லாமிய சிந்தனையாளர்' என்றும், 'மிகவும் ஆழமான இஸ்லாமிய எழுத்தாளர்' என்று சரியாகவே அழைக்கப்படுகிறார்.

“உண்மையில், குதுப்-இன் சிந்தனை முறையும் நாம் சிந்திக்கும் முறையும் ஒன்றே. உலகில் உள்ள அனைத்து இஸ்லாமியப் போராளி களும் (முஜாஹிதீன்கள்) அவரது ஈமானையும், நோக்கத்தையும் பகிர்ந்து கொள்கிறார்கள். அந்த நோக்கம் யாதெனில், வெற்றி அல்லது ஷஹீது ஆகிய இரண்டில் ஒன்றை அடையும் வரை இலக்குகளையும், மனிதநேயத்தையும் முன்னெடுத்துச் செல்வதாகும். இவை இரண்டுமே இஸ்லாத்தில் மேலான மகிழ்ச்சிக்கு ஆதாரங் களாகவும், இறைவனை அடைவதற்கான முக்கிய பாதைகளாகவும் உள்ளன.” என்று கூறுகிறார்.




இஸ்லாத்தில் சமூக நீதி நூலின் முதல் பாரசீகப் பதிப்பு வெளியாகி நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, 1999-ஆம் ஆண்டில் அதன் 25வது பதிப்பிற்காக கோஸ்ரோஷாமி ஒரு புதிய முன்னுரையை எழுதினார். அதில்,

"இந்த விலைமதிப்பற்ற நூல், சமகாலத்தின் மிகச்சிறந்த குர்ஆன் விரிவுரையாளரான ஷஹீத் செய்யித் குத்ப் அவர்களால் எழுதப்பட்டது. இந்த நூல் முழுவதும் கையாளப்பட்டுள்ள தலைப்புகள் நீதி, சமூகம், அரசியல், ஆட்சிமுறை, பொருளாதாரம் மற்றும் பலவற்றோடு தொடர்புடையவை. உண்மையில், இந்தப் புத்தகத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் அக்கால சமூகத்தின் கவலையாக இருந்தன."

"இளைஞர்களும் மாணவர்களும் எழுப்பிய கேள்விகளுக்குப் பொருத்தமான பதில்களைக் கண்டறிய முடியாமல் இருந்தபோது, அவர்களுக்குத் தேவையான விடைகளை வழங்கும் நோக்கத்துடனேயே இந்த நூலை மொழிபெயர்க்க நாங்கள் முற்பட்டோம்."

"இந்த நூல் புரட்சிக்கு முந்தைய தலைமுறையினரின் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்யவில்லை; மாறாக, அது ஈரானிய இளைஞர்களின் தற்போதைய தலைமுறைக்கும் தொடர்ந்து முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மேலும், சமகால ஈரானின் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தேவையான தீர்வுகளையும் அது தொடர்ந்து வழங்கி வருகிறது." என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த புதிய பதிப்பு முக்கியமானது; ஏனெனில் கடந்த நாற்பது ஆண்டுகளில் அவரது மொழிபெயர்ப்பு பலமுறை வெளியிடப்பட்டுள்ளது என்பதை இது உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல், இஸ்லாமியப் புரட்சிக்குப் பிறகும் கோஸ்ரோஷாமி செய்யித் குதுப்-பின் கருத்துக்களின் தீவிர ஆதரவாளராகத் தொடர்ந்தார் என்பதையும் இது காட்டுகிறது.

இஸ்லாத்தில் சமூக நீதி நூலின் மொழிபெயர்ப்பைத் தவிர, செய்யித் குதுப்-பின் மேலும் இரண்டு நூல்களையும் கோஸ்ரோஷாமி மொழிபெயர்த்துள்ளார்.

1964-ஆம் ஆண்டில், கோஸ்ரோஷாமி மற்றும் ஜைன் அல்-ஆபிதீன் குர்பானி ஆகியோர் இணைந்து, 'அல்-இஸ்லாம் வா அல்-சலாம் அல்-ஆலமி' (Islam and World Peace - இஸ்லாமும் உலக அமைதியும்) என்ற நூலை 'இஸ்லாம் வா சுல்-இ ஜஹானி' என்ற பாரசீகத் தலைப்பில் மொழிபெயர்த்தனர்.

இதனைத் தொடர்ந்து, குத்ப்-பின் 'திராசாத் இஸ்லாமிய்யா' (Islamic Studies - இஸ்லாமிய ஆய்வுகள்) என்ற நூலின் மொழிபெயர்ப்பு வெளியானது. இது பாரசீக மொழியில் 'மா சே மீ-கூயீம்? (நாம் என்ன சொல்கிறோம்?) என்ற தலைப்பில் வெளிவந்தது.

## ஆயத்துல்லாஹ் அலி காமெனி

ஈரானில் செய்யித் குதுப்-பின் படைப்புகளை மொழிபெயர்த்த மற்றொரு முக்கியமான நபர், ஈரானின் முன்னாள் இஸ்லாமியக் குடியரசின் உச்சத் தலைவரான ஷஹீது ஆயத்துல்லாஹ் அலி காமெனி ஆவார்.

1967-ஆம் ஆண்டில், அவருக்கு 28 வயதாக இருந்தபோது, குத்ப்-பின் 'அல்-முஸ்தக்பல் லி-ஹதா அல்-தீன்' (The Future of This Religion - இந்த மார்க்கத்தின் எதிர்காலம்) என்ற நூலைப் பாரசீக மொழியில் 'ஆயந்தே தர் கலம்ரு-யி இஸ்லாம்' (The Future in the Realm of Islam -



ஆயத்துல்லாஹ் அலி காமெனி

இஸ்லாமியச் சூழலில் எதிர்காலம்) என்ற தலைப்பில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இந்த நூலில், இஸ்லாத்தின் அரசியல் மேலாதிக் கத்திற்காக (Political supremacy) குதுப் வாதிடு கிறார்; இது எதிர்காலத்தில் ஒட்டுமொத்த மனிதகுலமும் இஸ்லாமியக் கருத்தியலுக்குப் பணிய வழிவகுக்கும் என்றும், அனைத்து முஸ்லிம்களும் ஏகாதிபத்திய சக்திகளுக்கு (Imperialist powers) எதிராகப் போராட வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுக்கிறார்.

தனது மொழிபெயர்ப்பின் முன்னுரையில், குத்ப்-பின் முக்கிய வாதங்களை மீண்டும் விளக்கிய பிறகு, கொமெனி 'எதிர்காலம் உண்மையில் இஸ்லாத்திற்கே சொந்தமானது' என்று உறுதிபடக் கூறுகிறார்.

இருப்பினும், மதச்சார்பற்ற கருத்தியல்களுக்கு (Secular ideologies) எதிராகப் போட்டியிட வேண்டுமானால், இஸ்லாம் தனது பாரம்பரிய அடையாளத்தை (Traditionalist identity) மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும், இளைய தலைமுறை மற்றும் அரசியல் முற்போக்காளர்களைக் கவரும் வகையில் நவீனமான மற்றும் ஈர்க்கக்கூடிய செய்தியை வழங்க வேண்டும் என்றும் கொமெனி கருதினார்.

இது தொடர்பாக கொமெனி இவ்வாறு கூறுகிறார்:

"இக்காலத்தில், உலகின் ஒவ்வொரு மூலையிலும் புதிய மாயையான மற்றும் தவறான தத்துவங்களும் கோட்பாடுகளும் முற்போக்கான சிந்தனைகளைக் கவர்ந்து வருகின்றன; அவை ஆன்மீக மற்றும் பொருள்சார் சக்திகளின் மீது ஒரு வலுவான பிடியைக் கொண்டுள்ளன. நமது கருத்தியல் அல்லது கோட்பாடுகள் எவ்வளவு உயரியதாக இருந்தாலும், அவை ஒரு பழைய மற்றும் கவர்ச்சியற்ற தோற்றத்தைத் (Old-looking garb) தொடர்ந்து கொண்டிருக்கும் வரை, சீர்திருத்தவாதிகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் என்றோ, மனிதகுலத்திற்கு உண்மையை வெளிப்படுத்தும் என்றோ நாம் எதிர்பார்க்க முடியாது."

"இந்த நூலின் 'கண்ணியமான மற்றும் மரியாதைக்குரிய' ஆசிரியர் (குதுப்), 'புத்தகத்தின் அத்தியாயங்களை வடிவமைப்பதில் ஆக்கப்பூர்வ மாகச் செயல்பட்டுள்ளார்; தனது ஆழமான அறிவின் மூலம் இஸ்லாமிய மார்க்கத்தின் சாராம்சத்தைப் பற்றி விவாதித்துள்ளார்; மேலும் இஸ்லாத்தை வாழ்விற்கான ஒரு திட்டமாக (Program for living) அறிமுகப்படுத்துவதில் திறம்படச் செயல்பட்டுள்ளார்"

தனது முன்னுரையின் இறுதியில், கொமெனி தனது மொழிபெயர்ப்பில் தான் கையாண்ட முறையியல் (Methodology) பற்றி பின்வருமாறு விளக்குகிறார்:

"புத்தகம் முழுவதும் ஆசிரியரின் கருத்துக் களை முழுமையாக வெளிப்படுத்த நாங்கள் முயற்சி செய்தோம்; சுதந்திரமான மொழி பெயர்ப்பு என்ற சாக்கில் அதன் உள்ளடக்கத்தைக் குறைக்கவில்லை. இருப்பினும், சரளமான நடைக்காகவும், அனைவரும் எளிதில் புரிந்து கொள்வதற்காகவும், சொல்லுக்கு-சொல் (Verbatim) மொழிபெயர்ப்பதைத் தவிர்த்தோம்."

"இரண்டாவதாக, ஆசிரியர் தனது புத்த கத்தின் இறுதியில் ஒரு சில நபர்களைப் பற்றி உயர்வாகப் பேசும்போது, நாங்கள் அவரோடு உடன்படவில்லை. இருப்பினும், இது தொடர்பாக விவாதிப்பதைத் தவிர்த்து, நூலின் சாராம்சத்திற்கு உண்மையாக இருக்க வேண்டும் என்பதற்காக, எங்களது கருத்து வேறுபாடுகளைக் குறிப்புகளாக (Footnotes) மட்டும் சேர்த்துள்ளோம்."

## கொமெனியின் நோக்கம்!

புத்தகத்தின் இறுதியில் குதுப் ஒரு சிலரைப் புகழ்ந்த இடங்களில்தான் தமக்குக் கருத்து வேறுபாடு இருந்ததாக காமெனி குறிப்பிடுகிறார். குறிப்பாக, மக்காவிலிருந்து மதீனாவிற்குச் சென்ற ஹிஜ்ரத் பயணத்தின்போது நபி(ஸல்) அவர்காளுடன் இருந்த கலீஃபா அபூபக்கர்(ரலி)

மற்றும் அவர்களது தோழமையைக் குதுப் குறிப்பிடுகிறார்.

தனது பாரசீக மொழிபெயர்ப்பில், கொமெனி 'ஸஹாபி' (நபிகளின் தோழர்) என்ற அரபுச் சொல்லிற்குப் பதிலாக 'ஹம்சஃபர்' (உடன் பயணித்தவர்) என்ற பாரசீகச் சொல்லைப் பயன்படுத்தினார். மேலும், சுன்னி இஸ்லாத்தில் நபிகளின் தோழர்களுக்குப் பயன்படுத்தப்படும் 'ரலியல்லாஹு அன்ஹு' (அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக) என்ற வாழ்த்து வாசகத்தையும் அவர் தவிர்த்து விடுகிறார்.



ஷியா வாசகர்களுக்காக இந்தப் புத்தகத்தை மொழிபெயர்த்தார் என்பதால், கொமெனியின் இத்தகைய மாற்றங்கள் புரிந்துகொள்ளத்தக்கவை. ஆரம்பகால இஸ்லாமிய வரலாற்றின், ஷியாக்களுக்கு மத்தியில் சர்ச்சைக்குரிய நபர்கள் குறித்த வெளிப்படையான விவாதங்களைத் தவிர்க்க கொமெனி விரும்பினார் என்பதை அவரது குறிப்புகளிலிருந்து நாம் ஊகிக்க முடிகிறது. இஸ்லாமியவாதக் கருத்தியல் (Islamist ideology) இத்தகைய முரண்பாடுகளை இரண்டாம் நிலைக்குத் தள்ளியதே இதற்கு காரணமாக இருக்கலாம். இருப்பினும் அவர் அந்த முரண்பாடுகளை முற்றிலும் நீக்கிவிட வில்லை.

1980-ஆம் ஆண்டில், 'இந்த மார்க்கத்தின் எதிர்காலம்' நூலின் ஏழாவது பதிப்பிற்காக கொமெனி ஒரு புதிய முன்னுரையை எழுதினார். அதில், தான் ஏன் இந்த நூலை மொழிபெயர்த்தேன் என்பதை இவ்வாறு விளக்குகிறார்:

"எகிப்தின் தியாகியான செய்யித் குதூப்-இன் மிகக்குறுகிய, அதேசமயம் மிகவும் ஆழமான நூல்களில் இதுவும் ஒன்றாகும். இஸ்லாத்தைப் பற்றிய சுருக்கமான தகவல்களைத் தேடுபவர் களுக்கு இது ஒரு முக்கிய வழிகாட்டியாகும். அந்த நாட்களில், இஸ்லாமியப் போராளிகளும், அமைப்புகளும் பஹ்லவி ஆட்சிக்கு எதிராக மிகவும் ஆபத்தான மற்றும் தீவிரமான அரசியல் மோதல்களில் ஈடுபட்டிருந்தபோது, சிந்தனை மற்றும் செயல்களுக்கு உத்வேகமாகவும் வழிகாட்டியாகவும் அமைந்த இத்தகைய புத்தகங்கள் மிக அவசரமாகத் தேவைப்பட்டன."

கோஸ்ரோஷாமியைப் போலவே, கொமெனியும் தனது மொழிபெயர்ப்பு 'அக்காலத்தின் ஒரு குறிப்பிட்ட தேவையின்' விளைவாக உருவானது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். இது பஹ்லவி ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பை வளர்ப்பதிலும், புரட்சிகரப் போராளி களை (Militant revolutionaries) கருத்தியல் ரீதியாகத் திரட்டுவதிலும் (Ideological mobilization) மிக முக்கியமான கருவியாகச் செயல்பட்டது என்று அவர் கூறுகிறார்.

## செய்யித் முஹம்மது காமெனி

செய்யித் குதுப்-இன் படைப்புகளை ஈரானில் மொழிபெயர்த்த மற்றொருவர், அலி கொமெனி யின் சகோதரரான செய்யித் முஹம்மது கொமெனி ஆவார். தனது சகோதரரைப் போலவே, முஹம்மது கொமெனியும் ஒரு தீவிர புரட்சிகர அறிஞராக இருந்தார்; அவர் தனது பேச்சுகள், எழுத்துக்கள் மற்றும் மொழிபெயர்ப்புகள்



செய்யித் முஹம்மது காமெனி

மூலம் இஸ்லாமியப் புரட்சியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்.

1972-ஆம் ஆண்டில், அவர் குதுப்-இன் முக்கியமான நூலான 'கஸாஇஸ் அல்-தசவ்வுர் அல்-இஸ்லாமி வா முகவ்விமாதிஹி' (Charac teristics and Values of the Islamic Concept - இஸ்லாமியக் கருத்தாக்கத்தின் பண்புகள் மற்றும் விழுமியங்கள்) என்ற நூலை மொழிபெயர்த்தார். இது தெய்வீகம், பிரபஞ்சம், வாழ்க்கை, மனித குலம், இறைவனுக்கு அடிபணிதல் மற்றும் அறியாமைக்கால இறைநிராகரிப்பு போன்ற இஸ்லாமியவாதக் கருத்துகளைக் கையாள்கிறது. இதற்குப் பாரசீக மொழியில் 'வீஷகிஹா-யி இடியலூஷி-யி இஸ்லாமி' (இஸ்லாமியக் கருத்தியலின் பண்புகள்) என்று தலைப் பிடப்பட்டது.

இந்த மொழிபெயர்ப்பின் முன்னுரையில், முஹம்மது கொமெனி, குதுப்-இன் சிறப்புகளைப் புகழ்கிறார்; மேலும் அவரது கருத்தியல் நிலைப் பாட்டிற்கும் நபிகள் நாயகத்தின் வழித்தோன்றல் களின் நிலைப்பாட்டிற்கும் இடையே ஒரு ஒப்புமையை உருவாக்குகிறார். அவர் கூறுகிறார்:

“அவரது பெயர் செய்யித். அந்தப் பெயருக்கு அவர் தகுதியானவர். அவர் நபிகள் நாயகத்தின் குடும்ப வழித்தோன்றல்களில் ஒருவராக இருந்ததால் மட்டும் இதுவல்ல; மாறாக, அவரது செயல்பாடுகள் மற்றும் கருத்துக்களில் இருந்த துடிப்பு(Dynamism), நபிகளாரின் வழித்தோன்றல் களின் பண்புகளைப் போலவே இருந்தது. செய்யித் குதுப் மற்றும் அவரைப் போன்ற வர்கள் என்னைப் போன்ற நுணுக்கமான ஆய்வாளர்களுக்கு முழுமையானவர்களாகத் (Perfect) தோன்றாமல் இருக்கலாம். இருப்பினும், முஸ்லிம் உலகில் அவரது தரத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? முஸ்லிம்களிடையே அவரைப் போன்ற முத்துக்கள் எத்தனை உள்ளன? எனவே, அவர் மீது அதிருப்தி காட்டவோ அல்லது அவரிடமிருந்து நம்மைத் தூர விலக்கிக் கொள்ளவோ நமக்கு வசதி இல்லை.”

இந்த உயரிய புகழுரைகள், செய்யித் முஹம்மது கொமெனிக்கு செய்யித் குத்ப் மீது எவ்வளவு ஈடுபாடும் அனுதாபமும் இருந்தது என்பதையும், ஈரானிய புரட்சிகர இஸ்லாமிய வாதிகள் பொதுவாக அவரை எவ்வாறு பார்த்தார்கள் என்பதையும் காட்டுகின்றன.

## செய்யித் இப்ராஹீம் மீர் பாகிரி

1971-ஆம் ஆண்டில் குதுப்-பின் 'ஹதா அல்-தீன்' (This Is the Religion) என்ற நூலை 'இஸ்லாம்: ஆயீன்-இ ஃபித்ரத்' (Islam: the Religion of Primordial Nature - இஸ்லாம், மனித இயற்கையின் மார்க்கம்) என்ற தலைப்பில் பாரசீக மொழியில் மொழிபெயர்த்த செய்யித் இப்ராஹீம் மீர் பாகிரி தனது முன்னுரையில் இவ்வாறு கூறுகிறார்:

“செய்யித் குதுப் ஒரு தகுதியுள்ள எழுத்தாளர் மற்றும் ஒரு சிறந்த முஸ்லிம் சிந்தனையாளர். அவர் தனது ஆற்றல்மிக்க பேனா மற்றும் தெளிவான கூற்றுகள் மூலம் இஸ்லாம் எனும் சூரியனின் பிரகாசமான முகத்தைத் திறந்து காட்டியதுடன், அதன் வெளிப்படையான உண்மையை உலகிற்கு உணர்த்தினார்.”

## முஹம்மது ஜாஃபர் இமாமி

1974-ஆம் ஆண்டில் குதுப்-பின் 'திராசாத் இஸ்லாமிய்யா' (Islamic Studies) நூலின் ஒரு பகுதியை 'இஸ்லாம் வா மசாயில்-இ ரூஸ்' (Islam and the Affairs of Today - இஸ்லாமும் இன்றைய விவகாரங்களும்) என்ற தலைப்பில் மொழிபெயர்த்த முஹம்மது ஜாஃபர் இமாமி குறிப்பிடுகையில்:

“எழுதப்பட்ட எல்லா புத்தகங்களும் வாசிப்ப தற்கோ அல்லது மொழிபெயர்ப்பதற்கோ தகுதியானவை அல்ல... இருப்பினும், செய்யித் குதுப்-பின் அனைத்துப் படைப்புகளும் முஸ்லிம்களின் விழிப்புணர்விற்கு, குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு மிகவும் பயனுள்ளவை. இந்தப் புத்தகத்தில் மிகவும் ஆழமான மற்றும் தீவிரமான நினைவூட்டல்கள் உள்ளன; இவை குறித்து அனைத்து முஸ்லிம் களும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்” என்று கூறுகிறார்.

## முஹம்மது அலி ஆபிதி

இவர், குதுப்-இன் 'அல்-தஸ்வீர் அல்-ஃபன்னி ஃபீ அல்-குர்ஆன்' (The Aesthetic Concept in the Quran - குர்ஆனில் உள்ள கலைநயக் கருத்தாக்கம்) என்ற நூலின் தனது மொழிபெயர்ப்பில் குதுப்-பை இவ்வாறு புகழ்கிறார்:

“செய்யித் குதுப் இக்காலத்தின் ஒரு முக்கியமான ஆளுமை மற்றும் நன்கு அறியப்பட்ட ஒரு போராளி. இவர் தனது பேனா மற்றும்

பேச்சுகள் மூலம் ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராகப் போராடினார்; இப்பாதையிலேயே தன்னைத் தியாகமும் செய்து கொண்டார். இத்தனை சிரமங்களுக்கு மத்தியிலும் அவர் எழுதுவதைக் கைவிடவில்லை; குர்ஆனைப் புரிந்துகொள்வதில் பெரும் முயற்சியை மேற்கொண்டார். அதன் விளைவாக, அதுவரை எவராலும் தொடப்படாத குர்ஆனின் சில புதிய கோணங்களில் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சுவதில் அவர் வெற்றி கண்டார்."

"அவர் ஒரு அசாதாரணமான வீரன் (Hero). அவரது குர்ஆன் விரிவுரைகள் மிகவும் துல்லியமான கருத்துக்களைக் கொண்டுள்ளன. அவர் ஒரு அறிஞர், ஒரு சிந்தனையாளர் மற்றும் ஒரு கூர்மையான அறிவுள்ள மனிதர். மற்றவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டும் வகையில் குர்ஆனின் நுணுக்கங்களைப் புரிந்துகொள்வதில் அவர் வெற்றி பெற்றார். ஒவ்வொரு காலத்திலும் ஒரு வீரன் தோன்றி, குர்ஆனின் வெளிப்படுத்தப்படாத இரகசியங்களை உலகிற்கு அறிமுகப்படுத்துவது என்பது குர்ஆனின் அற்புதங்களில் (Miracles) ஒரு பகுதியாகும்."

## வரலாற்றில் இது அரிதான நிகழ்வுதான்!


செய்யித் குதுப்

மேலே உள்ள உதாரணங்களில் இருந்து நாம் காண்பது போல, இஸ்லாமியப் புரட்சிக்கு முந்தைய காலகட்டத்தில் செய்யித் குதுப்-பின் நூல்கள் மிக முக்கியமான பங்காற்றின என்பதில் ஈரானிய மொழி பெயர்ப்பாளர்கள் அனைவரும் உடன்படுகின்றனர்.

குறிப்பாக, புரட்சிகர இஸ்லாமியவாதிகளிடையே கருத்தியல் தேவை மிக அதிகமாக இருந்த நேரத்தில், இளைய தலைமுறையினருக்கு இஸ்லாமியவாதக் கருத்தியலை (Islamist ideology) மிக எளிய நடையில் கற்பிப்பதற்கு இந்த நூல்கள் பெரிதும் உதவின.

ஈரானில் ஒரு சுன்னி எழுத்தாளரின் புத்தகம் ஷியா வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுவது பொதுவான ஒன்றுதான் என்றாலும், ஒரு சுன்னி எழுத்தாளர் தனது ஈரானிய வாசகர்களால் இவ்வளவு உற்சாகமாகப் புகழப்பட்டது என்பது வரலாற்றில் மிக அரிதான ஒரு நிகழ்வாகும்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்...!

Indiana University Press 2016-இல் வெளியிட்ட, Journal of Islamic and Muslim Studies, Vol. 1, No. 2 (November 2016), pp. 35-60லிருந்து.

இந்த கட்டுரையை ஆய்வு செய்து, RESEARCH GATE.NET என்ற தளத்தில் ஒரு PEER REVIEW PEPER-ஐ, Yusuf Unal என்பவர் வெளியிட்டுள்ளார். அதன் தமிழாக்கமே இந்த தொடர்.

**- Advocate. JASMINE FATHIMA**
**B.Sc, B.Ed, LLM.,**






# துணிச்சலற்ற முதுகெலும்பற்ற நமது அரசாங்கத்தை நினைத்து வெட்கப்படுகிறேன்!

**"நான் என் தாயின் மகள் என்பதால், என் தோள்களை நிமிர்த்தி இதைச் சொல்ல வேண்டிய அவசியம் இருப்பதாலும், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உலகத்தையே விழுங்கக் காத்திருக்கும் இந்தப் போரைப் பற்றிய ஒரு சிறிய அறிக்கை இது."**

நாம் இன்று இங்கே 'மரியன்னை என்னிடம் வருகிறார்' (Mother Mary Comes To Me) என்ற நூலைப் பற்றிப் பேசத் திரண்டிருக்கிறோம் என்று எனக்குத் தெரியும். ஆனால் தகித்துக் கொண்டிருக்கும் அந்த அழகான நகரங்களான தெஹ்ரான், இஸ்ஃபஹான் மற்றும் பெய்ரூட் டைப் பற்றிப் பேசாமல் இந்த நாளை நாம் எப்படி முடிக்க முடியும்?

ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் நிகழ்த்தியுள்ள சட்டவிரோதமான தாக்குதலைப் பற்றிப் பேச இந்த மேடையைப் பயன்படுத்த விரும்புகிறேன்.

## அதே பழைய இனப்படுகொலையாளர்கள்

இது நிச்சயமாக காசாவில் அமெரிக்க - இஸ்ரேல் நிகழ்த்தி வரும் இனப்படுகொலையின் தொடர்ச்சிதான். அதே பழைய இனப்படு கொலையாளர்கள், அதே பழைய தந்திரங் களைப் பயன்படுத்துகிறார்கள். பெண்களையும், குழந்தைகளையும் கொல்வது. மருத்துவமனைகள் மீது குண்டுவீசுவது. நகரங்கள் மீது தரைமட்ட மாக்கும் வான்வழித் தாக்குதல்களை நடத்துவது. பிறகு தாங்களே பாதிக்கப்பட்டவர்கள் போல் நடிப்பது.

ஆனால் ஈரான் ஒன்றும் காசா அல்ல. இந்தப் புதிய போர்க்களம் முழு உலகத்தையுமே விழுங்கும் அளவிற்கு விரிவடையக்கூடும். நாம் ஒரு அணுஆயுதப் பேரழிவு மற்றும் பொரு ளாதார வீழ்ச்சியின் விளிம்பில் நிற்கிறோம். ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது குண்டு வீசிய அதே நாடு, உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்களில் ஒன்றின் மீது குண்டு வீசத் தயாராகிக்கொண்டிருக்கலாம். இதைப் பற்றி விரிவாகப் பேச வேறு சந்தர்ப்பங்கள் அமையும், எனவே இங்கே நான் ஈரானுடன் நிற்கிறேன் என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

சந்தேகத்திற்கு இடமின்றி அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் நம்முடையது உட்பட எந்த ஆட்சிகள் மாற்றப்பட வேண்டுமானாலும், அவை அந்தந்த நாட்டு மக்களால் மாற்றப்பட வேண்டுமே தவிர; வீங்கிய, பொய் சொல்லும், ஏமாற்றும், பேராசை கொண்ட, வளங்களைக் கொள்ளையடிக்கும், குண்டு வீசும் ஒரு ஏகாதிபத்திய சக்தியாலோ அல்லது முழு உலகத்தையும் பணிய வைக்கத் துடிக்கும் அதன் கூட்டாளிகளாலோ அல்ல.

## நாம் நமது கண்ணியத்தை இழந்துவிட்டோம்

இந்தியா கோழைத்தனமாகப் பதுங்கிக் கொண்டிருக்கும் வேளையில், ஈரான் அவர்களை எதிர்த்து நிற்கிறது. நமது அரசாங்கம் இவ்வளவு தைரியமற்றதாக, முதுகெலும்பற்றதாக இருப்ப தைக் கண்டு நான் வெட்கப்படுகிறேன். நீண்ட காலத்திற்கு முன்பு நாம் ஏழை மக்களால் நிறைந்த

ஒரு ஏழை நாடாக இருந்தோம். ஆனால் நம்மிடம் பெருமிதம் இருந்தது. கண்ணியம் இருந்தது. இன்று நாம் ஏழை மற்றும் வேலையில்லாத மக்களால் நிறைந்த ஒரு பணக்கார நாடாக இருக்கிறோம்; அவர்களுக்கு உண்மையான உணவிற்குப் பதிலாக வெறுப்பு, நச்சு மற்றும் பொய்களே தீவனமாக வழங்கப்படுகின்றன. நாம் பெருமிதத்தை இழந்துவிட்டோம். நாம் கண்ணியத்தை இழந்துவிட்டோம். நாம் துணிச்சலை இழந்துவிட்டோம். நமது திரைப் படங்களைத் தவிர வேறெங்கும் அது இல்லை.

பிற நாடுகளின் தலைவர்களைக் கடத்திப் படுகொலை செய்யும்போது, அதைக் கண்டித் துத் துணிச்சலாக நிற்க முடியாத ஒரு தேர்ந் தெடுக்கப்பட்ட அரசாங்கத்தைப் பெற்றிருக்கும் நாம் என்ன மாதிரியான ஆட்கள்? நமக்கும் இதே நிலை ஏற்பட வேண்டும் என்று நாம் விரும்புவோமா?

ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்குச் சில நாட்களுக்கு முன்பே, நமது பிரதமர் இஸ்ரேலுக்குப் பயணம் மேற்கொண்டு பெஞ்சமின் நெதன்யாகுவைத் தழுவிக் கொண்டாரே - அதன் பொருள் என்ன?

அமெரிக்க உச்சநீதிமன்றம் ட்ரம்பின் வர்த்தக வரிகளைச் சட்டவிரோதமானது என்று அறிவிப் பதற்குச் சில நாட்களுக்கு முன்பே, நமது விவசாயிகள் மற்றும் ஜவுளித் தொழிலைக் காவுகொடுக்கும் ஒரு பணிவான வர்த்தக ஒப்பந்தத்தில் நமது அரசாங்கம் கையெழுத் திட்டதே - அதன் பொருள் என்ன?

ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதற்கு இப்போது நமக்கு ‘அனுமதி’ வழங்கப்படுகிறதோ அதன் பொருள் என்ன? வேறு எதற்கெல்லாம் நமக்கு அனுமதி தேவை? கழிவறைக்குச் செல்லவா? வேலையிலிருந்து ஒரு நாள் விடுப்பு எடுக்கவா? அல்லது நமது தாயைச் சந்திக்கச் செல்லவா?

டொனால்ட் ட்ரம்ப் உள்ளிட்ட அமெரிக்க அரசியல்வாதிகள் ஒவ்வொரு நாளும் நம்மைப் பகிரங்கமாக ஏளனம் செய்கிறார்கள், அவமதிக் கிறார்கள். நமது பிரதமரோ தனது புகழ்பெற்ற, அர்த்தமற்ற சிரிப்பை உதிர்த்துக்கொண்டே அவர்களைக் கட்டித்தழுவுகிறார். காசாவில் இனப்படுகொலை உச்சத்தில் இருந்தபோது, வெளியேற்றப்பட்ட பாலஸ்தீனத் தொழிலாளர் களுக்குப் பதிலாக ஆயிரக்கணக்கான ஏழை இந்தியத் தொழிலாளர்களை இந்திய அரசாங்கம் இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்தது. இன்று, இஸ்ரேலியர்கள் பதுங்கு குழிகளில் தஞ்சம் புகுந்துள்ள நிலையில், அந்தப் பதுங்கு குழிகளுக்குள் இந்தியத் தொழிலாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்று செய்திகள் வருகின்றன.

இதற்கெல்லாம் என்னதான் அர்த்தம்? உலக அரங்கில் இவ்வளவு அவமானகரமான, வெட்கக்கேடான, அருவருப்பான நிலைக்கு நம்மைத் தள்ளியது யார்?

நம்மில் சிலருக்கு அந்தப் பழமையான, மிகைப்படுத்தப்பட்ட சீனக் கம்யூனிசச் சொல்லான 'ஏகாதிபத்தியத்தின் கைக்கூலி' (Running Dog of Imperialism) என்பது நினை விருக்கலாம்; அன்று அதை நாம் கேலி செய்தோம். ஆனால் இப்போது, அதுதான் நம்மைச் சரியாகச் சித்தரிக்கிறது என்று நான் கூறுவேன்.

நிச்சயமாக, நமது வக்கிரமான, நச்சுத்தன்மை வாய்ந்த திரைப்படங்களைத் தவிர! அவற்றில் நமது திரையுலக நாயகர்கள் வீணாக மார்தட்டிக் கொண்டு, நிழல் போர்களில் ஒன்றன் பின் ஒன்றாக வெற்றி பெறுகிறார்கள்; அவர்கள் அறிவற்றவர்கள், வெறும்தசைப்பிடிப்பு கொண்ட வர்கள். தங்களது தேவையற்ற வன்முறை மற்றும் மூளையற்ற செயல்திறன் மூலம் நமது தணிக்க முடியாத இரத்த வெறிக்குத் தீனி போடுகிறார்கள்.

டெல்லியில் மார்ச் 9இல், நடந்த "Mother Mary Comes To Me" என்ற நூலின் கலந்துரையாடலின் நிகழ்ச்சியில் பேசிய அருந்ததி ராய், அமெரிக்க - இஸ்ரேல் - ஈரான் மீது நடத்திய தாக்குதல் குறித்த தனது நிலைப்பாட்டை தெரிவித்திருந்தார்.

அவர் தனது இறுதிக் கருத்தை முன் வைத்த போது ஈரானுடன் உறுதியாக நிற்பதாகவும், அவ்வாறு செய்யத் துணியாத இந்திய அரசாங் கத்தைக் கண்டிப்பதாகவும் அவர் பேசியபோது - அங்கிருந்த பார்வையாளர்கள் அனைவரும் எழுந்து நின்று (Standing Ovation) தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

அந்த நெகிழ்ச்சியான வரவேற்பிற்குப் பதிலளிக்கும் விதமாக, அவர் புன்னகைத்தபடி தனது கையால் வெற்றிச் சின்னத்தைக் (Victory Sign) காட்டினார். 'டெல்லியில், நாங்கள் எப்போதும் திருப்பி அடிப்போம்' (In Delhi, we always fight back) என்று கூறி விடைபெற்றார்.

The Wire - March 9, 2026

**- Advocate Jasmine Fathima, B.Sc, B.Ed, LLM.,**




# இந்தியாவில் நடக்கும் வெறுப்புப் பிரச்சாரங்கள்

கா ஆய்வு!

இந்தியாவில் நடந்த வெறுப்பு பேச்சுகளை கொண்டு இந்தியாவின் வெறுப்பு ஆய்வகம் (The india hate lab) எனும் ஆய்வில் STUDY OF ORGANISED HATE எனும் பக்கச்சார் பற்ற அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் டிசி இல் அலுவலகத்தை கொண்ட அமைப்பு ஒரு ஆய்வு அறிக்கையை தயார் செய்து HATE SPEECH EVENTS IN INDIA | Report 2025 எனும் பெயரில் அறிக்கையாக வெளியிட்டனர்.

கடந்த 2023, 2024 ஆண்டும் இதே போன்று ஒரு அறிக்கையை தயார் செய்து வெளியிட்டது. அதேபோன்று 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற வெறுப்பு பேச்சுகள்,பேரணிகள் நடத்தைகள், காணொளிகள்,

உரையாடல்கள், கருத்தரங்கங்கள், பொதுக் கூட்டங்கள், ஆன்லைன் மூலமாக நடைபெறும் வெறுப்புகள் போன்றவற்றை ஆய்வு செய்து ஒரு அறிக்கையை தயார் செய்துள்ளது. இந்தியாவில் உள்ள சிறுபான்மையர்களான முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் ஒடுக்கப் பட்ட மக்களுக்கு எதிராக நடத்திய அனைத்து வெறுப்பு நிகழ்வுகளை கணக்கில் கொண்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வளவு முக்கியமான அறிக்கை வெளிவந்த பொழுதிலும் யாரும் பெரிதாக இதை எடுத்துக் கொள்ளாமல் கடந்து போயினர். அதனால் வைகறை வெளிச்சத்தின் குழுமத்தின் சார்பாக அந்த அறிக்கையை இறைவனின் உதவியை கொண்டு தமிழில் மொழி பெயர்த்து வைகறை வெளிச்சம் மாத இதழில் தொடராக எழுத உள்ளோம். எல்லாம் வல்ல அல்லாஹ் உதவி செய்வானாக.

2025ஆம் ஆண்டு இந்தியாவில் மத சிறுபான்மையினருக்கு எதிரான பேச்சுக்கள், செயல்பாடுகள் ஒரு ஆழமான கட்டத்தைத் நெருங்கியது, இது சாதரண பொதுமக்களுக்கும் வெறுப்பை வெளிப்படுத்துவதற்கான ஒரு புதிய களமாக பிரதிபலிக்கிறது. இந்த அறிக்கை 2025 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் நடந்த அரசியல் பேரணிகள், மத ஊர்வலங்கள், எதிர்ப்பு பேரணிகள் மற்றும் கருதரங்கு கூட்டங்கள் உட்பட நேரில் நடந்த வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளை ஆவணப்படுத்தி பகுப்பாய்வு செய்கிறது.

2024ஆம் ஆண்டில் காணப்பட்ட வெறுப்புப் பேச்சுகளின் நிகழ்வுகளை விட, 2025ஆம் ஆண்டில் நடைபெற்ற மொத்த வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளின் அளவு உயர்ந்தது, இது இந்தியா வின் அரசியல் மற்றும் சமூக கட்டமைப்புகளில் மதவெறி ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதைக் குறிக்கிறது. 2025 ஆம் ஆண்டில் மத சிறுபான் மையினரை குறிவைத்து பதிவு செய்யப்பட்ட வெறுப்புப் பேச்சு சம்பவங்களின் எண்ணிக்கை 1,318இது 2024இல் ஆவணப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான 1,165 என்ற நிகழ்வுகளை விட அதிகமாகும்.

இத்தகைய வெறுப்பு பேச்சுகள், இந்து தீவிர வலதுசாரி ஆதரவாளர்களுக்கு அணிதிரட்டலுக்கான ஒரு கருவியாக செயல்படுகின்றன. 2025 ஆம் ஆண்டில் நடந்த வெறுப்புப் பேச்சின் மையமாக, ஆளும் பாரதிய ஜனதா கட்சி (BJP) மற்றும் அதன் கூட்டணியான இந்து தேசியவாத அமைப்புகள் திகழ்கின்றது. எங்களுடைய 2024 அறிக்கை, உயர்மட்ட தேசிய BJP தலைவர்கள் வெறுப்புப் பேச்சு பிரச்சாரத்தில் முன்னணியில் இருப்பதை எடுத்துக்காட்டுகிறது. 2025ஆம் ஆண்டு இந்தப் போக்கை இன்னும் அதிகமாக உறுதிப்படுத்தியது, வகுப்புவாத விரோதத்தை உருவாக்குவதற்கான கட்டமைப்புகள் மேலிருந்து கீழ்நோக்கியதாக காணப்படுகிறது, அதுமட்டும் அல்லாமல் கட்டமைப்புகளின் அடிமட்டம் வரை பாய்ந்தது. குறிப்பாக டெல்லி மற்றும் பீகார் மாநிலத் தேர்தல்கள் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்கள் அதிக வெறுப்பு பேச்சுகளை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்கான புதிய அரங்குகளாக செயல்பட்டன. அதே நேரத்தில், முன்மொழியப்பட்ட கர்நாடக வெறுப்பு பேச்சு மற்றும் வெறுப்பு குற்றங்கள் தடுப்பு மசோதா, 2025 (prevention of hate speech and hate crime act 2025 ) போன்ற சட்டங்களை இயற்றுவது, தேசிய அளவில் வெறுப்பு பேச்சு கட்டமைப்புகள் தொடர்ந்து கொண்டிருந்தாலும், இப்பிரச்சனையை கட்டுபடுத்த மாநில அளவில் இவ்வகையான சட்டங்கள் இயற்றுவது பிரச்சினையின் தீவிரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

2025 இல் வெறுப்புப் பேச்சுகள், பத்தாண்டு காலமாக தீவிரமடைந்து வரும் இந்துத்துவவாத தேசியமயமாக்களுக்கு ஒரு உந்து சக்தியாக அரசியல் மற்றும் சமூகச் சூழலுக்குள் நுழைந்துள்ளதை புரிந்து கொள்ளலாம்.

மாநில மற்றும் தேசிய இந்துத்துவ கட்சிகள் மற்றும் இந்து தேசியவாதத் தலைவர்கள், மதப் பிரமுகர்கள் மற்றும் உள்ளூரில் செல்வாக்கு செலுத்துபவர்கள், முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் விசுவாசமற்றவர்கள், தேச விரோதிகள், ஆபத்தானவர்கள் அல்லது மக்கள்தொகை ரீதியாக அச்சுறுத்துபவர்கள் என்று பலிகடா ஆக்கும் கதைகளை ஏற்படுத்தினர். ஒரு காலத்தில் ஊரின் ஓரங்களுக்குள் மட்டுப் படுத்தப்பட்ட இந்தக் கதைகள், இப்போது பொது விவாதம், தேர்தல் உத்திகளை வடிவமைத்தல், சமூக கூட்டமைப்புகள் மற்றும் தேசிய அடையாளம் மற்றும் குடியுரிமை நிரூபித்தல் போன்ற தேசிய பிரச்சனையாக மாறிவிட்டன.

2025ஆம் ஆண்டில் நடந்த நிகழ்வுகளில் ஏற்பட்ட வெறுப்புப் பேச்சுகள் இந்துத்துவ தேசியவாதக் கருத்துக்களை ஏற்படுத்தும் மையமாக திகழ்ந்தது, அவர்களின் கருத்துகள் முஸ்லிம்கள் நிரந்தர வெளியாட்கள் என்றும் அவர்களின் இருப்புகள் இந்து பெரும்பான்மை தேசத்திற்கு அச்சுறுத்தல் என்ற கருத்தை தொடர்ந்து பிரதிபலித்தது. இந்த சித்தாந்த முன்மொழிவு, இந்திய முஸ்லீம்கள் மீது பல்வேறு வகையான ஜிஹாத் ("ஹலால் ஜிஹாத்" மற்றும் "லேண்ட் ஜிஹாத்" "ஸ்பிட் ஜிஹாத்", இந்துக்கள் உட்கொள்ளும் உணவில் முஸ்லிம்கள் வேண்டுமென்றே துப்புகிறார்கள், எக்கொனோமிக் ஜிஹாத்..) குற்றச்சாட்டுகள் உட்பட, பல சதி கோட்பாடுகளால் தொடர்ந்து உருவாக்கப் பட்டது. கிருஸ்த்துவர்களை பொருத்த மட்டில் அவர்களை கட்டயாம் மத மாற்றம் செய்பவர்களாக கருதும் சூழலையும் ஏற்படுத்துகின்றனர். பொதுவாக சிறுபான்மையினரை இந்து கலாச்சாரம், மற்றும் இந்துக்களின் செல்வத்தை அழிக்கும் ஆக்கிரமிப்பாளர்களாக சித்தரிக் கப்பட்டனர். இந்த கற்பனை அச்சுறுத்தல்களை வெளிப்படையாக நிவர்த்தி செய்வதற்கு சிறுபான்மை எதிர்ப்புச் சட்டங்களை இயற்றுவதும் ஒரு உக்த்தியாகும்.

முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 2025இல் எரிச்சலூட்டும் வெறுப்பு பேச்சுகள் மற்றும் செயல்பாடுகள், மிகவும் வெளிப்படையான தூண்டுதலை வெளிப்படுத்தின. இந்துத்துவ அரசியல் தலைவர்களும், தீவிர வலதுசாரிகளும் மனிதாபிமானமற்ற வெறுப்பு சொல்லை பயன்படுத்த ஆரம்பித்தனர், மேலும் பொருளாதார புறக்கணிப்புகளை

வலியுறுத்துதல் (Economical boycott), சிறுபான்மையினருக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை அழிக்க அழைப்பு விடுத்தல் மற்றும் முஸ்லிம்களின் அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு இந்துக்கள் ஆயுதம் வைத்துக்கொள்ளுமாறு வற்புறுத்துவது, போன்ற ஆபத்தான பேச்சுக்கள் தொடர்ந்து பரவி வருவதை இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. 2025 ஆண்டிலும்

முந்தைய ஆண்டைப் போலவே, பாரதிய ஜனதா கட்சி (BJP), ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கம் (RSS) - மற்றும் அதன் இணை அமைப்புகளான விஸ்வ இந்து பரிஷத் (VHP) மற்றும் பஜ்ரங் தள் ஆகியவை வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளின் மையப்புள்ளியாக இருந்தன. இந்த அமைப்பு களுக்கு துணையாக, அந்தராஷ்ட்ரிய இந்து பரிஷத், ராஷ்ட்ரிய பஜ்ரங் தளம், சகல் இந்து சமாஜ் மற்றும் இந்து ஜனஜக்ருதி சமிதி (HJS) உள்ளிட்ட பிற தீவிர வலதுசாரி குழுக்களும் அதன் பங்கைக் சிறப்பாக கொண்டிருந்தன.

இந்த அமைப்புகளின் உறுப்பினர்களின் பேச்சுகள் சமூக ஊடகங்கள் வழியாக பரவ லாகப் பரப்பப்பட்டன, உள்ளூர் நிகழ்வுகளின் நடவடிக்கைகளை ஒரு சில நிமிடங்களில் தேசிய அளவில் பார்க்க முடிந்தது. அதாவது உள்ளூர் வெறுப்பு பேச்சுகள் நாடாளுமன்றம் வரை செல்வதற்கான கட்டமைப்புகள் ஆச்சர்யம் அளிக்க கூடியதாகவே உள்ளது. அதே நேரத்தில் உள்ளூர் தலைவர்கள் இவ்வகையான வெறுப்பு நிகழ்வுகளில் பங்கேற்பது மூலம் கட்டமைப்பின் உயர் மட்ட தலைவர்களின் கவனதிற்க்கு சென்று அதற்கான வெகுமதியை பதவிகளாக பெறுகின்றனர். இந்தவகையான வெகுமதிகள் அவர்களை உற்ச்சாகப்படுத்தி வெறுப்பு பேச்சுகளையும், செயல்பாடுகளையும் அதிகப்படுத்தவே செய்கின்றன.

சமூக ஊடக தளங்கள், குறிப்பாக பேஸ்புக், இன்ஸ்டாகிராம், யூடியூப் மற்றும் எக்ஸ் (ட்விட்டர்), இந்த வெறுப்புச் சூழலை பரப்பு வதற்கு முக்கிய பங்கு வகித்தன. 2025 இல் ஆவணப்படுத்தப்பட்ட வெறுப்புப் பேச்சு நிகழ்வு களில் பெரும்பாலானவை ஆன்லைனில் தோன்றிய (Trending) அல்லது பரப்பப்பட்ட வீடியோக்களில் (viral videos) மூலம் பெறப் பட்டன. அத்தகைய பேச்சுகளின் நேரடி ஒளி பரப்புகள் (live streaming) நாடு முழுவதும் சென்றடைவதை எளிதாக்கின, அத்தகைய வீடியோக்கள் வெறுப்புப் பேச்சைத் தடை செய்வதாகக் கூறும் சமூக ஊடக தளக் கொள்கைகளுக்கு (social media policies) முற்றிலும் முரணானவையாக இருந்த போதிலும் நாடு முழுவதிலும் தடையில்லாமல் பரவு கின்றன. இதனால் இந்தியாவில் வெறுப்புப் பேச்சை சாதரண விடயமாக இயல்பாக்குதல் (Normalisation) மற்றும் வேரூன்றச் செய்வதின் (Deep rooted) மூலம் ஒரு புதிய மற்றும் ஆபத்தான சமுதாயம் உருவாகுவதை பார்க்கமுடிகின்றன.

இந்துத்துவவாதம் என்ற அரசியல் திட்டம், வெறுப்புப் பேச்சை அதன் இயந்திரத்துக்கு தேவையான எரிபொருளாக முழுமையாக உள்வாங்கி, அரசியல் சொற்பொழிவு மற்றும் பொது வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளில் பகுதியாக அதை நியாயப்படுத்தியுள்ளது. ஏற்கனவே 2023 மற்றும் 2024 அறிக்கையிடல் காலங்களில் ஆவணப்படுத்தப்பட்ட இந்தப் போக்கின் இடைவிடாத அதிகரிப்பு சமூக மற்றும் அரசியல் சூழலின் குறிப்பிடத்தக்க இழிவைக் குறிக்கிறது.

இந்தியாவில் இத்தகைய சூழலில், சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்பு வெளிப்படையாக நாட்டின் மிகவும் சக்தி வாய்ந்த அரசியல் பிரமுகர்கள் மற்றும் உயர் அதிகாரிகளால் தீவிரமாக அங்கீகரிக்கப்படு கின்றன. சமூக ஊடகங்கள் வெறுப்பு நிகழ்வு களை கட்டுப்படுத்தும் தணிக்கைகளை அமல் படுத்துவதில் விருப்பமின்மை இல்லாததால், இத்தகைய வெறுப்பு நிகழ்வுகள் டிஜிட்டல் தளங்களில் மேலும் பெருகுகின்றன, இந்த நிலைமை இந்தியாவின் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சிறுபான்மை சமூகங்களை வெறுப்புக் குள்ளானதாகவும், துன்புறுத்தல், பாகுபாடு காட்டுதல், விரோதம் கொள்லல் மற்றும் வன்முறைச் செயல்களுக்கு ஆளாக்குகிறது.

FIGURE 2: HATE SPEECH TRENDS ACROSS STATES AND UNION TERRITORIES



## வெறுப்பு பேச்சின் தரவுகள்

*2025ஆம் ஆண்டில், நடந்த நிகழ்வுகளில் 1,318 வெறுப்புப் பேச்சுக்கள் பேசப்பட்டதாக இந்தியா வெறுப்பு ஆய்வகம் (IHL) ஆவணப் படுத்தியது. மத சிறுபான்மையினர் (முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்கள்) இந்த வெறுப்புகளின் முதன்மை இலக்குகளாக இருந்தனர். 1289 சம்பவங்கள் அதாவது 98 சதவீதம் முஸ்லிம்களை குறிவைத்தன. வெளிப்படையாக 1156 வழக்கு களிலும், 133 வழக்குகளில் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து வெறுப்பு பேச்சுகள் பேசப்பட்டன. 162 சம்பவங்களில் கிறிஸ்தவர்களை குறிவைத்த வெறுப்புப் பேச்சு பதிவு செய்யப்பட்டுள்ளது,*




| வெருப்பு பேச்சுகள் | முஸ்லீம்கள் மீது | கிருஸ்த்தவர்கள் மீது |
|---|---|---|
| மொத்த வெறுப்பு | 1318 | 162 |
| | | |
| வெறுப்பு நிகழ்வுகள் | 98 | 12 |
| | | |
| வெளிப்படையாக | 1289 | 29 |
| | | |
| மறைமுகமாக | 133 | 133 |

*வெளிப்படையாக 29 வழக்குகளிலும், முஸ்லிம் களுடன் சேர்ந்து 133 வழக்குகளிலும் வெறுப்பு பேச்சுகள் பேசப்பட்டன. இந்த புள்ளிவிவரங்கள் குறிப்பிடுவது போல, பல நிகழ்வுகள் மற்றும் கூட்டங்களில் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ் தவர்கள் இருவரையும் நோக்கி வெறுப்புப் பேச்சுகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்ததாகவே பேசப்பட்டது,*

***மேற்கண்ட தகவல்கள் மூலமாக முஸ்லீம்கள் மீதான வெறுப்பு பேச்சுகளின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதை அறிந்து கொள்ளலாம்.**

*கூடுதலாக, 69 வெறுப்புப் பேச்சு நிகழ்வுகள் ரோஹிங்கியா அகதிகளை குறிவைத்தன, 192 பேச்சுகள் "வங்காளதேச ஊடுருவல்காரர்" என்ற பொய்யைத் தூண்டின. இந்திய சூழலில், "பங்களாதேசி" என்ற சொல் ஒரு அவதூறாக மாற்றப்பட்டுள்ளது, மேலும் இந்து தீவிர வலதுசாரித் தலைவர்கள், குழுக்கள் மற்றும் ஆளும் பாரதிய ஜனதா கட்சி (பாஜக) அரசியல் வாதிகளால் "பங்களாதேசி" எனும் சொல் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது.*

*இந்திய முஸ்லிம்கள், குறிப்பாக மேற்கு வங்கம் அல்லது அசாமில் வசித்து வரும் பெரும் பான்மை முஸ்லீம்களை வங்காள வம்சாவளியைச் சேர்ந்தவர்கள், என்றும் அவர்களை இந்தியாவில் "சட்டவிரோதமாக" வசிக்கும் 'பங்களாதேசி" என்று பொய்யாக முத்திரை குத்துகிறார்கள்.*

*முந்தைய 2023,2024 ஆண்டுகளைப் போலவே 2025 ஆம் ஆண்டு வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளும், கூட்டங்களும் இந்தியா முழுவதும் பரவிக்கிடந்தன, இருப்பினும் பெரும்பாலான சம்பவங்கள் நாட்டின் வடக்கு, மத்திய மற்றும் மேற்குப் பகுதிகளில் குவிந்திருந்தன.*

| வெருப்பு பேச்சுகள் | முஸ்லீம்கள் மீது | கிருஸ்த்தவர்கள் மீது |
|---|---|---|
| மொத்த வெறுப்பு | 266 | |
| | | |
| | | |
| வெளிப்படையாக | 227 | 34 |
| | | |
| பொதுவாக | 5 | 5 |

ஒட்டுமொத்தமாக, 1,318 ஆவணப்படுத்தப் பட்ட வெறுப்புப் பேச்சு சம்பவங்கள், 21 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசம் மற்றும் டெல்லியின் தேசிய தலைநகரம் (NCT)இல் நிகழ்ந்துள்ளன.

## உத்திரப்பிரதேசத்தில் வெறுப்பு நிகழ்வுகள்

2024ஆம் ஆண்டின் அறிக்கையில் முதலிடத் தில் இருந்த மாநிலங்கள் 2025 ஆம் ஆண்டிலும் வெறுப்பு நிகழ்வுகளின் மையப்புள்ளியாக பிரதிபலித்தன, இருப்பினும் பல மாநிலங்கள் குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கங்களைப் பதிவு செய்தன. பகுப்பாய்வு செய்யப்பட்ட 21 மாநிலங்களில், இந்தியாவின் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமான உத்தரப் பிரதேசம், 266 வெறுப்புப் பேச்சு நிகழ்வு களுடன் அதிக எண்ணிக்கையிலான வெறுப்பு நிகழ்வுகளை கொண்ட மாநிலமாக திகழ்கின்றது. மொத்த சம்பவங்களில் 20 சதவீத சம்பவங்கள் ஆகும். இது 2024இல் பதிவான 242 நிகழ்வு களுடன் ஒப்பிடும்போது கிட்டத்தட்ட 10 சதவீத அதிகரிப்பையும், 2023 இல் பதிவான 104 நிகழ்வு களுடன் ஒப்பிடும்போது 156 சதவீத அதிகரிப் பையும் குறிக்கிறது.

பொதுத் தேர்தல்களில் வாக்களித்த 2024ஐப் போலல்லாமல், 2025ஆம் ஆண்டானது உத்தர பிரதேசத்தில் தேர்தல் ஆண்டாக இல்லாத நிலையிலும், இந்த அதிகரிப்பு குறிப்பாக குறிப் பிடத்தக்கது. யோகி ஆதித்யநாத் மாநிலத்தை ஆள்கிறார் எனும் பொழுது உத்தரபிரதேசத்தில் வெறுப்புப் பேச்சுகளின் அதிகரிப்பு ஆச்சர்யத்தை கொடுக்கவில்லை,, அவர் 2024 அறிக்கையில் அனைத்து இந்துத்துவ அரசியல் மற்றும் தீவிர வலதுசாரித் தலைவர்களை காட்டிலும் வெறுப்புப் பேச்சுகளை வழங்கு வதில் முதலிடத்தில் இருந்தார், மேலும் 2025இல் மாநிலத்திற்குள்ளும் நாட்டின் பிற இடங் களிலும் பல வெறுப்புப் பேச்சுகளை வழங் கினார். உத்தரபிரதேசத்தில் 266 வெறுப்புப் பேச்சுகளில் 227 வெளிப்படையாக முஸ்லிம் களுக்கு எதிரானவை, 34 கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் இருவரையும் குறிவைத்து, 5 வெளிப் படையாக கிறிஸ்தவர்களுக்கு எதிரானவை.

உத்தரபிரதேசத்தின் 2025ம் ஆண்டின் மாதாந்திர வெறுப்பு நிகழ்வுகளின் தரவுகள் முழுவதும் வெறுப்புப் பேச்சுக்களின் நிலையான வளைர்ச்சிப்போக்கை வெளிப்படுத்துகின்றன, மாதத்திற்கு 11 முதல் 35 நிகழ்வுகள் வரை நடக்கின்றன.

இந்த ஆண்டில் இரண்டு குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் வெறுப்பு நிகழ்வுகளின் அதிகரிப்புகள் காணப்பட்டன.

முதல் அதிகரிப்பு ஆகஸ்ட் மாதத்தில் விஸ்வ இந்து பரிஷத்-பஜ்ரங் தள் (VIHHP-Bajrangdal) ஏற்பாடு செய்த அகண்ட பாரத சங்கல்ப் திவாஸ் (பிரிக்கப்படாத இந்தியாவிற்கான உறுதிமொழி நாள்) நிகழ்வுகளுடன் இணைந்தது. அகண்ட பாரத சங்கல்ப் திவாஸ் என்பது அகண்ட பாரதத்தின் கருத்தாக்கத்துடன் இணைக்கப் பட்ட ஒரு கருத்தியல் அணிதிரட்டலாகும், இது இந்தியாவின் தற்போதைய எல்லைகளுக்கு அப்பால் நாடுகளை இணைப்பதையும், இந்துத் துவ அதிகார பரவலாக்களையும் ஊக்குவிக்கிறது.

அக்டோபரில் இரண்டாவது வெறுப்பு பேச்சு அதிகரிப்பு சிவசக்தி அகடா எனும் குழுவை வழி நடத்தும் தீவிர இந்துத்துவ வலதுசாரி மதத் தலைவரான மதுரம் ஒஷரண் சிவா, மற்றும் யதி நரசிங்கானந்த் சரஸ்வதி ஆகியோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணிகளில் பதிவு செய்யப்பட்டது. இருவர்களின் உரைகளுடன் கூடிய பொது மக்களின் கோஷங்கள் வெறுப்பு பேச்சுகளாகவே அமைந்தன.





# சிறுதானியங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

குடும்பத்தோடு அமைதியாக உட்கார்ந்து நிதானமாக மென்று சாப்பிடும் உணவுப் பழக்கம் அடியோடு மறைந்துவிட்டது. எல்லா வற்றிலும் இன்று வேகம்தான். அவசர அவசர மாக நின்றுகொண்டோ அல்லது சிறு நடை பயின்று பேசிக்கொண்டோ சாப்பிடுவது வீட்டிலேயே பலருக்கு வழக்கமாகிவிட்டது. இவர்களுக்கு மத்தியில்தான் சிறுதானியங் களைத் தேடி உண்ணும் ஆரோக்கிய விரும்பி களும் இருக்கிறார்கள். இவை முதியோருக்கு நலம் தரும் உணவுகள் என்பது கற்றுக்கொள்ள வேண்டியதாகும்.

### கொள்ளு

உடல்பருமனைக் குறைக்க கொள்ளு சிறந்த உணவு. இதில் நார்ச்சத்து மிக அதிகம். நார்ச்சத்து மலச்சிக்கல் வராமல் பாதுகாப்பது மட்டுமில்லாமல், குடல் புற்றுநோய் வருவதையும் குறைக்கிறது. மேலும், ரத்தத்தில் சர்க்கரையின் அளவு மற்றும் கொழுப்பின் அளவையும் குறைக்கிறது. கல்லீரலில் கற்கள் படிய விடாமல் பாதுகாக்கிறது. மனிதர்களின் உடலிலுள்ள கொழுப்பை நீக்கி, திடமாக வைத்திருக்கும் அற்புதமான தானியம் கொள்ளு.

### கேழ்வரகு

கேழ்வரகுக்கு ராகி என்று இன்னொரு பெயரும் உண்டு. ராகி எளிய முறையில் பயிர் செய்யக்கூடிய ஒரு தானியம். அதை யாரும் விரும்பி உண்ணாததினால் இந்தத் தானியம் கடையில் கிடைப்பது கூட மிகவும் அரிதாகி விட்டது. இதில் நம் உடலுக்கு ஆற்றல் தரும் நிறைய கலோரிகள் உள்ளன. சுண்ணாம்புச் சத்தும் கேழ்வரகில் அதிகம்.

மாதவிடாய் அடைந்த பெண்களுக்கு எலும்பு பலவீனத்தைத் தடுக்க ராகி ஒரு சிறந்த உணவாகும். நீரிழிவு மற்றும் உடல்பருமனைக் குறைக்கும். இதில் நார்ச்சத்து அதிகமுள்ளதால் மலச்சிக்கலையும் விரட்டும்.

### கம்பு

கம்பு மிகவும் சுவை மிகுந்தது. சமைத்தபின்பு அதன் அளவு மூன்று மடங்கு அதிகரிக்கும் தன்மையுள்ளது. இதில் வைட்டமின்கள், தாதுப்பொருட்கள் நிறைய உள்ளன. இதில் மாவுச்சத்து அதிகமுள்ளதால் அதிக சக்தி கொடுக்கவல்லது. கம்பில் புரதச்சத்தும் நார்ச் சத்தும் அதிகமுள்ளது. இதைத் தொடர்ந்து சாப்பிடுவதால் மலச்சிக்கல் மற்றும் வயிற்றுப் புண் வராமல் தவிர்க்கலாம்.

### சோளம்

இதில் கலோரி அதிகமுள்ளதால் உடலுக்கு அதிக சக்தி கொடுக்கவல்லது. இதில் பாஸ்பரஸ் சத்து அதிகமுள்ளது. பாஸ்பரஸ் சத்து பல் மற்றும் எலும்புகளுக்கு மிகவும் தேவையானது. இதில் வைட்டமின் பி1, பி5 மற்றும் சி உள்ளன. நார்ச்சத்தும் அதிகமுள்ளது. மூளை நன்றாகச் செயல்பட உதவுவதால், மன உளைச்சலையும் குறைக்கிறது. மாரடைப்பு ஏற்படும் அபாயத்தை

உருவாக்கும் ஹோமோசிஸ்டின் (Homocysteine) அளவைக் குறைக்கும் திறனும் சோளத்துக்கு உண்டு.

## தினை

மற்ற தானியங்களைப் போலவே தினையிலும் கண்ணாம்புச் சத்து, நார்ச்சத்து அதிகம் உள்ளது.

## சிறுதானியங்களின் மருத்துவப் பயன்கள்

- நார்ச்சத்து அதிகம் இருப்பதால் மலச்சிக் கலைத் தடுக்கிறது.
- கண்ணாம்புச்சத்து அதிகம் உள்ளதால் பல்லையும்எலும்பையும்உறுதிப்படுத்துகிறது.
- ஆற்றல் தரும் கலோரி அதிகம் இருப்பதால், இவ்வுணவை உண்டபின் உடலுக்குச் சத்தானது உடனே கிடைக்கிறது.
- குடலில் இருந்து சர்க்கரை மெதுவாக உறிஞ் சப்படுவதால் ரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறைகிறது.
- ரத்தத்தில் உள்ள கொழுப்புச்சத்து குறைகிறது. குடல் புற்றுநோய் போன்ற சில புற்றுநோய் களைத் தடுக்கும் ஆற்றலும் சிறுதானியங் களுக்கு உண்டு.
- சில தானியவகைகள் மனநலனையும் மேம்படுத்த வல்லவை.
- உடல்பருமனைத் தடுத்து, அதிக எடையைக் குறைக்கிறது.
- எளிதில் ஜீரணமாகும் என்பதால் அஜீரணத்தை ஏற்படுத்தாது.
- பெரும்பாலும் எந்த விதமான ஒவ்வாமை யையும் சிறுதானியங்கள் உண்டாக்காது.
- கம்பு, ராகி போன்றவற்றின் கஞ்சி, கோடையில் வெப்பத்தைக் குறைக்க உதவுகிறது.

மூன்று வேளையும் அரிசி உணவு. உடற் பயிற்சி இல்லை. எப்பொழுதும் தொலைக் காட்சியே கதி என்று கிடப்பது. இந்த வாழ்க்கை முறை மாற்றத்தில் உடனடி விளைவு? உடல் பருமன், நீரிழிவு நோய். மருத்துவமனைகளில் நோயாளிகளின் கூட்டம் அலைமோதுகிறது. அந்த வரிசையில் இடம்பிடிப்பதைத் தவிர்க்கச் சிறந்த வழி, சிறுதானிய உணவு முறைகளுக்கு நமது உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்வதுதான்.

இத்தகைய பல நன்மைகளைத் தரும் சிறு தானியங்களை உணவில் சேர்த்துக்கொண்டால் முதுமைக்கு விடை கொடுப்பது நிச்சயம்!

**- நன்றி : முதுமை எனும் பூங்காற்று**





அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குமு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887



# மிரட்டும் முதுமை



ரஹ்மத் ராஜகுமாரன்

"அல்லாஹ் தான் உங்களை (ஆரம்பத்தில்) பலஹீனமான நிலையில் படைக்கிறான்; பலஹீனத்திற்குப் பின்னர், அவனே பலத்தை (யும் உங்களுக்கு)உண்டாக்குகிறான்; (அந்தப்) பலத்திற்குப் பின், பலஹீனத்தையும் நரையையும் அவனே உண்டாக்குகிறான்"

(குர்ஆன் : 30:54)

**நோய்களையும்** சாவுகளையும் பார்த்துப் புத்தர் வெறுத்துப் போனது சரி. அந்த வரிசையில் 'மூப்பு' என்பதையும் அவர் ஏன் சேர்த்துக் கொண்டார்..? வியாதிகளுக்கும் மரணத்துக்கும்

**இணையானதா முதுமை..?**

கொஞ்ச நாளைக்கு முன்னால் அமெரிக்க டெலிவிஷனில் ஒரு பேட்டியைக் காட்டினார்கள். பேட்டி கொடுத்தவர், ரொனால்டு ரீகன். முன்னாள் அமெரிக்க அதிபர். அதற்கும் முன்னால் ஹாலிவுட்டின் நட்சத்திரமாக சாகசங்கள் செய்தவர். குளறிக் குளறி ரீகன் சொன்னது இதுதான்:

"இது...என்.. வாழ்க்கையின்.. அஸ்தமன நேரம்!" ரீகன் குறிப்பிட்டது, தனக்கு வந்திருக்கும் 'ஆல்ஷீமர்ஸ் டிஸீஸ்' (Alzheimer's Disease), எனும் நோயைப் பற்றி.

இதே ஆல்ஷீமர்ஸ் டிஸீஸால் பாதிக்கப்பட்ட ஒரு மூதாட்டியின் கேஸ் ஹிஸ்டரியை ஒரு மருத்துவ இதழில் பிரசுரித்திருந்தார்கள்.

வாழ்க்கையில் போராடி ஜெயித்த அந்த மூதாட்டிக்கு, இன்று தான் யார், எங்கிருக்கிறோம் என்பதுகூடத் தெரியவில்லை! தன் கணவனைக் காட்டி 'யார் இவன். என் படுக்கையில் உட்கார்ந்திருக்கிறானே..?" என்று கேட்பது – 'ஐயையோ! என் பணத்தையெல்லாம் நீதான் திருடிட்டே.' என்று தன்னைக் கவனித்துக் கொள்ளும் மகள் மீதே பழிபோடுவது.. 'நான் கோவாவுக்குப் போகிறேன்' என்று சொல்லிவிட்டுக் கிளம்பிப் போய்த் தள்ளாடி விழும்வரை எங்கெங்கோ சுற்றிக் கொண்டிருப்பது இதெல்லாம் நோய் தாக்கிய ஆரம்பக் கட்டங்கள்தான்.

இன்றைக்கு அந்த மூதாட்டி படுக்கையில் பரப்பி வைக்கப்பட்ட காய்கறிகளைப் போலத்

தான் இருக்கிறார். மலங்க மலங்க விழித்துக் கொண்டு, கட்டிலிலேயே மலஜலம் கழித்துக் கொண்டு, இன்னதென்று தெரியாமலேயே தன் மரணத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறார்.

'எனக்குச் சோறூட்டி வளர்த்த என் அம்மாவுக்கு, இன்று நான் சோறூட்டிக் கொண்டிருக்கிறேன். ஒரு நோய், வாழ்க்கையை எப்படித் தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிடுகிறது!' என்று சோகமாகப் பேட்டி கொடுத்திருந்தார், அந்த மூதாட்டியின் மகள்.

"இன்னும்; உங்களைப்படைத்தவன் அல்லாஹ்தான், பின்னர் அவனே உங்களை மரணிக்கச் செய்கிறான்; கல்வியறிவு பெற்றிருந்தும் (பின்) எதுவுமே அறியாதவர்களைப் போல் ஆகிவிடக் கூடிய மிகத் தளர்ந்த வயோதிகப் பருவம் வரையில் வாழ்ந்திருப்பவர்களும் உங்களில் உண்டு " (குர்ஆன் : 16:70)

ஆல்ஷீமர்ஸ் நோய் இந்த வசனத்தின் நவீன மருத்துவ வெளிப்பாடு போலவே உள்ளது.

இவர்களைக் குறித்து இஸ்லாத்தின் நிலைபாடு, "நினைவு இழந்தவர் பாவத்திற்கு பொறுப்பல்ல; அவரின் தொழுகை, நோன்பு இயலாத நிலையில் கடமை இல்லை. அவர் ஒரு அமாநத் (Trust) – குடும்பம், சமூகம் கவனிக்க வேண்டியவர்

“முதுமையில் பெற்றோரை கவனித்து சொர்க்கம் பெறாதவன் – அவன் நாசமாகட்டும்.”(முஸ்லிம்)

குத்துச் சண்டைத் துறையில் உலகையே கலக்கிய முகம்மது அலி என்கிற கறுப்பு வீரரை உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஒருவேளை, அவருடைய ரசிகராகக்கூட இருப்பீர்கள். அப்படியிருந்தால், அட்லாண்டா ஒலிம்பிக்ஸின் ஜோதியை, முகம்மது அலி ஏற்றிவைத்த காட்சியைப் பார்த்து வேதனைப் பட்டிருப்பீர்கள்.

எத்தனையோ குத்துச்சண்டை வீரர்களை விநாடியின் சின்னப் பகுதிக்குள் வீழ்த்தி, 'நாக் அவுட்' செய்த அந்தக் கையினால் இன்று ஒரு சின்ன டார்ச்சைத் தூக்க முடியவில்லை! வாயில் எச்சில் ஒழுக, கை சீரான அசைவின்றி வெட்டி வெட்டி நகர, தவித்துப் போயிருந்தார் அலி! அவரைத் தாக்கியிருப்பது 'பார்க்கின்ஸன்ஸ்




டிஸீஸ்! (Parkinson’s Disease)

பேப்பரில் முன்பொரு செய்தி வந்திருந்தது. இதே அறிகுறிகளோடு இதே வியாதி இப்போதைய போப்பாண்டவரான இரண்டாம் ஜான் பாலைத் தாக்கியிருக்கிறது! 'போப் ஜான் பால், எக்ஸ்ட்ராபிரமிடல் சிண்ட்ரோமால் பீடிக்கப்பட்டிருக்கிறார்' என்று வாடிகன் சர்ச்சிலிருந்து வெளியாகியிருக்கும் செய்திக் குறிப்பில் இருந்தது.

பெயர் எதுவாக இருந்தால் என்ன? அதே செய்திக் குறிப்பில், இந்த நோய்க்குக் காரணமாக 'மூளையில் இருக்கும் நரம்பு செல்கள் அழிந்துபோக ஆரம்பித்துவிட்டன' என்றும் காணப்படுகிறதே. அதுதான் 'பார்க்கின்ஸன்ஸ் டிஸீஸ்'!

இந்த எல்லாவற்றுக்கும் அடிப்படை – முதுமைதான். இப்படிப்பட்ட முதுமையை புத்தர் வெறுத்ததில் என்ன ஆச்சரியம்.?

ஆல்ஷீமர்ஸ், பார்கின்ஸன்ஸ், உடலின் வீழ்ச்சி, ஆனால், ரூஹின் உயர்ச்சி இஸ்லாம் இந்நோயாளிகளை “பயனற்றவர்கள்” என்று அல்ல

“அல்லாஹ்வின் ரகசியக் கருணை பெறுபவர்கள்” என்று இஸ்லாம் பார்க்கிறது.



# உச்ச நீதிமன்றமும் குண்டு வெடிப்புகளும்

**பிராமிணிஸ்ட்டுகள் இந்தியா முழுவதும் குண்டுவெடிப்புகளை நடத்தினார்கள். பின்னர் முஸ்லிம்கள் தாம் அந்தக் குண்டுகளை வைத்தார்கள் என இடைவிடாமல் பிரச்சாரம் செய்தார்கள். ஏன் முஸ்லிம்கள் குண்டு வைக்கின்றார்கள் எனக் கேட்டால், பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டதற்கு பழி தீர்க்கின்றார்கள் என்று முதலிலும், பின்னர் குஜராத் இனப்படுகொலைக்குப் பழி வாங்குகின்றார்கள் என்றும் கூறினார்கள்**

**மார்ச் மாத தொடர்ச்சி...**

காரணம் இந்த அப்பாவி முஸ்லிம்கள் பிணையில் விடுவிக்கப்பட்டால், எல்லா குண்டுவெடிப்பு வழக்குகளிலும் மக்கள் மறு புலனாய்வைக் கோருவார்கள். அத்தோடு நாடெங்கும் சிறைகளில் சிக்கித் தவிக்கும் அப்பாவி முஸ்லிம்கள் (ஆயிரக்கணக்கில்) விடுதலை அடைவார்கள். முடிவில் மத்திய உளவுத்துறையின் விளையாட்டுக்கள், அதாவது குண்டு வைக்கும் சதிகள் அனைத்தும் வெளி வந்துவிடும்.

ஆனால் சுவாமி அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலத்திற்குப் பின், பொதுமக்கள் தொடர்ந்து எல்லா குண்டுவெடிப்பு வழக்கு களையும் மறு ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். தொடர்ந்து அழுத்தங்களைத் தந்துகொண்டே இருந்தார்கள். இந்தப் பின்னணியில் இதனால் இந்த குண்டு வெடிப்பு வழக்கின் மறு ஆய்வுக்காக வழக்கு 2011 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் NIA என்ற மத்திய புலனாய்வு முகமையிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 9 பேரும் – ஒன்பது அப்பாவி முஸ்லிம்களும் சுவாமி அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்கு மூலத்தின் பின்னணியில் தங்களை விடுவிக்க வேண்டும் என நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்தார்கள். இதில் NIA என்ற தேசிய புலனாய்வு முகமை, இந்தப் பிணையை மறுக்கப்போவதில்லை எனக் கூறிவிட்டது. இந்த விவகாரத்தில் நீதிமன்றத் திற்கு தந்த அறிக்கை பதில் அறிக்கையில், அது இதுவரை சேகரிக்கப்பட்ட சாட்சியங்களையும் ஆவணங்களையும் மறு பரிசீலனைச் செய்து கொண்டிருப்பதாகவும், (அதாவது ATS என்ற தீவிரவாதத் தடுப்புப் படையும், மத்தியப் புலனாய்வுத்துறையும் சேகரித்த ஆவணங்கள்) புதிய சாட்சியங்களைத் திரட்டிக் கொண்டிருப்ப தாகவும் தனது பதில் அறிக்கையில் குறிப்பிட்டது.

...(NIA) என்ற தேசிய புலனாய்வு முகமையின் புலனாய்வு பல புதிய உண்மைகளை வெளிச் சத்திற்கு கொண்டு வந்தது. தடயவியல் அறிக்கைகள், சாட்சியங்கள் தந்த வாக்கு மூலங்கள், இவையெல்லாம் பல புதிய உண்மைகளை உணர்த்துகின்றன.

இவையெல்லாம் தேசிய புலனாய்வு முகமை தாக்கல் செய்த பதிலில் இடம் பெற்றன.

இவ்வாறெல்லாம், திரட்டிய புதிய ஆவணங் களும் அறிக்கைகளும், சாட்சியங்களும், தேசிய புலனாய்வு முகமையின், உயர் அதிகாரிகள் முன் சமர்ப்பிக்கப்பட்டன. இதைக் கொண்டு அந்த (9) ஒன்பது அப்பாவி முஸ்லிம்களின் பிணையை எதிர்க்கலாமா? கூடாதா? என்பதை முடிவு செய்ய வேண்டும் எனவும் உயர் அதிகாரிகளிடம் கேட்கப்பட்டது.

மிகப்பெரியதொரு ஆலோசனைக்கு அனைத்தும் உட்படுத் தப்பட்டன. முடிவில் அந்த 9 (ஒன்பது) அப்பாவி முஸ்லிம்களின் பிணையை மறுப்பதில்லை என முடிவு செய்யப்பட்டது.

தேசிய புலனாய்வு முகமை சமர்ப்பித்த, ஆவணங்களின் அடிப்படையில், மும்பையின் சிறப்பு மோக்கா (Mcoca) நீதிமன்றம் நவம்பர்–5,2011 இல் பிணை வழங்கியது.

NIAவுடைய புதிய புலனாய்வு பல உண்மை களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தன. அவை...

1) முதலில் கொடுத்த வாக்குமூலத்தை குற்றம் சுமத்தப்பட்ட அப்பாவிகள் பின்வாங்கிக் கொண்டார்கள்.

2) ஷபீர் மசியுல்லாஹ்வின் தொழிற் சாலையில் வெடி பொருட்கள். அதாவது, ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருட்கள், எடுக்கப்பட்டதற்கு, சாட்சியமாகக் காட்டப் பட்டிருந்தவர்கள், தாங்கள் அந்த இடத்திற்கு வந்ததே இல்லை என்றும், எங்களுக்கு எதுவும் தெரியாது, என்றும் கூறிவிட்டார்கள்.

3) குண்டுகளைத் தயாரித்தபோது, நான் கண்ணால் கண்டேன் என சாட்சியம் சொன்ன ஒருவர், இந்திய தண்டணைச் சட்ட முறைமை Cr.PC. பிரிவு 164–ன் கீழ் வாக்குமூலம் கொடுத்திருந்தார். அவர் தன்னைக் கட்டா யப்படுத்தித் தான் அந்த வாக்குமூலத்தை வாங்கினார்கள் எனக் கூறிவிட்டார். இதனை அவர் அலஹாபாத் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ஒரு அபிடவிட் அறிக்கை மூலம் கூறினார்.



**எஸ்.எம். முஷ்ரிஃப், IPS**

முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மகாராஷ்டிரா காவல்துறை

4) குண்டுகளை (வெடிக்க) வைத்ததாகக் குற்றம் சாட்டப் பெற்ற முஹம்மத் ஷாஹித் என்பவர் அங்கிருந்து மாலேகோனிலிருந்து 400 கிலோ மீட்டர்களுக்கு அப்பால், உள்ள ஃபூல்சங்வி என்ற இடத்தில் (இது யவாத்மால் மாவட்டத்தில் இருக்கின்றது) தொழுகை நடத்திக் கொண்டிருந்ததாக நிரூபித்தார். (NIA) தேசிய புலனாய்வு முகமை, ஃபூல் சங்வி எனும் இடத்தில் 12 பேரை விசாரித்தார்கள். இந்த விசாரணையில் முஹம்மத் ஷாஹித் சொல்வது உண்மை என்பதை கண்டறிந்தார்கள்.

5) (மாலேகான்) குண்டுவெடிப்பின் மூளை எனக் குற்றம் சாட்டப் பெற்றவர் ஷாபிர் மசியுல்லாஹ். (பேட்டரிவாலர்) இவர் மும்பை யில் தான் வெடி பொருட்களை வாங்கினார் என்றும் குற்றம் சாட்டப் பெற்றவர். அத்தோடு இரண்டு பாகிஸ்தான் தேசத்தைச் சார்ந்தவர் களுக்கு அடைக்கலம் தந்து, குண்டு தயாரிப்பில் கலந்துகொண்டவர் என்றும் குற்றம் சாட்டப் பெற்றவர். ஆனால் அவர் இந்தக் காலக் கட்டத்தில் மும்பைக் காவல்துறையின் (கஸ்டடியில்) கட்டுப்பாட்டில் இருந்தார். மாலேகான் குண்டுவெடிப்புக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே காவல்துறை அவரைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

பிரிதொரு புலன் விசாரணையில் பின்வரும் குற்றவாளிகள் தீட்டிய சதிவலை தெரிய வந்தது.

## தேடப்படும் குற்றவாளிகள்...

1) சுனில் ஜோஷி – (குற்றவாளி எண். 18)

2) ராமச்சந்திரகல்சங்கரா–(குற்றவாளிஎண்.–19)

3) ரமேஷ் வெங்கட் மகால்கர் என்ற
அமித் கக்லா – ( குற்றவாளி எண். – 20)

4) சந்தீப் டான்கி – (குற்றவாளி எண். – 21)

### கைது செய்யப்பட்ட குற்றவாளிகள்

5) லோகேஷ் ஷர்மா – (குற்றவாளி எண்.–17)

6) டான்சிங் சிவ் சிங் – (குற்றவாளி எண். – 16)

7) இராஜேந்திர சவ்திரி (குற்றவாளி எண். – 15)

8) மனோகர்நார்வாரியா–(குற்றவாளிஎண்.–14)

மேலே சொன்ன தேடப்பட்டுவரும் குற்றவாளிகளும், கைது செய்யப்பட்ட குற்ற வாளிகளும் இணைந்து, ஒரு பெரும் சதித் திட்டத்தைத் தீட்டினார்கள். அதில், நாட்டு மக்களை மொத்தமாகப் பீதி வயப்படுத்தும் வகையில் சில குண்டுவெடிப்புகளை நிகழ்த்துவது என்பதே முக்கியமாக இடம் பெற்றது. (இதை NIA என்ற தேசிய முகவாண்மை, தான் மேற்கொண்ட (புதிய) மறு ஆய்வில் கண்டுபிடித்தது)

இதற்காக அதாவது குண்டுவெடிப்புகளை நடத்துவதற்காக, ஒரு சிறப்புப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. அதில் குண்டுகள் தயாரிக்கவும், அவற்றை குறிப்பிட்ட இடத்தில் வெடிக்க வைப்பதற்குமான பயிற்சி வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சி, 2006 ஆம் ஆண்டு மத்திய பிரதேசத்திலுள்ள பாலி (Balgi Dewas) என்ற இடத்தில் வைத்து வழங்கப்பட்டது.

பயிற்சியை சுனில்ஜோஷி, இராமச்சந்திரா கல்சங்கரா, லோகேஷ் ஷர்மா, சந்தீப் டாங்கே ஆகியோர் வழங்கினார்கள். குண்டுவெடிப்பு இவர்களால்தான் (மேலே நாம் குறிப்பிட்ட வர்களால்) நடத்தப்பட்டது. இவர்கள் இன்னும் பல குண்டு வெடிப்புகளை நடத்தி இருக் கின்றார்கள்.

இந்தக் குற்றவாளிகள், மத்தியப் பிரதேசம், இந்தூரில் உள்ள சர்வசம்பாவன் நகர் என்ற நகரிலுள்ள ஒரு வீட்டில் கூடி அடிக்கடி திட்டங் களைத் தீட்டுவார்கள். இந்தக் கூட்டங்களில் 2006 ஆம் ஆண்டு ஜூன் / ஜூலை மாதங்களில் நடந்தக் கூட்டங்களில் பல முக்கியமான திட்டங்கள் தீட்டப்பட்டன. I.E.D. (ஐ.ஈ.டி.) வகை குண்டுகளைத் தயாரிக்க தேவையான பொருட்களை எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. இந்தப் பொருட்களை இந்த வீட்டில் கொண்டு வந்து வைத்தவர்கள், தேடப்படும் குற்றவாளி களான, இராமச்சந்திரா கல்சங்கராவும், ரமேஷ் மகால்கரும்தான். குண்டுகளை இராமச்சந்திரா கல்சங்கரா, ரமேஷ் மகால்கர், லோகேஷ் ஷர்மா ஆகியோர்தான் தயாரித்தார்கள். சந்தீப் டாங்கே குண்டுகள் தயாரிப்பதற்கு வழிகாட்டினார்.

தொடர்ந்து இந்தக் கூட்டத்தினர் நடத்திய சதித் திட்டங்களில் மாலேகான் பற்றிய முழு விபரம், அதன் போக்குவரத்துக்கள், அதன் தெருக்கள் சாலைகள் இவற்றைப் பற்றிய முழு தகவல்களையும் திரட்டுவது என முடிவு செய்யப்பட்டது. இவர்கள் மூன்று முறை மாலேகானுக்குப் பயணம் செய்தார்கள். அதன் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று வந்தார்கள். மாலேகானுக்கு இவர்கள், கடைசியாக மேற்கொண்ட பயணம், குண்டு வெடிப்பிற்கு (7) ஏழு நாட்களுக்கு முன்னர்தான் நிகழ்ந்தது. இதில், இராமச்சந்திரா கல்சங்கரா, இராஜேந்திர சவ்திரி, மனோகர் நார்வாரியா, டான்சிங் சிவ் சிங் ஆகியோர் நான்கு இடங்களைத் தேர்வு செய்தார்கள். இந்த நான்கு இடங்களிலும் செப்டம்பர் 8, 2006–இல் குண்டுகளை வைத்து வெடிக்கச் செய்வது என முடிவெடுத்தனர். அன்றுதான் சபேபராத் (அதாவது முஸ்லிம்கள் அதிகமாக பலர் மஸ்ஜித் வளாகங்களில் கூடும் நாள்)




இவர்கள் தீட்டியத் திட்டத்தின் அடிப்படை யில், இராஜேந்திர சப்திரி என்பவர், ஒரு சைக்கிள் கடைக்குச் சென்று, அங்கு ஒரு அட்லஸ் சைக்கிளை வாங்கினார். சைக்கிளை பாதல் யாதவ் என்ற பெயரில் தான் வாங்கினார். அதேபோல், மனோகர் வாரிய என்பவர் இன்னொரு கடைக்குச் சென்று அங்கொரு ஹீரோ சைக்கிளை சுமர் தாக்கூர் என்ற பெயரில் வாங்கினார்.

இவர்கள் இருவரும், வாங்கிய சைக்கிள்களுடன் பஸ் நிலையம் – பேருந்து நிலையம் வந்தார்கள். அங்கே இராமச்சந்திர கல்சங்கராவும், தான்சிங் சிவ் சிங் இருவரும் காத்திருந்தார்கள். அவர்கள் கையில் வைத்திருந்த பையில் நிறைய குண்டுகள் இருந்தன. இந்தப் பைகளுள் ஒன்றில் இரண்டு குண்டுகள் இருந்தன. அந்தப் பையை இராஜேந்திர சவ்திரியின் சைக்கிளில் தொங்க விட்டார்.

பின்னர், அவர் இராஜேந்திர சவ்திரியுடன், முஷாவரத் சவ்க் நோக்கி நகர்ந்தார்கள். இது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டது தான். இன்னொரு பையை இராமச்சந்திர கல்சங்கரா, மனோகர் நார்வாரியின் சைக்கிளில் தொங்க விட்டார். இவர்கள் இருவரும், ஹமீதா மஸ்ஜித் – படா கப்ருஸ்தான் வளாகம் நோக்கி நடந்தார்கள். தாங்கள் திட்டமிட்டபடி அந்தந்த இடங்களில் குண்டுகளை வைத்தார்கள்.

இந்தக் குண்டுகளை வைத்தபின், நாலுபேரும், ஒரு பஸ்ஸில் ஏறி ஜால்கான் என்ற இடத்தை நோக்கி பயணமானார்கள். மாலையில் ஜால்கோனை சென்றடைந்தார்கள். அங்கிருந்து ஒரு தனியார் பஸ் மூலம் செப்டம்பர்–9, காலையில் (2006) இந்தூர் (மத்திய பிரதேசம்) வந்தடைந்தார்கள்.

முன்னரே திட்டமிட்டப்படி லோகேஷ் ஷர்மா அன்று மாலையே புதுடெல்லி வந்தடைந்தார். அங்கிருந்த (STD / PCO) தொலைபேசி பூத்திலிருந்து மாலேகான் குண்டு வெடிப்பு ‘தர்மசேன’ பொறுப்பேற்கின்றது எனத் தெரிவித்தார். இதை எல்லா ஊடகங்களுக்கும் தெரிவித்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தப்படி ஊடகங்கள் அந்த செய்தியை வெளியிடவு மில்லை. அவருக்கு எந்த முக்கியத்துவத்தையும் தந்திடவு மில்லை.

(NIA) என்ற தேசிய புலனாய்வு முகமை தனது புலனாய்வை முடிவுக்குக் கொண்டுவந்தது.

ஆர்.எஸ்.எஸ்., ஜெய் வந்தே மாதம் என்ற அமைப்புகளைச் சார்ந்த 8 பேர் மீது, குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது. **–தொடரும்..**






ஆங்கிலம் : **JOHN FEFFER** தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




**சென்ற இதழின் தொடர்ச்சி....**

**ஜான் பெஃபர் தொடர்ந்து கூறுகிறார்:**

அல்காயிதா. முஸ்லிம்கள், பல வகைகளில் தங்கள் வழிபாடுகளில் தவறிழைக்கின்றார்கள் என உள் மார்க்க விவகாரங்களைக் கையிலெடுத்தது. இது முஸ்லிம் உலகில் பல்வேறு காலக்கட்டங்களிலும் பெரிதாக விவாதிக்கப்பட்ட ஒன்று.

இப்படி உள்மார்க்க விவகாரங்களைப் பின்பற்றுபவர்களை, மார்க்கத்தில் குழப்பம் விளைப்பவர்கள் என ஒதுக்கி வைத்திருந்தனர் பல முஸ்லிம்கள், சில இளைஞர்கள். குறிப்பாக இஸ்லாத்தை முழுமையாகத் தெரிந்திடாதவர்கள் இந்த புதிய குழப்பங்களால் ஈர்க்கப்படுவதும் காலப் போக்கில் திருந்தி விடுவதும் வழக்கம்.

ஆனால் 9/11 பின்னணியில், பின்லேடன் அவர்களை ஹீரோவாகக் காட்டிவிட்டார் புஷ். இதனால் பின்லேடன் ஒரு பெரும் போராளி என்ற அந்தஸ்தைப் பெற்றார். பெரும் படையும், பணமும் அவருடைய கைகளுக்கு எட்டியது. அமெரிக்கா தன் தவறை உணர்ந்து கொள்வதிற்குப் பதிலாக, தானே எல்லாம் எனக் காட்டிடத் துணிந்தது.

சிறிய நாடான ஆப்கானிஸ்தானை கிள்ளுக் கீரையாக நினைத்தது. அதனால் அங்கே தலையெடுத்துத் தழைத்த முஹாஜித்கள் கொள்கை பலம் கொண்டவர்களாகவும், அமெரிக்காவை வீழ்த்தியே தீரவேண்டும் என்பதில் உறுதிமிக்கவர்களாவுமிருந்தார்கள். இதில் தங்களிடமிருக்கும் அனைத்தையும் தந்திட தயாராக இருந்தார்கள். அவர்கள் இஸ்லாத்தை முன்வைத்து தங்கள் போரை நன்கு திட்டமிட்டு நடத்தினார்கள். ஆக, நீற்றுப்போக இருந்த ஒசாமா பின்லேடன் அவர்களின் இயக்கத்திற்கு உயிர் கொடுத்துவிட்டார்கள்.

ஒருகாலகட்டத்திற்ப்பிறகு அமெரிக்காவை எதிர்க்கும், மாமனிதன், முஜாஹித், போராளி என்றே அறியப்பட்டார் பின்லேடன். முதலில் சவூதி அரேபியாவிலிருக்கும், அமெரிக்க இராணுவத் தளங்களை எதிர்த்தார்கள். பின்னர், ஆப்கானிஸ்தானில் இருக்கும் அமெரிக்க இராணுவத்தை எதிர்த்தார்கள். பின்னர் ஈராக்கில் புகுந்த அமெரிக்க இராணுவ இராணுவத்தை எதிர்த்தார்கள்.

இப்படி அமெரிக்காவுக்கு எதிரான போராளிகளாக அவர்கள் அங்கீகாரம் பெற்றார்கள். அல்லாமல் “கிலாபத்” என்ற

முஸ்லிம் உலகின் தலைமையை மீண்டும் நிலைநாட்ட வந்தவர்கள் என்ற அங்கீகாரத்தை அவர்கள் பெற்றிடவில்லை.

பியூ குளோபல் அட்டியூட் என்ற அமைப்பின் கணக்கெடுப்பின்படி, Pew Global Attitude ஒசாமா பின்லேடன் அவர்களின் உலகளாவிய ஆதரவு 2003இலிருந்து சரியத் தொடங்கி, 2011இல் வீழ்ந்தே போனது. (33) அல்காயிதாவின் இந்த வீழ்ச்சி, அவர்கள் தற்கொலை படையாக தலையெடுத்ததிலிருந்து தான் தொடக்கம். ஜப்பானின் கமிஷ்காசிஸ் பகுதியில் அவர்கள் மேற்கொண்ட கடைசி நடவடிக்கைகள், அவர்கள் தேய்ந்தே போனார்கள் என்பதை அறிவுறுத்தின.

9/11 என்பதைக் காரணங்காட்டி ஆப்கானிஸ்தானையும், அதைத் தொடர்ந்து ஈராக்-ஐயும் ஆக்கிரமித்தார்கள். இதைத் தொடர்ந்து பாகிஸ்தானிலிருந்த மதரஸாக்கள் மீது ட்ரோன் (ஆளில்லா விமானம் மூலம்) தாக்குதலை நடத்தினார்கள்.

பின்னர் Global War on Terror தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்றொன்றை நடத்தினார்கள். இது இன்னொரு முட்டாள்தனமான அறிவிப்பு. இது மொத்த முஸ்லிம்களையும் ஒன்று சேர்க்கும் ஓர் அறிவிப்பு. தொடர்ந்து சோமாலியாவில் ஒரு பெரும், கிளர்ச்சியை ஏற்பாடு செய்தார்கள். 2006இல் ஒரு "Proxy War" நிழல் யுத்தம் நடந்தது. அதாவது அமெரிக்காவின் ஆயுதங்களோடு, ஒரு கூட்டம், இஸ்லாமிய அரசோடு மோதியது. இடைவிடாமல் சோமாலியா தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் தரும் நாடு எனப் பேசி வந்தார்கள். ஆனால் உள் நாட்டுக் கிளர்ச்சியை சோமாலியா மிக எளிதாக வென்று காட்டியது. அதேபோல் தாய், வடக்கு பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் மேற்கொண்ட நடவடிக்கைகளும் எந்தப் பலனையும் தந்திடவில்லை. ஆனால் பெரிய அளவில் அமெரிக்கப் பணம் தாரைவார்த்துத் தரப்பட்டது. மொத்தமும் நஷ்டமும்.

இப்படி முஸ்லிம்களை ஒருபுறம் கொலை செய்துகொண்டே 'ஜார்ஜ் புஷ்' முஸ்லிம்களின் இதயங்களை கவர்ந்திட புதிய திட்டங்களை தொடங்கினார்கள். அவையும் பெரிய அளவில் தோற்றுப் போயின.

ஆனால், மூச்சு விடாமல், பல முயற்சிகளை மேற்கொண்டார். 24 மணிநேரமும் அரபி மொழியில், பிரச்சாரம் செய்யும் வானொலி ஒன்றைத் தொடங்கினார். அதன்பெயர் "ரேடியா சவா-"Radio Sawa" அத்தோடு 24 மணிநேருமும் ஒளி பரப்பும், தொலைக் காட்சியும் தொடங்கினார். அதன் பெயர் "அல்ஹுர்ரா"-"Al Hurra" அத்தோடு ஓர் அரபு மொழி பத்திரிகையும் தொடங்கினார். ஹி-(Hi) என்று பெயர் வைத்தார். இது இளைஞர்களுக்கான ஒரு இதழ் இலவசமாக விநியோக்கப்பட்ட நிலையிலும் இந்தப் பத்திரிகை தோற்றுப் போயிற்று.

இதுவரைக்கும், இப்படியொரு முயற்சியை யாரும் மேற்கொள்ளவில்லை என்கின்றார் R.S.சஹர்னா என்ற இராஜாங்க அதிகாரி.

ஆனால், இந்த முயற்சிகள் எந்தப் பயனுமில்லாமல் போய்விட்டது.

அரபுக்கள் ஏமாறவில்லை. மொத்தத்தில் முஸ்லிம் உலகை "தாஜா" பண்ணிட புஷ் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வி.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்.



அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் | - ரூ.350.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு | - ரூ.150.00 |
| 3. | சாதி ஒழிந்தது | - ரூ.50.00 |
| 4. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் | - ரூ.10.00 |
| 5. | டெல்லி குண்டுவெடிப்புகள் | - ரூ.10.00 |
| 6. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு | - ரூ.60.00 |
| 7. | மால்கம்-X | - ரூ.120.00 |
| 8. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம் | - ரூ.20.00 |
| 9. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள் | - ரூ.40.00 |
| 10. | கர்கரேயை கொலை செய்தது யார்? | - ரூ.450.00 |
| 11. | சிந்திப்பீர் செயல்படுவீர் | - ரூ.15.00 |
| 12. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம் | - ரூ.40.00 |
| 13. | சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள் | - ரூ.30.00 |
| 14. | நாம் பிரிந்து விடவேண்டாம் | - ரூ.350.00 |
| 15. | தாலிபானின் பிடியில் | - ரூ.150.00 |
| 16. | தீண்டாமைக்குத் தீர்வு | - ரூ.30.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு | - ரூ.110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள் | - ரூ.200.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம், | - ரூ.130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள் | - ரூ.70.00 |
| 21. | எது முதலில்? | - ரூ.450.00 |
| 22. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? | - ரூ.20.00 |

| | | |
|---|---|---|
| 23. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? | - ரூ.30.00 |
| 24. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் | - ரூ.15.00 |
| 25. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும் | - ரூ.50.00 |
| 26. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | - ரூ.40.00 |
| 27. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | - ரூ.30.00 |
| 28. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | - ரூ.50.00 |
| 29. | இஸ்லாமும் பெண்களும் | - ரூ.60.00 |
| 30. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | - ரூ.70.00 |
| 31. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | - ரூ.100.00 |
| 32. | திருக்குர்ஆன் கூறும் பொறுமை | - ரூ.80.00 |
| 33. | 26/11- விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | - ரூ.220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | - ரூ.20.00 |
| 35. | முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம் | - ரூ.10.00 |
| 36. | நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? | - ரூ.10.00 |
| 37. | குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?<br>சுவாமி அசினாந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் | - ரூ.25.00 |
| 38. | இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்<br>லேப்டாப்பில் இருந்ததென்ன? | - ரூ.20.00 |
| 39. | கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான் | - ரூ.25.00 |
| 40. | கூரியூர் ஜின்னா ஷஹீத் | - ரூ.60.00 |
| 41. | முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும் | - ரூ.20.00 |
| 42. | இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு | - ரூ.30.00 |
| 43. | சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்<br>காந்திஜி கொலை ஏன்? எப்படி? | - ரூ.30.00 |
| 44. | பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்<br>முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் | - ரூ.400.00 |
| 45. | குஜராத் : 2002 பெண்கள்<br>குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள் | - ரூ.150.00 |
| 46. | இஸ்லாம் ஒன்றே வழி! | - ரூ.120.00 |
| 47. | இஸ்லாம் உங்கள் பார்வைக்கு | - ரூ.400.00 |
| 48. | முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன? | - ரூ.300.00 |

| | | |
|---|---|---|
| 49. | இந்தியாவின் இரகசியச் சித்திரவதைக் கூடங்கள் | - ரூ.25.00 |
| 50. | இஸ்லாம் நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம் | - ரூ.100.00 |
| 51. | முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி | - ரூ.20.00 |
| 52. | நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம் | - ரூ.50.00 |
| 53. | பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி | - ரூ.50.00 |
| 54. | அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும் | - ரூ.40.00 |
| 55. | எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர் | - ரூ.60.00 |
| 56. | சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை | - ரூ.60.00 |
| 57. | பா.ரஞ்சித் அவர்களின் உரையும்<br>ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும் | - ரூ.25.00 |
| 58. | முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம்<br>இழுத்துக் கொண்டிருப்பது யார் | - ரூ.20.00 |
| 59. | அயா சோபியா உருவான வரலாறு | - ரூ.50.00 |
| 60. | வரலாற்றுப் பாடத்தில் இருந்து நீக்கப்பட வேண்டியவரா அவுரங்கசீப் | - ரூ.80 |
| 61. | ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்துவிடும் | - ரூ.15.00 |
| 62. | 9/11 யாரால்? யாரால்? | - ரூ.40.00 |
| 63. | நாளந்தா பல்கலைக்கழகத்தை எரித்தது யார்? | - ரூ.50.00 |
| 64. | சுல்தான் நூருத்தீன் ஸெங்கி (ரஹ்) | - ரூ.300.00 |
| 65. | இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள் | - ரூ.480.00 |
| 66. | இஸ்லாமிய அரசு - அரசின் பணிகள் குடிமக்களின் உரிமைகள் | - ரூ.120.00 |
| 67. | யூத, அமெரிக்க தீவிரவாதமும் இஸ்ரேலின் உருவாக்கமும் | - ரூ.15.00 |
| 68. | இஸ்லாத்தில் இறை நம்பிக்கை | - ரூ.350.00 |
| 69. | கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்வின் சாதனைகள் | - ரூ.80.00 |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

| | | |
|---|---|---|
| 70. | சாதி ஒழிந்தது | - ரூ.50.00 |

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

| | | |
|---|---|---|
| 71. | சாதி ஒழிந்தது | - ரூ.60.00 |
| 72. | புறப்படு நீயும் இஸ்லாத்தை நோக்கி | - ரூ.30.00 |

## எமது விற்பனையில்...

| | | |
|---|---|---|
| 1. | கோவை கலவரத்தில் எனது சாட்சியம் | - ரூ.100.00 |
| 2. | மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலித் படுகொலைகள் | - ரூ.120.00 |
| 3. | குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் | - ரூ.170.00 |
| 4. | நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா? | - ரூ.140.00 |
| 5. | பலி கடாக்கள் | - ரூ.300.00 |

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 1. | **END OF CASTEISM** - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | **- Rs.50.00** |
| 2. | **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media | **- Rs.695.00** |
| 3. | **MUHAMMED THE PROPHET FOR OUR TIME**<br>Karen Armstrong | **- Rs.350.00** |
| 4. | **KAFKA LAND - PREJUDICE<br>LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi | **- Rs.350.00** |
| 5. | **WHO KILLED KARKARE**<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, | **- Rs.300.00** |
| 6. | **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif | **- Rs.275.00** |
| 7. | **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION**<br>Kamaluddin Ahamed | **- Rs.60.00** |
| 8. | **MUSLIMS AGAINST PARTITION OF INDIA**<br>Shamsul Islam, Pharos Media | **- Rs.280.00** |
| 9. | **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN**<br>(EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | **- Rs.25.00** |
| 10. | **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE**<br>Nilofar Suhrawardy | **- Rs.150.00** |
| 11. | **Innocent Prisoners** | **- Rs.495.00** |
| 12. | **Brahminists Bombed Muslims Hanged** | **- Rs.350.00** |
| 13. | **Kodikkal- TheLiving Witness of Social Justice** | **- Rs.300.00** |

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002